

கல்கி
KALKI
21.6.1959
30 காசு



விலை பெரிய சைஸ் ரூ. 2/19 ந.பைசா, சாதாரண சைஸ் ரூ. 1/12 ந. பைசா; (பிரதேச வரிகள் உள்ளிடாமல்)

நீலநிற ஸர்ப்
உங்கள் துணிகளின் வெள்ளைவெளேரென்ற சலவைக்கு

கற்பனை செய்திருக்க மாட்டீர்கள் அற்புத சலவைப் பவுடராகிய ஸர்ப் போன்று மகத்தான வெண்மை தரும் பவுடர் ஒன்றை!

பார்த்திருக்க மாட்டீர்கள் இது போன்று அற்புத நுரை சொரிக்கும் சாதனம் ஒன்றை! எத்தகைய நீரிலும் வெள்ளமெனச் சொரிந்தெழும் நுரைவளம்!

உணர்ந்திருக்க மாட்டீர்கள் சலவை இவ்வளவு எளிதென்று! சிரமமே கிடையாது; ஊறவிட்டுக் கசக்கி அலசினாலே காரியம் ஆயிற்று!

அடைந்திருக்கவே மாட்டீர்கள் உங்கள் பணத்திற்கு இதுபோன்ற அற்புதமான ஈடு! உங்கள் குடும்பத்தின் சகல துணிகளுக்கும் உகந்தது!

வெள்ளைவெளேரென்ற சலவைக்கு—ஸர்ப்

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

SU. 25-X29 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
Kamala Laxman
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER



மலர் 18 | இதழ் 47

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விகாரி ஆனி 7

சுதந்திரக் கட்சி

"ஏழை நாட்டில் சோஷலிஸம் புகுத்தினுல் ஏழைமையைத்தான் பகிர்ந்து தர வேண்டியதாகும்; தவிர அது ஏழைமை நிலையையே நிரந்தரமாக்கி விடும்." இவ்வாறு சமீபத்தில் ஜவாஹர்லால் நேரு நேபாளத்தில் சொன்னர். இந்தியாவையும் நேபாளத்தையும் - இரண்டு நாடுகளையும் - மனத்தில் கொண்டே இவ்வாறு சொன்னர். ஏழைமையைப் பகிர்ந்தளிக்கும் இன்றைய நிலைமாறி நாட்டில் சுபிட்சம் ஏற்பட்டால்தான், சமமான பங்கிடு இல்லாவிட்டாலும் நியாயமான பங்கீடாவது செய்ய முடியும். இதை ஜவாஹர்லால் நேரு ஒப்புக் கொள்கிறர். ஆகவே, செல்வத்தைப் பெருக்குவதுதான் இன்றைய முதல் பிரச்னை, அதிலும் தான்யத்தை அதிகரிப்பதுதான் எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது.

சர்க்கார் யோசனைகள் உணவு உற்பத்தியைப் பெருக்குமா என்பதே கேள்வி. பெருக்காது என்று சுதந்திரக் கட்சி திடமாக நம்புகிறது. அதுமட்டுமல்ல; இன்று நிலத்தில் பாடுபட்டு வேலை செய்யும் குடிமக்களை அப்புறப்படுத்தும் திட்டங்களைக் கொண்டு வந்தால், உற்பத்தி பெருகுவதற்குப் பதிலாகப் பெருமளவு குறையும் என்றும் நம்புகிறது. தன்னுடைய நிலம் என்று உரிமை கொண்டாடுபவனே அதிலிருந்து பயிர் எடுப்பதில் உற்சாகமும் ஊக்கமும் கொள்வான். பல பேர்கள் உரிமை கொண்டாடும் போது, அந்த உற்சாகத்துக்கு இடமில்லை, தனி மனிதன் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும், தான் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தில் மிகுந்த அக்கறை காட்டிப் பாடுபடுகிறன்; அதே நிலத்துக்கு உரிமையாளர் ஒருவர் அல்ல, பலபேர் என்றவுடன் யாரும் அக்கறை காட்டுவதில்லை. அதற்குப் பதிலாகச் சர்க்கார் உதவியைக் கொண்டு யாராகிலும் ஒரு உத்தியோகஸ்தரை நியமித்து மேற்பார்வை பார்க்கச் செய்வார்கள்!

"கூட்டுப் பண்ணை" என்பதன் விளைவு, நிலத்தில் வேலைசெய்து பிழைக்கும் உழவர்களுக்கு வேலையில்லாமல் செய்வது என்பதாகத்தான் இருக்கும். வேலையின்றி நிற்கும் உழவர்களுக்கு மாற்றுவேலை கொடுக்கலாம் என்றல் அதற்கு வேண்டிய அளவு தொழில்கள் கிராமங்களிலாவது அவற்றின் பக்கத்திலாவது பெருகவில்லை. கைத்தறி நெசவாளர்களின் தொழிலை அபகரித்துக் கொண்ட நெசவாலைகள், எப்படி நமது கிராம நெசவுத் தொழிலாளர்களை நடுத்தெருவில் அலையச் செய்தனவோ, அப்படிக் கூட்டு விவசாயமும், கிராம உழவர்களின் வேலையைப் பறித்து, வேலையில்லாத் திண்டாட்டப் படுகுழியில் தள்ளும். யந்திரமயமாக்கும் திட்டத்தை நியாயமாகப் புகுத்த வேண்டிய இடத்தில் புகுத்தினுல்கூட மனித உழைப்பைப் பறித்து, அவர்களை வேலையில்லாமற் செய்துவிடும். நம் நாட்டில் ஆலைத் தொழில்கள் மிகக்குறைவு. நம்முடைய பெரிய மக்கட் சமூகத்தை ஏற்றுக்கொண்டு, எல்லாருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும்படியாக இல்லை. எல்லாத்துறையிலும் சமமான தொழில் அபிவிருத்தி ஏற்படவில்லை. போதுமான தொழில் வாய்ப்பு இல்லாத ஒரு நாட்டில் யந்திர மயமாக்கும் திட்டத்தைப் புகுத்தினுல் அது எப்படிப்பட்ட தீங்கை விளைவிக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

விவசாயத் துறையில் சர்க்கார் கடைப்பிடிக்கும் கொள்கைகள் மேலும் மேலும் தவருன விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகத்தான் இருக்கின்றன. சர்க்காரின் போக்கு இவ்வளவு ஆபத்தான நிலைமையை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறதே என்றுதான் சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

நில உரிமையைப் பேணும் சுதந்திரம், தன் குடும்பத்தைத் தான் காப்பாற்றும் சுதந்திரம், தன் நிலத்தில் தான் பாடுபடும் சுதந்திரம், தன் தொழிலைத் தான் நடத்தும் சுதந்திரம் ஆகிய சுதந்திரங்களைக் காப்பாற்றத்தான் சுதந்திரக்கட்சி தோன்றியிருக்கிறது. சோஷலிஸபாணி என்றெல்லாம் பேசுவது வோட்டுகளைப் பெற மக்களை ஏமாற்றும் தந்திரம், அது மேற்கூறிய சுதந்திரங்களைப் பறிக்கச் செய்யப்படும் முயற்சியேயாகும்.

சமுதாயத்தில் எல்லா மக்களுக்கும் நியாயம் வழங்க வேண்டும். எல்லா மக்களும் சுகமாக வாழ வேண்டும். இவை நடைபெற வேண்டும் என்றால் காங்கிரஸ் சர்க்கார் சொல்லிக் கொள்ளும் சோஷலிஸ திட்டம் வழியல்ல. வேறு முறைகளில் அந்த லட்சியங்களை நிச்சயமாகவும் நியாயமாகவும் அடையலாம் என்ற கொள்கையின் பேரிலேயே சுதந்திரக் கட்சி அமைக்கப் பட்டிருக்கிறது. சர்க்கார் பலாத்காரம் என்று வந்து விட்டால் அத்துடன் அநீதி, சொத்துப் பறிமுதல் செய்தல், ஒப்பந்தங்களைத் தூக்கி எறிதல், தங்கள் கட்சியினருக்கும், வேண்டியவர்களுக்கும் சலுகைகள் அளித்தல், சர்க்கார் பொதுப் பணத்தையும் பதவியால் கிடைக்கும் வேலைவாய்ப்புக்களையும் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகிய அக்கிரமங்களும் கூடவே வந்து சேருகின்றன. ஆகவே, மக்கள் க்ஷேமத்தை வளர்ப்பதற்கான ராஜ பாட்டை எதுவெனில், சுதந்திர நாடுகளில் அத்தகைய சமுதாயத்தை அமைத்துக் காட்டியுள்ள வழிதான். அதாவது, எல்லா மக்களும் அவரவர் விரும்பும் தொழிலை மேற்கொள்ள சுதந்திரம் இருக்க வேண்டும்; தனி நபர்களின் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் வளர்த்து, சௌகரியங்களையும் கொடுத்துப் புதுப்புது தொழில்களை ஏற்படுத்தச் சர்க்கார் வாய்ப்புக்கள் அளிக்க வேண்டும். இதுதான் நல்லவழி என்று சந்தேகத்துக்கு இடமின்றி மேல் நாடுகளில் நிரூபணம் செய்யப் பட்டிருக்கிறது.

புதுக் கட்சியை ஆரம்பிப்பதற்கு ஏற்பட்ட உடனடியான காரணம் என்னவெனில், விவசாய மக்கள் மீது காங்கிரஸ் தொடுத்துள்ள போர்தான். "நிலச்சீர் திருத்தம்" செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டு, கூட்டு விவசாய முறைக்கு விரட்டுகிறார்கள். இதனால் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும். பல சொந்தக்காரர்கள் ஏற்பட்டு விட்டால், யாருக்கும் பொறுப்பின்றி விவசாய நிர்வாகத்துக்கு ஒரு உத்தியோகஸ்தரோ, பல உத்தியோகஸ்தர்களோ தேவைப்படுவார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் நடத்தப்படும் விவசாயம் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை!

விவசாயத் துறையில் பலாத்காரப் படுத்துவது கூடாது என்ற பலத்த எதிர்ப்பு எழுந்தது. இப்பொழுது சர்க்கார் வேறு தந்திரங்களைக் கையாளப் பார்க்கிறார்கள். பலாத்காரமில்லை; ஆனால் சொந்தப் பண்ணை வைத்து நடத்தும் தனி நபரை விட, கூட்டுறவுப் பண்ணையில் சேருபவனுக்கு அதிக சலுகைகள் காட்டப்படும் என்று பாரபட்சம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். இப்படிப் பாரபட்சம் காட்டுவதும், பொதுப் பணத்திலிருந்து சலுகைகள் காட்டுவதும், பலாத்காரத்தின் வேறொரு உருவமேயாகும். சர்க்காருக்கு வந்து சேரும் பொதுப் பணத்தைப் பாரபட்சம் காட்டுவதற்குப் பயன்படுத்துவது சற்றும் நியாயமல்ல. அவரவர் தத்தம் தொழில்களைச் சுதந்திரமாக நடத்தலாம்; இதில் பிரஜைகளிடையே ஒருவருக்கொருவர் பாரபட்சம் காட்டப்பட மாட்டாது என்று அரசியல் நிர்ணயச் சட்டம் கூறுகிறது. அந்தச் சட்டம் வழங்கியுள்ள சுதந்திரத்தைப் பறிப்பதாகும்.

ஏதாகிலும் ஒரு தொழில் லாபகரமாக இருக்கும் என்று தோன்றினால் உடனே அரசாங்கம் சுவீகரித்துக் கொள்ளப் பார்க்கிறது. இதன் காரணமாக, அரசாங்க அதிகார வர்க்கம் பெருகிக் கொண்டேயிருக்கிறது. வரிகள் தாங்க முடியாத அளவுக்குப் போட்டாகிவிட்டது. போதாததற்குச் சர்க்கார் தனது திட்டங்களுக்கு வேண்டிய பணத்தைத் திரட்டுவதற்காக, பல வியாபாரங்களையும் தாமே எடுத்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அதன் மூலம் லாபம் சம்பாதிக்கலாம் என்று ரகசியத் திட்டம் இருக்கும் போல் தோன்றுகிறது. வியாபாரத் துறையில் போட்டியிருந்தால் தான் விலைவாசிகள் குறைவாக இருக்கும். வியாபாரம் சர்க்காரின் ஏகபோக உரிமையாகி விட்டால், அது நிர்ணயிக்கும் விலையையே அந்தப் பொருள்களுக்கு மக்கள் கொடுக்க வேண்டும்! அந்த விலைக்குக் குறைந்து வேறு எங்கும் கிடைக்காது. ஆகவே, சர்க்கார் வியாபாரத்தினால் விலைவாசிகள் உயர்ந்து ஏழை மக்கள் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாவார்கள். சமுதாய சேவைக்கென்று சர்க்கார் எவ்வளவோ செலவு செய்கிறார்கள். அதனால் விளையும் பயனோ மிக மிகக் குறைவு.

பொதுமக்கள் நலனுக்காக, தனிநபர்கள் செய்து வந்த சமுதாய நலப் பணிகளும் தர்மங்களும் எவ்வளவோ செட்டாகவும், நல்ல பயன் விளைவிக்கும் முறையிலும் இருந்து வந்தன. இப்படிக் கிடைக்கும் பணத்தையெல்லாம் சர்க்கார் வசூலித்து, அப்பணிகளைத் தாம் செய்யப் போவதாகத் தொடங்கியவுடன் அந்தப் பணம் யாவும் பொது மக்களை ஏமாற்றிக் கட்சி நலனுக்கு உபயோகிக்கத்தான் பயன்படும். தங்களுக்கு வேண்டியவர்களுக்கு உத்தியோகம் தேடித்தரப் பயன்

ஓர் அறிக்கை


புது சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு கொடுக்க விரும்புகிறவர்கள்

சுதந்திரக் கட்சிப் பதிவாளர்

கல்கி காரியாலயம், சென்னை -10

என்ற விலாசத்துக்கு எழுதக் கோருகிறோம். சந்தா ஏதும் அனுப்ப வேண்டியதில்லை. பெயரும், தொழிலும், வயதும், விலாசமும் மற்ற விவரமும் தெளிவாக எழுதி அனுப்பக் கோருகிறோம்.

முன்னேற்றம்தான் முக்கியம்!



சமீபத்தில் திரு தேபர் ராஜாஜியின் ஆசியுடன் தொடங்கியுள்ள சுதந்திரக் கட்சியை மாட்டு வண்டிக்கு ஒப்பிட்டார்!

படும். சர்க்கார் நிர்வாகச் செலவு அதிகரித்துக் கொண்டே போகும். மொத்தத்தில் சர்க்காரின் வரித் திட்டத்திலும் மற்றக் கொள்கைகளிலும் மக்கள் உள்ளத்தில் உள்ள இரக்கம், தர்மம் என்னும் ஊற்றுக் கண்களை அடைத்தாகி விட்டது. சர்க்கார் பொதுப் பணத்தை விரயமாக்கும் ஒரு ஸ்தாபனமாவதில் வெற்றி யடைந்திருக்கிறது. தார்மிக உணர்ச்சிகளைவிட, பொருளுற்பத்தியே முக்கியம் என்று சொல்லி, பொருள் உற்பத்தியு மில்லாமல் அற உணர்ச்சிகளையும் உள்ளத்திலிருந்து துடைத்து எடுத்துவிட்டது. தனிநபர்கள் உற்சாகமாகப் புதுத் தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்றால், 'நாளை என்ன நடக்குமோ ?' என்ற ஒரு பீதி நிலையை நாட்டில் உண்டாக்கி, அவர்கள் உள்ளத்தில் உற்சாகமே இல்லாமற் செய்து விட்டது. ஏழைமக்களின் வாழ்வும், நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்வும் முன்னைவிடம் பன்மடங்கு வாழ முடியாத நிலையை அடைந்து விட்டன. இவைதான் நமது அரசாங்கம் சாதித்த சாதனைகள். தனி மனிதர்கள் ஆரம்பிக்கும் தொழில்களுக்கு ஊக்கமும் தாங்கள்விரும்பும் தொழில்களை நடத்தச் சுதந்திரமும் அளித்தால்தான் எல்லா வர்க்க மக்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் ஏற்படும். இப்பொழுது கிராம மக்களாவது விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். புது நிலச் சீர்திருத்தம் காரணமாக, கிராம விவசாயக் குடிகளும் வேலையின்றிக் கஷ்டப்படுவார்கள்.

நிலத்துக்கு உச்ச வரம்பு கட்டிப் பெறப்படும் உபரி நிலம் நிலமற்றவர்களுக்கு விநியோகம் செய்யும் அளவில் இருக்காது; போதவே போதாது என்பது யாவரும் அறிந்த விஷயம். இந்த உச்ச வரம்பு விஷயத்துடன் இணைந்த விஷயம் நஷ்டஈடு அளிக்கும் விஷயம். இப்பொழுது உச்ச வரம்பு கட்டி எடுத்துக் கொள்ளப்படும் உபரி நிலத்துக்குச் சர்க்கார் கொடுக்கப்போகும் ஈட்டுத் தொகை பெயரளவுக்குத்தான் இருக்கும். ஆகவே சர்க்கார் உச்ச வரம்பு கொண்டு வருவதைக்கிட்டத்தட்ட கொள்ளையடிப்பதற்குச் சமமாகவே கருத வேண்டும். இப்படி எடுத்துக் கொள்ளப்படும் உபரி நிலத்தை வேறு சிலருக்கு விநியோகித்தால் நிலம் துண்டுத் துண்டாகிப் போகும். அப்படி விநியோகிக்காமல், கொள்ளையடித்த நிலங்களை யெல்லாம் சேர்த்துக் கூட்டுறவுப் பண்ணை செய்யப் போவதாகச் சர்க்கார் சொல்லுகிறார்கள்.

இப்படி விவசாயத் துறையிலும் ஒரு நிச்சயமற்ற நிலையும் பீதியும் உண்டாக்கி விட்டார்கள். அதனால் தேச மக்கள் அனைவரும் கூடி, தேச செல்வத்தைப் பெருக்குவதற்கான முயற்சியில் ஈடுபட மறுக்கிறார்கள்.

இவை யெல்லாவற்றையும்விட, சர்க்கார் ஆதரவுடனேயே, சர்க்கார் மேற்பார்வையிலேயே வர்க்க பேதத்தை வளர்த்து, வர்க்கப் போராட்டத்தை வளர்த்து வருவதுபாரத நாட்டின் துர்ப்பாக்கியம்.

இவ்வருஷம் விளைவு பெருகியிருப்பதாக மிகுந்த திருப்தியோடு சொல்லுகிறார்கள். இது இன்றுள்ள விவசாய முறையில் ஏற்பட்டிருக்கிறதே தவிர, கூட்டுறவு விவசாய முறையினால் அல்ல என்பதை மறந்து பேசுகிறார்கள். வெளி நாட்டார் மெச்சுவதற்காகப் போடப்பட்ட திட்டங்கள் நாட்டில் காகிதப் பணப் பெருக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது. அதன் விளைவாக, தாங்க முடியாதவர்களின் தலையில் எல்லாம் பெருந் துன்பத்தைச் சுமத்தியாகிவிட்டது.

சுதந்திரக் கட்சி, யதார்த்த நிலையை உணர்ந்து, அதன் மேலேயே நாட்டின் சுபிட்சத் திட்டத்தை அமைக்கவேண்டும் என்கிறது! நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் திட்டங்களைச் சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது.

பிறர் தயவை நாடாமல், தங்களுக்குத் தாங்களே எஜமானர்களாக இருந்து, சுதந்திர முறையில் விவசாயம் செய்து வாழும் குடிகளின் வாழ்வைக் கெடுக்கக் கூடாது என்ற கொள்கையுடையது சுதந்திரக் கட்சி.

காங்கிரஸில் புகுந்து லாபம் அடிக்க வேண்டும் என்ற உணர்ச்சியும் சுயநலமும் காங்கிரஸ் கட்சியினரின் கருத்து. தார்மிகப் பண்பு அடியோடு அழிந்து விட்டது. 'காங்கிரஸ் மேலிடம்' இந்த அழிவைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறது. இந்த வியாதி சர்க்கார் அதிகார வர்க்கத்தையும் பற்றிக்கொண்டு விட்டது. அவதிப்படும் மக்கள் அதிகார வர்க்கத்தில் புகுந்துள்ள லஞ்சஊழலையும் கையாலாகாத்தனத்தையும், இத் துர்க்குணங்கள் எல்லா முக்கியமான விவகாரங்களையும் பற்றிக் கொண்டு ஆட்டி வைத்துக்கொண் டிருப்பதையும் அழாத குறையாக முறையிடுகிறார்கள்.

தனி மனிதர்களின் உற்சாகத்தினாலும் உழைப்பினாலும் தேசத்தில் சுபிட்ச நிலை ஏற்பட வேண்டும். அதற்கு வேண்டிய சூழ்நிலைகளையும் ஊக்கங்களையும் ஏற்படுத்த வேண்டும். அதுவரை, செல்வந்தர்களை, ஒப்புரவுப் பண்பில் பெருமை கொள்ளச் செய்ய வேண்டும். இப் பண்பு நமது நாட்டுக்கு இயல்பாக வந்துள்ளது. பலப்பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வந்துள்ளது. இந்தப் பண்பையே மகாத்மா காந்தியடிகளும், 'தர்மகர்த்தா' முறையைச் சொல்லும்போது வலியுறுத்தியிருக்கிறார்.

ஜனநாயகத்துக்கு ஆபத்து

கேரளத்தில் நடைபெறும் முறைகள் சரியல்ல. தேர்தலில் நியாய முறையில் எந்தக் கட்சியேனும் வெற்றி பெற்றால் அதை மாற்ற முயற்சிகள் அடுத்த தேர்தலில் நியாய முறையில் நடைபெற வேண்டுமே யொழிய அதற்கிடையில் ஒத்துழையாமையோ, சட்டம் மீறுவதோ முறையல்ல. இதை உணர்ந்தே காங்கிரஸ் மேலிடத்தில் கேரள காங்கிரஸ்காரர் கையாளும் திட்டத்துக்குக் காங்கிரஸ் சார்பில் அனுமதி தரவில்லை.

காங்கிரஸ்காரர்கள் தத்தம் தனி முறையில் அஹிம்சா வழியில் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யலாம் என்று அனுமதி தந்திருப்பதற்கு அர்த்தமில்லை. காங்கிரஸ் செய்யக்கூடாத ஒரு அக்கிரமத்தைத் தனி ஹோதாவில் செய்யலாம் என்று சொல்வது கொஞ்சமும் நியாயமாகாது.

காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு ஒரு நியாயம், அங்கத்தினர்களுக்கு ஒரு நியாயம் என்று வாதாடுவது காங்கிரஸ் கொள்கைக்கு விரோதம். கூழுக்கும் ஆசை — மீசைக்கும் ஆசை என்ற நியாயத்தை வைத்து இம்மாதிரி அனுமதித்திருப்பதாகத் தோன்றுகிறது. ஒரு தேர்தல் முடிந்து மறு தேர்தலுக்கிடையில் தேர்தலின்றிச் சட்ட மறுப்பு முறைகளை யனுசரித்துக் குழப்பம் உண்டாக்குவது. ஹிம்சையே தவிர அஹிம்சையாகாது.

காங்கிரஸே ஒருதீர்மானம் செய்து இந்த முறையை அனுசரித்தால் எவ்வளவு மானக் கேடாகும். கேரளத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் அனைவரும் ஒன்று கூடி அதே காரியத்தைச் செய்தால் அந்தக் குற்றம் எள்ளளவும் குறையாது.

கட்சி உயர்ந்த கொள்கைகளைப் பற்றிப் பேச வேண்டும்; கட்சி அங்கத்தினர்கள் அதற்கு முரணான முறையில் நடந்து கொள்ளலாம் என்ற புது நியதியைத் தான் இன்றையக் கேரள நிலைமையில் பார்க்கிறோம்!

தேர்தல்களின் முடிவுகளை மாற்றுவதற்கு இம்மாதிரிக் குழப்பங்களும் ஒரு வழி என்பதைக் கேரள காங்கிரஸ்காரர் வழிகாட்டி விட்டால் பல கட்சிகளும் குழுவினர்களும் இந்த முறைகளை இனிமேல் தாராளமாக அனுசரிப்பார்கள். லட்சம் வோட்டுப் பெற்று ஒரு தேர்தல் முடிவானாலும் இருபதினாயிரம் பேர்கள் ஒன்று சேர்ந்து குழப்பம் விளைவித்து நிர்வாகம் நடைபெறாமல் செய்து விட முடியும். இதுவல்ல குடியரசின் முறையாவது; கோக்கமாவது.

என்ன சேதி?

ஸ்வராஜ்யா

நேயர்களுக்கு ஒரு நற்செய்தி. திரு காஸா சுப்பா ராவ் அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திவரும் 'ஸ்வராஜ்யா' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை இனி நமது வெளியீடாக மலரும்.

திரு காஸா சுப்பாராவ் அவர்கள் ஆந்திர அன்னை அளித்த அரும் புதல்வர். சிறந்த தேசபக்தர். காந்திமகானின் அறப் போரில் ஈடுபட்டு, தடியடிபட்டு, சிறை சென்றவர். சிறை செல்லாத காலங்களில் பத்திரிகைகளின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுப் பணிபுரிந்து தேசபக்தியை வளர்த்து வந்திருக்கிறார். அரும்பாடுபட்டுப் பெற்ற சுதந்திர இந்தியாவில் தனி மனிதன் சுதந்திரம் பல விதங்களிலும் பறிக்கப்படுகிறது என்றால் வீரர் காஸா சுப்பாராவ் அவர்களின் பேனா எப்படிச் சும்மா இருக்கும்? அவருடைய உணர்ச்சி மிகுந்த கட்டுரைகளையும் ராஜாஜியின் அரிய கட்டுரைகளையும் வாரா வாரம் பல்லாயிரக்கணக்கானவர் வாசித்துப் பயன் அடைய வேண்டும் என்றுதான் ஸ்வராஜ்யா பிரசுரப் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

இனி ஸ்வராஜ்யா பத்திரிகை வேண்டும் அன்பர்கள் நமது கல்கி ஏஜண்டுகளிடம் பெற்றுக் கொள்ளலாம்.

திருவரங்கத் திருப்பணி

சமீபத்தில் திருவரங்கம் பெரிய கோயிலில் எதிர்பாராவிதமாகத் தீ விபத்து ஏற்பட்டது. அது பாரத நாடெங்கும் பக்தர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை விளைவித்தது. அந்த விபத்தின் காரணமாகச் சிறிது சிதிலமடைந்த மூல விக்ரஹத்தின் சில பாகங்கள் வெகு விரைவில் முறைப்படி செப்பனிடப்பட்டு, மஹாஸம்ப்ரோக்ஷண உத்சவம் அடுத்த ஜூலை 12-ந் தேதி நடைபெறுவதற்காக ஏற்பாடுகள் விமரிசையாக நடந்தேறிவருகின்றன என்பதைக் கேட்டுத் தமிழ் மக்கள் மகிழ்ச்சி கொள்வர். இதற்குப் பூர்வாங்கமான நடவடிக்கைகளைச் சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்பாளர் திரு ஏ. உத்தண்டராமன் சில நாட்களுக்கு முன்னரே தொடங்கி வைத்திருக்கிறார். தெய்வ பக்தியும் வழிபாடும் சிறந்தோங்கும் நம் தமிழகத்தில் சமீபத்தில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல ஆலயங்களில் ஏற்பட்ட எதிர்பாரா விபத்துக்களைக் கண்டு மக்கள் பெரிதும் துயருற்றிருக்கின்றனர். ஆலயத் திருப்பணிகள் எவ்வகையிலும் குறைவுறாது முறைப்படி நடந்தேற வேண்டும் என்று எக்காலத்திலும் விரும்பும் தமிழ் மக்கள் இப்புனித நாளாகிய ஜூலை 12-ந் தேதியை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றனர். அன்று நாட்டில் பலபாகங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் திருவரங்கத்து எம்மானைத் தரிசிக்க விரைவர். "இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!" என்று தமிழ்நாட்டு அன்பர்கள் மெய்யுருகுவார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகளையெல்லாம் குறைவின்றிச் செய்ய ஆலய நிர்வாகிகளும், நகர அதிகாரிகளும் மாநில இலாக்கா உயர் அதிகாரிகளும் தயங்க மாட்டார்களென்றே எதிர்பார்க்கலாம்.

லக்ஷ்மி வித்தியாலய அபிவிருத்தி நிதி

சிங்களத்தின் தோட்டத் தொழிலை வளப்படுத்தச் சென்று அந்நாட்டை மேம்பாடுறச் செய்து அங்கேயே நிலைத்து விட்ட கணக்கற்ற தமிழர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வியை வளர்க்க கோட்டன் பிரிட்ஜ் கல்விச் சங்கம் என்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதன் ஆதரவில் கோட்டன் பிரிட்ஜ் லக்ஷ்மி வித்தியாலயம், மாஸ்கெலியா செட்டியப்பா கல்லூரி, கொட்டியாக் கொல்லைக் காமாட்சி வித்தியாலயம் என்று மூன்று பள்ளிகள் சிறப்புடன் பணியாற்றி வருகின்றன. இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் குழந்தைகள் தோட்டத் தொழிலாளிகளின் மக்கள். இப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்து, உயர் படிப்புக்கு இப்பள்ளி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்துப் பாரதத் தாய்நாட்டுக்கு அனுப்பிக் கல்வி கற்க வகை செய்யும் புனிதமான நோக்கத்துடன் இச் சங்கத்தார் 'லக்ஷ்மி வித்தியாலயம் அபிவிருத்தி நிதி' என்று நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். மிகவும் அடக்கமாக ஒரு லக்ஷம் ரூபாய் வசூலித்தால் போதும் என்று லட்சியம் ஏற்படுத்திக் கொண்டு, இத்தொகையைத் தோட்டத் தொழிலாளிகளிட மிருந்தே தலைக்கு ஒரு ரூபாய் வீதம் சேர்த்துவிடத் திட்டமிட்டிருக்கின்றனர் இச்சங்கத்தார்.

அரசாங்கத்தின் ஆதரவின்மையால் பலவித இன்னல்களுக்காளாகியுள்ள இலங்கைத் தமிழர்கள், தங்கள் கையே தங்களுக்குதவி என்று தன்மானத்துடன் தேவையான நிதியைத் தங்களுக்குள்ளாகவே திரட்டிக் கொள்ளும் கண்ணியத்தைக் கண்டு தமிழ் நாடு பெருமை கொள்ளுகிறது. எடுத்ததெற்கெல்லாம் கோடிக்கணக்கில் செலவு செய்யப்படும் இந்தக் காலத்தில் கேவலம் ஒரு லட்சம் ரூபாய் வசூலிப்பதா கஷ்டம்? இப் புனிதமான காரியத்துக்கு இத் தொகை சிரமமில்லாது கிடைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. இந் நற்பணியில் ஈடுபட்டுள்ள கோட்டன் பிரிட்ஜ் கல்விச் சங்கத்தின் லட்சியம் வெகு விரைவில் கைகூட வேண்டும் என்று ஆசி கூறுகிறோம். வாழ்க, கோட்டன் பிரிட்ஜ் கல்விச் சங்கம்!

வவுனியா அளித்த தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 12உ.

இலங்கைப் பார்லிமெண்டில் தமக்கென ஒரு தனி இடத்தைத் தேடிக்கொண்டிருப்பவரும் தமிழ் பேசும் மக்களின் தன் மானத்தைக் காக்கப் பார்லிமெண்டில் சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம் சங்கநாதம் செய்து வந்திருப்பவருமான திரு ஸி. சுந்திரலிங்கம் எம். பி. தமது பார்லிமெண்ட் ஸ்தானத்தைத் துறந்துவிடவும் அரசியல் துறவறம் பூண்டு விடவும் தீர்மானித்திருப்பதாக அறிவித்திருக்கிறார். வவுனியா நகரசபைத் தேர்தலில் அவருக்கு ஏற்பட்ட படுதோல்விதான் அவரது இந்தத் தீர்மானத்துக்குக் காரணமாகும். சென்ற வாரம் வவுனியா பட்டின சபைக்குத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் ஒரு சாதாரண ஸ்தல ஸ்தாபனத் தேர்தலைப் போல் இல்லாமல் அதி முக்கியமான அரசியல் பிரச்னைகளை அடிப்படையாக வைத்து நடைபெற்றது.

தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்து இனி வாழ முடியாதென்ற நிலைமை ஏற்பட்டு விட்டதாயும் தமிழர் மானம் மரியாதையுடன் வாழ வேண்டுமாயின் தனி ராஜ்யம் ஏற்படுத்திக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லையென்றும் சொல்லித் திரு சுந்திரலிங்கம் பட்டின சபையின் மொத்தம் ஆறு வார்டுகளிலே மூன்று வார்டுகளில் அபேட்சகராக நின்றார். அந்த மூன்று வார்டுகளிலும் மக்கள் தம்மை வெற்றி பெறச் செய்யாவிட்டால் தமது கொள்கையை மக்கள் ஆதரிக்கவில்லையெனத் தீர்மானித்து பார்லிமெண்டு ஸ்தானத்தைக் கூடத் துறந்துவிடப் போவதாக அவர் அறிவித்திருந்தார். அதேபோல் தமிழரசுக் கட்சியும் தனது சமஷ்டி ஆட்சி முறைக் கொள்கையை மக்கள் முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டது. தேர்தல் முடிவை அறிய நாட்டு மக்கள் அனைவருமே விசேஷ ஆர்வம் காட்டினார்கள். திரு சுந்திரலிங்கத்தை அவர் அபேட்சகராக நின்ற மூன்று வார்டுகளிலும் வாக்காளர்கள் படுதோல்வியடையச் செய்து தனித் தமிழ் ராஜ்யத்துக்குத் தங்களது கடும் எதிர்ப்பை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொண்டு விட்டார்கள். இரண்டு வார்டுகளில் தமிழரசுக் கட்சி நிர்வாகிகளும் ஒரு வார்டில் சாதாரணத் தமிழரசுக் கட்சி அங்கத்தினரும் மற்ற இரண்டு வார்டுகளில் தமிழரசுக் கட்சி அனுதாபிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆக மொத்தம் ஆறு வார்டுகளிலே ஐந்து ஸ்தானங்கள் தமிழரசுக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களுக்கும் கிடைத்தன. ஆறுவதாகத் தெரிவு செய்யப்பட்டது ஒரு முஸ்லிம் அங்கத்தினர். அவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரல்லவென்றாலும் இத்தொகுதியிலும் திரு சுந்திரலிங்கம் தோல்வியடைந்தது தனித் தமிழ் ராஜ்யக் கோரிக்கையை அந்த வார்டு வாக்காளர்களும் ஆதரிக்கத் தயாரில்லை யென்பதை எடுத்துக் காட்டி விட்டது. இந்தத் தேர்தல் தமிழரசுக் கட்சிக்கு ஒரு மிகப்பெரிய வெற்றியென்று ராஜீய வட்டாரங்கள் வர்ணிக்கின்றன. தேர்தல் முடிவில் திரு சுந்திரலிங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் வவுனியா மக்கள் தங்களது தீர்ப்பைத் தெளிவாக வெளியிட்டு விட்டார்களென்றும் ஆகவே, தாம் தமது பார்லிமெண்டு ஸ்தானத்தைக் காலி செய்வதுடன் அரசியலிலிருந்தும் ஓய்வுபெற்றுக் கொள்ளப் போவதாயும் கூறியிருக்கிறார்.

ஆகாச வெடி

"நாட்டில், விளையாட்டுக்களின் அபிவிருத்திக்காகச் சர்க்கார் இரண்டு கோடி ரூபாய் செலவிடப் போகிறது!"

— இந்தியக் கல்வி மந்திரி

இதை அவர், விளையாட்டுக்காகக் கூறுகிறாரா? அல்லது நிஜமாகவா?

✿

"ஊமைகளைப் பேச வைப்பது சாத்தியம் என்று நிரூபித்து விட்டார் பிரிட்டிஷ் வைத்திய நிபுணர் ஒருவர்." —செய்தி

வைத்தியத்துக்கான 'பில்'லை அளிக்கு முன்னரா, அளித்த பின்னரா என்று கேட்கிறோம்.

✿

"திருட்டு ஆடு ஒன்றைக் கோணியில் போட்டு, சைக்கிளில் கொண்டு சென்ற பேர்வழி போலீஸ்காரரிடம் சிக்கினான்."

—இருப்பத்தூர் செய்தி

பிடிபட்டதும், ஆடு திருடியவனைப் போல் அவன் விழித்திருக்க வேண்டும்.

"அன்று வழக்கறிஞராகத் தொழில் நடத்தியபோது ராஜாஜி மாட்டு வண்டியில் சென்றார். இன்று அவ்வித வண்டியில் செல்வாரா?"

— மாஜி காங்கிரஸ் தலைவர் தேபர்


மாடுகளை எல்லாம்தான் காங்கிரஸில் சேர்த்துக்கொண்டு விட்டார்களே, இனி மாட்டு வண்டியில் எப்படிப் போக முடியும்?

✿

"பாகிஸ்தான் கொள்ளைக்காரர்கள் சில பர்மியர்களைத் தூக்கிக் கொண்டு போய் ஏராளமாகப் பணமும், க்ஷவர பிளேடுகளும் கொடுத்தால்தான் விடுவோம் என்கிறார்கள்."

—செய்தி

தலையை மொட்டை அடிக்க ஏராளமாகப் பணம் கேட்கும்போது பிளேடுகள் வேறேயா?


'ஆஸ்ப்ரோ'வை நம்புங்கள்
அது அபாயமில்லாமல் வலியைப் போக்குகிறது
ஏனெனில்
'ஆஸ்ப்ரோ' மாத்திரைகளில் உலகத்திலேயே மிகப்பிரசித்திபெற்ற ஆனாலும் அபாயமில்லாத வலி நிவாரண மருந்து முழு அளவில் இருக்கிறது.
நிச்சய நிவாரணம்
துரித நிவாரணம்
2 மாத்திரைகள் சாப்பிட்ட சில நிமிடங்களிலேயே 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன
'ஆஸ்ப்ரோ' இதர விதமான கெடுதல்களோ உண்டாக்குவதில்லை. இருதயத்தையும் கெடுக்காது
சாப்பிடும் அளவு
'ஆஸ்ப்ரோ'
தலைவலி • ஜுரம்போன்ற உணர்ச்சி
தொண்டைப்புண் • வலிநோவு • பல்வலி
ஜலதோஷம், ப்ளூ முதலியவைகளுக்கு
நிவாரணம் அளிக்கிறது
ASPRO

A/C/77 TAM





அந்தக் காலத்து விலை மகளிரைப் பற்றி முனிவர் சொல்லுவதை இக் காலத்திலும் கவனித்தல் நலம்.

அன்பின் விழையார்
பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

ஆபரணங்கள் தரித்து இனிய சொற்கள் பேசுவார்கள். அந்த இன் சொல் அப்போதைக்கு மிக இனிது போல் தோன்றும். பிறகு பெருங் கேட்டினைத் தரும். அன்பு செலுத்தி உன்னை அவர்கள் விரும்பவில்லை. நீ தரும் பொருளைத்தான் விரும்புகிறார்கள்.

* * *

விலை மகளிரைத் தழுவிச் சிற்றின்பம் தேடுதலைப் பற்றிப் பயங்கரமான உபமானம் சொல்லி உபதேசிக்கிறார். அந்த உபமானத்தில் செலுத்தியிருக்கும் உண்மையை உணர வேண்டும்.

பொருளை விரும்பி உன்னைச் சேரும் பெண்டிரைத் தழுவுதல் ஒரு இருட்டறையில் யாரோ ஒருவருடைய உயிரற்ற சவத்தைத் தழுவுதல் போலே ஆகும்.

பொருட்பெண்டிர் பொய்ம்மை
முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம் தழீஇ யற்று.

பொய்ம்மை முயக்கம்-கூலிக்குத் தரும் உடலோடு புணர்தல். அன்பில்லாத படியார் உயிரற்ற பிணம் போல்வார்.

* * *

திருவள்ளுவர் காலத்தில் கள்ளும் சாராயமும் அரசனுக்கு வருமானம் தரும் பண்டங்களாக இருக்கவில்லை. அறிவில்லாதவர்கள் கள் குடித்தும் சாராயம் அருந்தியும் தம்மைத் தாம் கெடுத்துக் கொள்ளலாமே ஒழிய, மதுபானத்தை ஒரு வியாபாரமாகவும் பொருள் ஈட்டும் முறையாகவும் அரசாங்கத்துக்கு ஒரு வருமான வழியாகவும் ஏற்படுத்தவில்லை. குடிக்கும் பேதைக்கு 'உன் இஷ்டம்' என்று விடப்பட்டிருந்தது. அதனால் மற்றவர்களுக்கு லாபம் பெறும் வழிகள் உண்டாகவில்லை. வியாபாரத்தினால் உண்டாகும் லாபமானது அந்த லாபத்தைப் பெருக்கத் தூண்டும். அது மேன்மேலும் மக்களை மயக்கக் குழியில் தள்ளும்.

குறளில் மதுபானத்தை வன்மையாகக் கண்டிக்கிறார் முனிவர். கள்ளுண்டு களித்து வழக்கப் பட்டவனைக் காரணங்கள் சொல்லி அந்தப் பழக்கத்திலின்று விடுவிப்பது, நீரில் மூழ்கிய ஒருவனை விளக்கேற்றித் தேடுவது போல் என்கிறார். நீருக்குள் விளக்கு நிற்காது. அணைந்து போகும். முடியாத காரியம். கள் குடித்தவன் மதி அந்த நீரைப் போல். அவனுக்கு விளக்கம் தருவது இயலாத காரியம்.

உடலில் மற்ற உறுப்புக்களின் நோயைத் தீர்க்க வழியுண்டு. நோயாளியின் மதியையே அழிக்கும் பொருள் கள்ளும் சாராயமும். மதியைக் கொண்டே பயன்படச் செய்யும் மருந்தை மதிகெட்டவனுக்குப் பயன் படும்படி செய்ய வழியில்லை. எரியும் விளக்கைக் கொண்டு நீரில் மூழ்கித் தேட முடியாது அதுபோல்.

களித்தானைக் காரணம்
காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

களித்தான்-கள் குடித்து அதனால் உண்டாகும் மயக்கமும் மகிழ்ச்சியும் பழகி விட்டவன். காரணம் காட்டுதல்-அவனுடைய அறிவைக் கொண்டு தன் செயலின் உள்ள நிலையை விளக்குதல்; கீழ் நீர்க் குளித்தான் - நீரில் மூழ்கிப் போனவன். தீத்துரீஇ யற்று-விளக்கைக் கொண்டு தேடுதல் போல்.

* * *

ஆயினும் முனிவர் உபதேசிக்கப் பார்க்கிறார். கள் உண்ணும் ஒருவன் கள் உண்டு போதை அடையாத காலத்தில் அதாவது அறிவு இருக்கும் சமயத்தில் கள் குடித்துப் போதையில் இருக்கும் ஒருவனைப் பார்த்தானுனில் அதன் வெட்கக் கேட்டைக் கண்டு அறிவு அடையலாம். இல்லை, அப்போதும் அறிய மாட்டான்! அறிந்தால் மறுபடியும் கள்ளண்டை போக மாட்டான் அல்லவா ?—என்கிறார்

கள்ளுண்ணாப் போழ்தில்
களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

சோர்வு-மனம்மொழி மெய் மூன்றும் தன் வசம் இல்லாமல் போவது. உள்ளான்கொல்-அப்போதும் உணர மாட்டானோ !

வட்டமேஜை

'சுதந்திரா' கட்சி உதயம்

மதுரைஜில்லா திருமங்கலம் தாலுகா உசிலம்பட்டி பக்கமுள்ள "வாலாந்தூர்" என்னும் கிராமத்தில் சென்னை அரசினர் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்து பரீட்சார்த்தம் செய்தார்கள். அதில் படு தோல்வியடைந்தார்கள். நமது நாட்டுக்குக் கண்டிப்பு முறையில் (அரசினர் ஆதிக்கத்தினல்) கூட்டுறவு விவசாயம் நடைபெருது என்று தெரிந்தும் நேருஜி சொல்கிருர் என்று அந்தத் திட்டத்தைப் பிரசாரம் செய்து வருகிருர்கள். வாலாந்தூரின் பக்கமுள்ள கிராமவாசிகள் கூட்டுறவு முறையில் விவசாயம் எவ்வளவு தூரம் நம்மைப் பாதிக்குமென்பதை நேரில் தெரிந்து கொண்ட விவசாயிகள், 'நம்மையும் இக் கூட்டுறவு விவசாயம் எப்படி ஆட்டி வைக்கப் போகிறதோ? இதைத் தடுப்பதற்கு ஒருவருமில்லையா?' என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் போது, கலங்கரை விளக்குப்போல் விவசாயிகளின் துயர் நீக்க வணக்கத்துக்குரிய நம் தமிழ் நாட்டின் தனிப்பெரும் தலைவர் திரு "ராஜாஜி" அவர்களினல், எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டு வரும் அரசினருக்குப் பாடம் கற்பிப்பதற்காக, "சுதந்திரக் கட்சி" உதயமானதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஏழைகளின் துயர் நீக்கவே தமது வாழ்நாளைச் செலவிட்டு வரும் திரு ராஜாஜி அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கப் பிரார்த்திக்கிறேன்.

விராலநல்லூர்
6—6—59
ராமலக்ஷ்மி சுந்தசாமி

நம் தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர் ராஜாஜி அவர்கள் ஆரம்பித்திருக்கும் "சுதந்திரா" கட்சியை உள்ளன்போடு வரவேற்கிறேன். ராஜாஜி நமக்குச் செய்துள்ள அரும் பணிகள் அளவிட்டுக் கூற முடியாதனவாகும். அவற்றுக்குச் சிகரம் வைத்தாற் போன்றது "சுதந்திரா" கட்சியை உருவாக்கித் தந்தது.

எதிர்க் கட்சி யில்லாத ஜனநாயகம் ஜனநாயகமாகாது. ஆளும் கட்சி அவசரத்தாலோ அறிந்தோ அறியாமலோ செய்யும் பல தவறுகளைத் தக்க தருணத்தில் எடுத்துரைத்து நல்லது செய்வதற்குத் தூண்டுகோலாயிருப்பது எதிர்க் கட்சி ஒன்றுதான். நம் நாட்டிலோ சரியான எதிர்க் கட்சிகள் ஒன்று கூடக் கிடையாது. எல்லாம் வகுப்புவாதக் கட்சிகள், கொள்கை யில்லாத குட்டைகள். இத்தருணத்தில் இப் புதுக் கட்சி பிறந்தது நம் பாக்கியம்.

சைதாப்பேட்டை
9—6—59
கே. இராமச்சந்திரன்

ஆசிரியர்களின் அவலநிலை

தற்போது 1959 மார்ச்சுக்குப் பின் உயர்நிலைப் பள்ளியில் மூன்றுண்டு பணியாற்றிய தமிழாசிரியர்களும் பிற உதவியாசிரியர்களும் வழக்கம்போல் எஸ். எஸ். எல். ஸி. பிரைவேட்டாக எழுதக்கூடாது என்ற தடையைச் செகண்டரி போர்டு கொண்டு வந்திருக்கிறது. செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பிரைவேட்டாகத் தமிழ் வித்துவான் பாஸ் பண்ணி முதல் கிரேடு தமிழாசிரியர்களாக மாறி நல்ல ஊதியமும் உயர்நிலையும் அடைகிருர்கள். ஆனல் எஸ். எஸ். எல். ஸி. படிக்காத தமிழாசிரியர்கள் எஸ். எஸ். எல். ஸி. பிரைவேட்டாகத் தேறினல்தான் முதல்கிரேடு தமிழாசிரியராக முடியும். சாதாரணத் தமிழாசிரியருக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 45 தான். ஆனல் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்த முதல் கிரேடு தமிழாசிரியர்களுக்கோ ஆரம்பச் சம்பளம். ரூ- 85. இந்நிலையில் எஸ். எஸ். எல். ஸி. படிக்காத தமிழாசிரியர்கள் பிரைவேட்டாக எஸ். எஸ். எல். ஸி. தேற இருந்த வசதியைச் செகண்டரி போர்டார் தடை செய்தது பெருங் குறையாகும். மேலும் சிறு வயதில் ஏழைமை காரணமாகவோ பிற காரணங்களாலோ பணம் செலவு செய்து எஸ். எஸ். எல். ஸி. படிக்காத தமிழாசிரியர்களின் கதி என்னவது?

சிதம்பரம்
12-5-59
தமிழாசிரியன்

எப்படி இருக்கிறது கதை?

சென்ற 18-5-59ல் திருநெல்வேலியில் சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் அவர்கள் கூட்டுறவு விவசாய சங்கங்களை அமைக்கும் விஷயத்தில் தலைவர் நேரு கொண்டுள்ள அவசரத் தன்மையின் ஆபத்தை எடுத்துரைத்துள்ள செய்தி தினசரிப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது.

"கூட்டுறவுத்தத்துவம் சரியானதுதான். ஆனல் இது பற்றி பண்டித நேரு மிகவும் அவசரப்படுவதாக அவருடைய சமீபப் பேச்சுகள் காட்டுகின்றன. இந்த அவசரக் கெடுபிடி நாட்டுக்கு நன்மையானதல்ல. கூட்டுறவு விவசாயச் சங்கங்களை அமைப்பது எளிது. ஆனல் அதில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்கள் எவ்வித நிர்ப்பந்தமுமின்றித் தங்கள் மனப்பூர்வமான சம்மதத்துடன் சேர வேண்டும். அது மாத்திரம் காணுது. கூட்டுறவுத் தத்துவத்தை அறிந்து தாங்களே அந்தச் சங்கங்களை நடத்த வேண்டும். இல்லாவிட்டால் சங்கங்களின் நிர்வாகம் அதிகாரி

ளின் கையிலோ அல்லது அதிகார மோகமுடைய நபர்களின் கையிலோ போய் விடும். இவ்வித நிலைமை ஏற்பட்டால் அது ஆபத்தாகும். அவர்கள் மக்களை மதிக்காமல் துன்புறுத்துவார்கள். தங்கள் யதேச்சாதிகாரத்தை நடத்துவார்கள். லஞ்சம் முதலிய ஊழல்களும் ஏற்படலாம். ஆகையால் மக்களே கூட்டுறவு விவசாயச் சங்கங்களை அவைகளின் தத்துவங்களைத் தெரிந்து நடத்த முன்வந்தால் அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். இல்லையென்றால் அவைகளால் பயன் இல்லை. ஒரு புது அதிகார வர்க்கம் தான் சிருஷ்டிக்கப்படும். இது சிந்தனை செய்யப்பட வேண்டிய விஷயம்" என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறினார்.

இந்தச் சமயம், தமிழ்நாடு சர்வோதயத் தலைவர் ஸ்ரீ ஜகந்நாதன் பத்து கிராமதான கிராமங்களில் கூட்டுறவு விவசாயச் சங்கங்களை ஆரம்பித்ததாயும், நடைமுறையில் கூட்டுறவு இலாகாவின் மனப்போக்காலும் பிற காரணங்களாலும் பல சிக்கல்கள் ஏற்பட்டதாயும் ஆகையால் கிராம தான கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதைத் தாங்கள் நிறுத்தி வைத்திருப்பதாயும் தகவல் கொடுத்தார்.

ககனம்
22-5-59

கே. பி. புருஷோத்தமன்



மைசூர் ராஜ்ய கவர்னர் ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அமெரிக்காவில் பல நகரங்களில் பிரசங்கங்கள் நிகழ்த்திக் கொண்டு சுற்றுப்பிரயாணம் செய்த போது கொலராடோ ராஜ்யத்தைச் சேர்ந்த டென்வர் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவருக்கு ஒரு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. விருந்தளித்த ப்ராங்க் கெம்ப் என்பவரும், வில்பர் என்பவரும், இந்தியாவில் அமெரிக்க ஸ்தானிகராக இருக்கும் ஸ்ரீ எல்ஸ்வர்த் பங்கருக்கு உறவினரான ஸ்ரீ ஆண்ட்ரே பட்லர், கொலராடோ கவர்னரின் பிரதிநிதியாக அவருடைய சகோதரர் வில்லியம் மேக்நிக்காலஸ் ஆகியோர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

திருவாரூர்த் திருப்பணி

எந்நாட்டவர்க்கும் இறைவனாய தென்னாடுடைய சிவன் தியாகத்தின் உருவமாக எழுந்தருளியுள்ள தனிப்பெரும் மாண்டையும் 'அரும்பெறற் புதல்வனை ஆழியின் இட்டு' முறை செய்த மன்னவன்' வாழ்ந்த ஆரூரின் பெருமையையும் சரித்திர, கல்வெட்டு, வரலாற்று ஆதாரங்களுடன் மே 17-ந் தேதி இதழில் தெளிவாக விளக்கியிருக்கிறது.

தேர் அழகுக்குப் பெயர் பெற்ற ஆரூரில் அவ் விழா பல்லாண்டுகளாக நடைபெறாதது குறித்து வருந்திய தியாகேசனின் பக்தர்களுக்கு உள்ளங் குளிரும் நற்செய்தி. நாத்திகத்தைப் பரப்பக் கழகங்கள் பல இருப்பினும் சைவத்துடன் இரண்டறக் கலந்த தமிழர்கள் இந்த அறப்பணிக்குத் தம்மால் இயன்ற உதவி செய்வது திண்ணம். இசை உலக மும்மணிகள் இருந்தாடும் அழகுடை ஈசன் ஆகியோர் பெயரில் நடைபெறும் இத் திருப்பணிகளால் ஆரூரின் பெருமை நிலைத்து நிற்கும்.

குண்டக்கல்
15-5-59

கே. சுந்தரராமன்

மத்திய சர்க்கார் கவனிக்குமா ?

சமீபத்தில் மத்திய சர்க்கார் 1959-60 சீஸனில் ஆடும் கரும்பின் விலையை மணங்கு 1க்கு 1—44 விதம் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். மேற்படி விலையை அகில இந்திய ரீதியில் நிர்ணயித்திருக்கிறார்கள்.

ராஜ்யத்துக்கு ராஜ்யம் சாகுபடி முறை, எரு வைத்தல், தண்ணீர், சாகுபடிச் செலவு, இவை மாறுபட்டு இருப்பதால் கரும்பின் விலையை அகில இந்திய ரீதியில் நிர்ணயிப்பது சரியில்லை.

தென்னாற்காடு ஜில்லாவில் ஏக்கர் 1க்கு சாகுபடிச் செலவு சுமார் ரூ. 1400 ஆகிறது. கரும்பின் விளைச்சல் ஏக்கர் 1க்கு சராசரி 35 டன்னிலிருந்து 40 டன் வரைதான் ஆகிறது. ஆதலால் கரும்புச் சாகுபடியில் விவசாயிகளுக்கு லாபமில்லாமல் போவதால் உற்பத்தியில் ஊக்கம் குறைவது நிச்சயம்.

ஆகையினால் மத்திய சர்க்கார் உடனடியாகப் புனராலோசனை செய்து கரும்பின் விலையை மணங்கு ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ரூ. 1—75 விதம் மாற்றி அமைக்க முன்வர வேண்டும்.

கடலூர்
3-6-59

ஏ. கே. சீதாராமன்

கல்கி

மாவட்டச் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 200.   இரண்டாவது பரிசு ரூ. 100

★

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும், எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

மூன்றாவது போட்டி

நீலகிரி மாவட்டம்

விதிகள்

1. கதைகள் நீலகிரி மாவட்டத்தின் சூழ்நிலை எல்லா வகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். நீலகிரி மலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், தொழில், வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப் போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக்கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசுபெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துக் 'கல்கி'யில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்கவேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. நீலகிரி மாவட்டப் போட்டிக்கான கதைகள் ஜூலை மாதம் 31-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

9. போட்டி முடிவு ஆகஸ்டு மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், கதைகளின் தலைப்புக்களிலும் "கல்கி நீலகிரி மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு :— நீலகிரி மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி

கலைவாணன்



காந்தன்

பாரதநாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு. "சுதா பக்தி," "தேச பக்தி" என்றெல்லாம் நாடகங்கள் தோன்றி மேடைகளில் தேச பக்திக் கனலை மூட்டின. அயல் நாட்டுத் துணி பகிஷ்காரம், மதுவிலக்குப் பிரசாரம், வெள்ளையர் ஆட்சி எதிர்ப்பு இப்படிப் பல விஷயங்கள் நாடக மேடைகளில் அடிபட்டன. "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?" என்று மேடையில் பாடினால் பிரமாதமான வரவேற்பு இருந்தது.

ஆனால், சுதந்திரம் வந்த பிறகு, அதாவது சுதந்திர தாகம் தணிந்த பிறகு, மேலே கூறிய விஷயங்களுக்கெல்லாம் மேடையில் ஆதரவே இல்லை.

சுதந்திரத்தைப் பற்றி வீராவேசத்துடன் பேசி, வீறு கொண்டெழுந்து சிறை புகுந்து சிரமப்பட்ட காலம் இப்பொழுது அடியோடு மாறிவிட்டது. இப்பொழுது நம் நாட்டில் நடப்பது மக்கள் ஆட்சி. அதில் நம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. வெறும் பேச்சில் காலங் கழிப்பதை விட உருப்படியான செயலில் ஈடுபட்டு நாட்டுக்கு உகந்ததை அவரவர்களும் செய்ய வேண்டிய தருணம் இது.

அதேபோல் திரை உலகமும் வெகுதூரம் முன்னேறி விட்டது. புராணப் படங்களாக வந்து குவிந்து கொண்டிருந்த காலம் போய், நல்ல சமூக சித்திரங்கள் வெளிவரத் தொடங்கி அதில் ஓரளவு வெற்றியும் கிட்டியிருக்கிறது. இனிமேல் படாதிபதிகள் கூடிய வரையில் படங்களில் புதுமையான கருத்துகளைப் புகுத்த முயல வேண்டும்.

பனிக் காலத்தில் யாராவது விசிறி வாங்குவார்களா? வேனிற்காலம் முடிந்து விட்டால் இளநீர் ஏராளமாக விலை போகுமா? இவைகளை யெல்லாம் ஒரு வியாபாரி சிந்தித்துப் பார்க்க வேண்டுமல்லவா?

உளுத்துப் போன பழைய விஷயங்களை வைத்துக் கொண்டு படமாக்க முயன்றால், அதைப் பார்ப்பவர்கள் ரசிப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?

சாரதா பிலிம்ஸாரின் தயாரிப்பான "கலைவாணன்" பல்லாண்டுகளுக்கு முன்பு வந்திருக்க வேண்டிய படம்.

"கலைஞர்கள் தனிப் பிறவிகள். சமுதாயக் கட்டுப்பாடு, ஆசார சிலங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். ஆனால் அவர்களைக் கட்டுப்படுத்தும் சக்தி ஒன்று இருக்கிறது. அதுதான் காதல்! காதலும் கலையும் இணையும் போது அங்கே இன்ப இலக்கியமே உருவாகி விடுகிறது"

இதுதான் "கலைவாணன்" படத்தின் கருத்து. ஆனால் படத்தில் ஏராளமான பழையவிஷயங்கள் சேர்ந்து கொண்டு பழி வாங்குகின்றன. இந்த மாதிரி படங்களைத் தயாரிக்கும் துணிவு நம் படாதிபதிகளுக்கு இருப்பது நம் துரதிர்ஷ்டம்தான்.

காசிநாத் ஒரு கலைவாணன். இன்னிசை பாடி, இசைக் கலைக்குப் பெருமை ஈந்தான் விசுவநாதன் அவன் அண்ணன். பார்வதி அவனது அண்ணி. அன்னையினும் மேலாக அவனை எடுத்து வளர்த்தவள். ஏகம்பவாணர் என்ற கலைஞரின் குருகுலத்திலே இசை பயின்று வந்தான். நாடோடி நாடகக் குழுவைச் சேர்ந்த மாலாவை வென்று, அவளிடம் தன் மனத்தைப் பறிகொடுத்துத் தவிக்கிறான் காசிநாத். சாதியும் மதமும் குறுக்கிட்டு அவன் காதலை அழிக்க முயல்கின்றன. காசிநாத் அவைகளையெல்லாம் எதிர்த்து, அவளை மணந்து கொண்டு அவளுடன் வெளியேறுகிறான்.

ஹரிஜனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமை, சாதி, குலப்பெருமை, அவற்றினால் ஏற்படும் அறியாமை யாவும் படத்தில் அளவுக்கு மீறியே இடம் பெற்றிருக்கின்றன.

மேற்படி கொடுமைகளை யெல்லாம் நான் சிறிதும் ஆதரிக்கவில்லை. ஆகவே, அவைகளைக் கண்டிக்கக் கூடாதென்று கூறவும் இல்லை. ஆனால் ஏற்கெனவே பன்முறையும் நாடகமேடைகளிலும், பிரசங்க மேடைகளிலும் சாதிக் கொடுமைகள் அலுத்துப் போகும் அளவுக்கு அலசப்பட்டு விட்டன. அவற்றையே குறிக்கோளாகக் கொண்ட கதையைப் படமாக்குவதில் என்ன பிரயோசனம்? அதே கருத்துக்களை நயமாகவும் புதுமையாகவும் புகுத்த முயற்சி எடுக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து.

இந்தப் படத்தில் வரும் சம்பவங்களைப் பார்க்கும்போது வெடித்த பட்டாசுகளை மீண்டும் பொறுக்கியெடுத்து வைத்துக் கொண்டு வெடிக்க முயலுவது போல் தோன்றியது. அவ்வளவும் பழைய விஷயங்கள்.

கலைவாணன் காசிநாத்தாக ஏ. நாகேசுவர ராவ் நடிக்கிறார். நடிக்கிறார் என்று சொல்லுவதை விடப் பாடுகிறார் என்று சொல்லுவது பொருத்தமாயிருக்கும். பாடல்களுக்கெல்லாம் பின்னணிப் பாட

ர்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள். நடிப்புக்கு அதிக சந்தர்ப்பம் இல்லை. கடைசியில் அண்ணியின் காலில் விழுந்து கதறும்போது காகேசுவரராவ் உருக்கமாக நடித்திருக்கிறார். அவர் நடிக்கும் பல கூத்துக்களில் ''சந்தனு — மச்சகந்தி'' நாடகம் நன்றாயிருக்கிறது. அந்த நாடகத்துக்கு மருதகாசியின் பாடல் பலே ஜோர்!

சங்கீத குருகுலத்தின் போதகராக நாகையா வருகிறார். சாதி, குலம், வித்தை இவற்றின் அகங்காரத்தை அவர் நடிப்பின் முற்பகுதியில் நன்கு காண முடிகிறது. பிற்பகுதியில் அவர் சமரஸ மனப்பான்மை பெற்று மாறுதலடைந்து விடுகிறார். இரண்டு பகுதிகளிலும் அவர் நடிப்பு சிறந்து விளங்குகிறது.

காமெடிக் கலைஞர்கள் குழுவில் கூத்திடைக் கோமாளிகளாகத் தங்கவேலுவும் சாரங்கபாணியும் பங்கெடுத்துக் கொண்டு அமர்க்களம் செய்கிறார்கள். தங்கவேலுவின் ஹாஸ்யப் பேச்சும் நடிப்பும் நன்றாயிருக்கின்றன.


ராஜகாந்தம் அமிர்தமாக வரும் ராஜசுலோசனாவின் நடிப்பில் விசேஷமாகச் சொல்ல எதுவும் இல்லாவிட்டாலும், குறைகூற எதுவும் இல்லை. அவர் நடனங்களும் நன்றாயிருக்கின்றன. கலைவாணனுக்குத் தன் மாளிகையில் உற்சாகமான வரவேற்பளித்து, கவர்ச்சியூட்டும் விதத்தில் குழைந்து பேசிய போது ராஜசுலோசனாவின் நடிப்பு மிகவும் நன்றாயிருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் கொஞ்சம் விடுபட்டுப் போன மாதிரி தோன்றுகிறது. அதாவது தொடர்பு அறுந்தது போல் காணுகிறது.

''கலைவாண''னில் நன்றாய் நடித்திருப்பவர்களில் எஸ். வி. சகஸ்ரநாமம் ஒருவர். காசிநாத்தின் அண்ணன் விசுவநாத சாஸ்திரியாக வந்து மிக மிக நன்றாக நடித்திருக்கிறார். தம்பியின் சமரஸ மனப்பான்மையைக் கண்டு விசுவநாதசாஸ்திரி தம் மனைவியிடம் சீறும்போது உணர்ச்சி பொங்கி வருகிறது. அந்தச் சமயம் சகஸ்ரநாமத்தின் நடிப்பு பாராட்டுக்குரியதாயிருக்கிறது.


''கலைவாணன்'' படத்தில் நடிப்பின் சிகரமாகக் கூறக்கூடிய பெருமை காசிநாத்தின் அண்ணி பார்வதியாக வந்து அபாரமாக நடித்திருக்கும் சாந்தகுமாரிக்கே உரியது. கடைசியில் காசிநாத்தைச் சந்தித்து அவனைத் திருத்த முயலும் கட்டத்திலும், கணவனால் வெறுத்துத் துரத்தப்பட்ட போதும் அவர் நடிப்பு நன்கு சோபித்திருக்கிறது. அவர் சோகத்தோடு விம்மிக் கண்ணீர் பெருக்கியபோது அது சினிமாக் கண்ணீராகத் தோன்றவில்லை; உண்மையான துயரத்தினால் பெருகும் கண்ணீராகத் தோன்றியது.

மாலாவாக அஞ்சலிதேவி வருகிறார். ஆடிப்பாடி அருமையாக நடித்திருக்கிறார். அவரைப் பற்றி விசேஷமாகச் சொல்ல ஒன்றும் இல்லை. அவர் எந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்தாலும் வெற்றி பெற்று விடுவார்.


இந்தப் படத்துக்கு ஸ்ரீதர் அமைத்திருக்கும் வசனம் நன்றாகவே இருக்கிறது.



சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான ''ராம் ஜோஷி'' என்னும் ஹிந்திப் படத்தின் வாடை வீசுகிறது, இப்படத்தில். ஆனால் அதன் தரம் இதில் இல்லை.



ஒரிஸ்ஸா கவர்ன்மெண்ட் டிபுடி செக்ரடரியா யிருந்து ரிட்டயர் ஆன வடுவூர் கே. ராஜகோபாலய்யங்கார் அவர்களுடைய ஷஷ்டிஅப்த பூர்த்தி மஹோத்ஸவம் 8-6-59 அன்று வில்லிவாக்கத்தில் விமரிசையாக நடந்தேறியது.



சௌ. மீனாக்ஷி — சிர. சங்கரன் B. A.

விவாஹம்

*

மதுரை "காலேஜ் ஹவுஸ்" உரிமையாளர் ஸ்ரீ என். வெங்கடேஸ்வரய்யரது புதல்வி சௌ. மீனாக்ஷிக்கும், கீழ் ஆம்பூர் ஸ்ரீ எஸ். அய்யா அய்யரது புதல்வனும், சிங்கப்பூர் மினிஸ்ட்ரி ஆப் எஜுகேஷனில் பணியாற்றி வருபவருமான சிரஞ்சீவி ஏ. சங்கரன் பி.ஏ.க்கும் 25-5-59-ந் தேதி மதுரை "காலேஜ் ஹவுஸ்" கட்டிடத்தில் விவாஹம் சிறப்பாக நடைபெற்றது. உள்ளூர், வெளியூர் பிரமுகர்கள் இளம் தம்பதிகளை ஆசீர்வதித்ததன்னியில், மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் மந்திரிகள் உத்தியோகஸ்தர்கள், அரசியல் தலைவர்கள் தொழில், வர்த்தக பிரமுகர்கள் உள்பட பலரிடமிருந்து வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன. கணக்கற்ற சன்மானங்களும் இளம் தம்பதிகளுக்கு வழங்கப்பட்டன.

வாழ்க, மணமக்கள்: சௌ. மீனாக்ஷி-சிர. சங்கரன்

கண்ணனிடம் சென்று விட்டுத் தங்கள் மனைவிமார் திரும்பியதும், கண்ணனுக்கும் பலராமனுக்கும் தாங்கள் அபசாரம் செய்து விட்டோம் என்ற வருத்தம் அந்தணர் உள்ளத்தில் எழுந்தது. தம் மனைவியருக்குப் பரமனிடத்தி லிருக்கும் அன்பு தங்களுக்கு வரவில்லையே என்று தம்மை நொந்து கொண்டனர். பக்தியின்றிக் கர்மத்தைச் செய்து பயனில்லையென்று அறிந்தனர். மாயாவி யான கண்ணன் தங்களை மன்னிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். ஆயினும் கம்ஸன் தங்களை என்ன செய்து விடுவானோ வென்று பயந்து அவ் வந்தணர் கண்ணனிடம் நேராகச் செல்ல வில்லை.

இதனிடையே கோகுலத்தில் எல்லோரும் இந்திரனுக்குத் திருவிழாக் கொண்டாட ஏற்பாடுகள்செய்தனர். கண்ணன் இதை அறியாமல் இல்லை, இருப்பினும் பெரியோரை அணுகி, "தந்தையே! இத்தப் பரபரப்புக்கு என்ன காரணம்? இதன் பயன் என்ன? இது யார்



பாகவதமாகிய
பக்தி வயல்

பௌராணிகர்

பொருட்டு?" என்று வினவினன். அதற்கு நந்தன், "மழைக்கு மன்னவனான இந்திரனுக்குத் திருவிழா கொண்டாடவே இந்த முயற்சி எல்லாம். மேகங்கள் இந்திரனுடைய பல்வேறு தோற்றங்கள். மாந்தருக்கு வேண்டிய மழையை அவை பொழிகின்றன. அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் அடையவே, இந்திரன் பெய்த மழையினால் விளையும் பொருள்களைக் கொண்டு இந்திரனுக்கே பூசை போடுகிறோம். அப்பொழுது பயிர்கள் நன்றாக விளையும்" என்றார்.

இந்திரனுடைய செருக்கை அடக்க வேண்டுமென்று கண்ணன் மனம் துணிந்தான். நந்தனுக்குத் தத்துவங்களை எடுத்துரைத்தான். செயற்பயனால் பிறவி ஏற்படுகிறது. செய்யாதவனுக்குப் பயன் அளிக்க ஈசன் இல்லை. இந்த விதியை மாற்ற இந்திரனால் முடியுமா? தங்கள் தன்மையைப் பற்றி அவரவர் நடக்கின்றனர். தன்மைக்கு மனிதன் அடிமை. செயற்பயனே நண்பனாகவும், பகைவனாக வும், ஈசனாகவும் தோன்றுகிறது. கர்மத்தையே வழிபடுவோம். தம் குலத்தின் அறநடத்தையைப் புரிய வேண்டும். நம் குலத்தோருக்கு ஆனினமே செல்வம். கானகமே நமக்குக் குடியிருப்பு. மலையே மாடுகளுக்கு மேயும் பூமி. ஆகவே பசுவுக்கும் மறையோதும் அந்தணருக்கும் இந்தக் கோவர்த்தன மலைக்கும் பூசை செய்வோம். இந்திரனுக்கென்று சேமித்து வைத்திருக்கும் சாமான்களே இதற்குப் போதுமானவை. அன்னமும் பாயஸமும் அப்பமும் வடையும் சமையுங்கள். பாலைச் சேகரம் செய்யுங்கள். அக்கினி வளர்க்கப் படட்டும். சமைத்த அன்னத்தை நாய் உள்பட எல்லா ஜந்துக்களுக்கும் பகிர்ந்து அளியுங்கள். மலைக்கு நிவேதனம் செய்யுங்கள். நீராடி நல்லாடை உடுத்து ஆனினத்தையும் அக்னியையும் அந்தணரையும், கோவர்த்தனகிரியையும் வலம் வாருங்கள்" என்றான்.

கண்ணன் கூறியதை நந்தன் முதலாக அனைவரும் ஆமோதித்தனர். அவன் சொன்னபடி நடந்து கொண்டனர். இந்திரனுக்கென்று செய்திருந்த நிவேதனங்களைக் கோவர்த்தன மலைக்கு இட்டனர். வண்டிகளிலே ஆடவரும் பெண்டிரும் மலையை வலம் வந்தனர். வேறு வேடம் பூண்டு "நானே கோவர்த்தனமலை" என்று உரைத்துக் கண்ணன் அவர்கள் அளித்த பலியை ஏற்றுக் கொண்டான். பிறகு தன்னுருவை எடுத்துத் தானும் மற்றவர்களோடு மலைக்குப் பூஜை செய்தான். "பார்த்தீர்களா! இந்த மலை என்ற தேவதை தன்னை அண்டினவருக்கு உதவியும் தன்னைக் கவனியாதவருக்குத் தீமையும் கொடுக்கிறது" என்றான். வழிபாடு முடிந்து எல்லோரும் வீடுதிரும்பினார்கள்.

தனக்கு ஆயர்பாடி மக்கள் பூஜை போடவில்லை என்று அறிந்த இந்திரன் சினம் கொண்டு சீறினன். மேகங்களைக் கூப்பிட்டான். "கண்ணனை நம்பின இடையருக்குத்தான் என்ன செருக்கு?

கண்ணன் யார்? பேசசு மிகுந்து பெருமை கொண்ட பாமரன். இந்தக் கோபர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும். அவர்கள் செல்வத்தைச் சிதறடிப்போம். ஆயர்பாடியை அழிப்போம். புயல் காற்றை ஏவுகிறேன். யானை மீதேறி நானும் தொடருகிறேன்'' என்றான்.

இவ்விதம் கட்டளையிடப் பட்ட மேகங்கள் இடைவிடாது மழையாகப் பொழிய ஆரம்பித்தன. இடியும் மின்னலும் புயலும் கலந்து பெருமழை பெய்தது. நாடெல்லாம் நீராகி இடம் தெரியாமல் போயிற்று. கோபர்கள் மழையால் நனைந்து குளிரால் நடுங்கிப் பரிதவித்துக் கண்ணனிடம் சென்று சரண்புகுந்தனர். இது இந்திரனுடைய செயலென்று கண்ணன் அறிந்தான். தன்னை அண்டினவரைக் காக்கத் துணிந்தான்.

சிறு குழந்தை குடையைப் பிடுங்கி எடுப்பது போல் ஒரு கையால் கோவர்த்தன மலையைக் கண்ணன் தூக்கினான். ''மலையடியில் வந்து எல்லோரும் ஒதுங்குங்கள்'' என்று கூறினான். பசுவும், கன்றும், ஆணும் பெண்ணும் மலையின் கீழ் சென்று நிம்மதியாக இருந்தனர்.

கண்ணன் ஏழு நாள் மலையைத் தாங்கி நின்றான். அவ்வேழு நாட்களும் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. இந்திரன் என்ன செய்வதென்று தெரியாது திகைத்தான். தன் மேகங்களை நிறுத்தும்படி உத்தரவு செய்தான். அவனுடைய தற்பெருமை அடங்கியது. கோபர்கள் வீடு திரும்பினர். கண்ணனும் மலையைக் கீழே வைத்தான்.

கண்ணனுடைய மாயச் செயல்களைக் கண்டு ஆயர்பாடி மக்கள் ஆச்சரியப் பட்டனர். ''ஏழு வயதுச் சிறுவன் ஒரு மலையை ஏழுநாட்கள் எவ்விதம் தாங்கி நின்றான்? யானை தாமரை மலரைத் தாங்கி நிற்பது போலல்லவா மலையைத் தூக்கி நின்றான்? இவன் செய்த வேறு வீரச் செயல்கள் தான் எத்தனை!'' என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு நந்தனையும் வினவினர். அப்பொழுது நந்தனுக்கு கர்கர் முன்பு கூறிய சொற்கள் நினைவுக்கு வந்தன. ''இச்சிறுவனுக்குப் பல பேர்கள், பல உருவங்கள். அவைகளை நீங்கள் அறிய மாட்டீர்கள்; நான் அறிவேன். இவன் கோகுலத்துக்குச் சந்தோஷத்தைக் கொண்டு வருவான். இவனை நாராயணனுக்குச் சமானமென்று அறிவாய்'' என்று அப்பெரியோர் உரைத்த மொழியை நந்தன் தன் ஆட்களுக்குச் சொன்னான். கோபர்கள் மனம் தெளிந்தனர்.

இந்திரன் கண்ணனிடம் மன்னிப்புக் கேட்கத் தானாகக் கோகுலம் வந்தான். தனிமையில் கண்ணனைக் கண்டான். தாள்தொட்டு வணங்கினான். பலவாறு புகழ்ந்து சரணடைந்தான். ''உனது செருக்கு நீங்கி எனதருள் உனக்கு வழங்கவே இந்தச் சோதனை செய்தேன். அருளைக் கொடுக்கவே முதலில் தண்டனை அளிப்பேன்'' என்றான் கண்ணன்.

• • •

ஒரு நாள், ஏகாதசி தினத்தன்று நந்தன் வழக்கம்போல் யமுனையில் நீராடி விட்டு, விஷ்ணுவைப் பூஜை செய்து அடுத்த நாள் துவாதசியன்று அதிகாலையில் திரும்பவும் நீராடுவதற்கு நதியில் இறங்கினான். வருணனுடைய சேவகனான ஒரு அசுரன் இரவு வேளையில் நீராடியது தவறு என்று கூறி, நந்தனைத் தன் தலைவனான வருணனிடம் தூக்கிச் சென்றான். நந்தன் கரை ஏறாததைக் கண்ட கோபர்கள், 'பலராமா! கண்ணா!" என்று கதறினார்கள். காரணத்தைத் தெரிந்து கொண்ட கண்ணன் வருணனைத் தேடிச் சென்றான். தன்னைத் தேடிக் கண்ணன் வந்தானென்று மகிழ்ந்து வருணன் மாதவனைப் பல காணிக்கைகளுடன் வரவேற்றான். ''இன்றே என் பிறவி பயன் அடைந்தது. கடலுக்கு நாயகனாய்ப் பல ரத்தினங்கள் என்னிடமிருந்தும் இன்றுதான் உண்மையான நிதி எனக்குக் கிடைத்தது. மதியீனனான என் சேவகன் தேவரீருடைய தந்தையை இங்கு தூக்கி வந்திருக்கிறான். அவனுடைய தவறை மன்னித்தருள்வாய். என்னையும் அருள்வாய்'' என்றான்.

தந்தையை அழைத்துக் கொண்டு கண்ணன் ஆயர்பாடி திரும்பினான். வருணனுடைய ஏராள செல்வத்தைக் குறித்தும் வருணன் கண்ணனுக்குச் செய்த மரியாதையைக் குறித்தும் நந்தன் ஆயர்பாடியில் விவரித்தான்.

• •

கண்ணனை அடைய வேண்டுமென்று கோபிகள் காத்யாயனி விரதம் நடத்தினரன்றோ? அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதாகக் கண்ணன் வாக்களித்திருந்தான். அதற்குத் தகுந்த தருணம் வந்தது.

கானகத்தில் மல்லிகை மலர்ந்து நறுமணம் வீசியது. முழுமதி கிழக்கில் உதித்தது. வானம் செங்குழம்பால் பூசியது போல் தோன்றியது. கதிரவனின் கொடுமை தணிந்தது. ஆம்பலுக்கு அன்பனான சந்திரன் தனது அமுத கிரணங்களால் பிருந்தாவனத்தைக் கவர்ந்தான். கண்ணனும் குழலெடுத்து மனத்தைக் கவரும் இன்னிசை ஊதினான்.

கானத்தைக் கேட்டுக் கோபிகள் கானகத்தை நோக்கி விரைந்தனர். ஒவ்



சாந்தா - சிவகுமாரன் எம். ஏ.

சென்னை பிரபல போட்டோ கம்பெனியான ஆர். தாசன் ஸ்டுடியோ உரிமைப் பங்காளர் திரு ஈ. எம். கோபாலசுவாமி முதலியார் அவர்கள் புதல்வி சாந்த குமாரிக்கும் காஞ்சிபுரம் திரு. க. கஜராஜ முதலியார் (ரிட்டயர்ட் போஸ்ட்மாஸ்டர்) புதல்வன் சி. ஜீ. சிவகுமாரனுக்கும் 24-5-59 அன்று சென்னையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. அன்று திருமணத்திற்கு வந்து வாழ்த்தியருளிய அனைவருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




PLAYER'S

வொரு கோபியும் குண்டலமாட ஓடிய பரபரப்பில் மற்றவர் அனைவரும் எங்கு போகின்றனர் என்று கூடக் கவனிக்கவில்லை. பசுவின் பாலைக் கறந்து கொண்டிருந்தவள் பாத்திரத்தைப் பாதியில் வைத்து விட்டுப் பறந்தனள். பாலைக் காய்ச்சிக் கொண்டிருந்தவள் பால் காயு முன்னே வெளியேறினாள். கூழைப் பொங்க வைத்தவள் கூழை மறந்து கண்ணனை நாடினாள். கணவனுக்கு உணவளித்துக் கொண்டிருந்தவள் குழலோசையில் மயங்கி மாதவனைத் தேடினாள். உணவருந்திக் கொண்டிருந்தவன் பசியை மறந்து பரமனிடம் சென்றான். மேனிக்குக் களபம் பூசிக் கொண்டிருந்தவர்களும் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தவர்களும், கண்ணுக்கு மை தீட்டிக் கொண் டிருந்தவர்களும் தம்மை மறந்து தாமோதரனை நோக்கிச் சென்றனர். சிலர் ஆடை ஆபரணங்களை அலங்கோலமாகத் தரித்துக் கொண்டு ஓடினர்.


சில கோபிகள் வீட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டனர். வெளியேற முடியாமல் அவர்கள் கண்ணனை மனத்திலே தியானம் செய்தார்கள். அந்த உண்மையான தியானத்தில் அவர் செய்த பாபம், புண்ணியம் இரண்டும்அழிந்துபோயின. காதலன் என்ற எண்ணத்திலே கண்ணனை நினைத்ததுமே முக்குணங்களால் ஆகிய இவ்வுடலை விட்டு முக்தியை அடைந்தனர்.



இதுவரை கண்ணன் கதையைக் கவனித்துக் கேட்டு வந்த பரீக்ஷித்து மன்னனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. ''முனிவரே! கோபிகள் கண்ணனைக் காதலன் என்று கருதினார்கள். பரமாத்மா என்ற எண்ணத்துடன் அவரைத் தியானிக்கவில்லை. இவ்விதம் எண்ணியவருக்கு எப்படி மோக்ஷம் கிடைத்தது?'' என்று சுகரிடம் கேட்டார். சுகர் அதற்குப் பின் வருமாறு பதில் அளித்தார்.

''பிரகலாதன் கதையை உங்களுக்கு எடுத்துரைக்கு முன், பகை பாராட்டிக் கண்ணனை மனத்தில் எண்ணிய சிசுபாலன் முக்தி அடைந்தான் என்று உரைத்தேன் அன்றோ? அப்படியிருக்க அன்புடன் அணுகியவருக்கு முக்தி கிடைத்ததென்பதில் என்ன விந்தை? மாந்தர் கடைத்தேறவே எங்கும் நிறைந்த பரம்பொருள் கண்ணனாய் அவதாரம் செய்தார். எவ்வெண்ணத்தைக் கொண்டு கண்ணனை எண்ணினாலும் போதுமானது; அவர்கள் கண்ணனோடு கலந்து கொள்வார்கள். மரம் செடிகள்கூடக் கண்ணனுடைய அருளைப் பெற்று முக்தியை அடைந்திருக்கின்றன'' என்று உபதேசம் செய்தார்.

தன்னருகில் வந்த கோபிகளிடம் கண்ணன் மனத்தை மயக்கும் இனிய குரலில் பேசினார். ''மகிமை பெற்ற மங்கையரே! உங்கள் வரவு நல்வரவே! ஏன் இங்கு வந்தீர்கள்? என்னால் ஆவதென்ன? ஆயர்பாடியில் எல்லோரும் சுகம்தானே? விலங்குகள் வெளியேறிப் பயம் தரும் இரவில் நீங்கள் திரியவேண்டாம். சுற்றத்தார் உங்களைத் தேடுவார்கள். அவர்



பம்பாய் - தென்னிந்திய உயர்நிலைப் பள்ளியின் வெள்ளி விழா சமீபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. வெள்ளி விழாவைத் தொடங்கி வைத்த திரு கிருஷ்ண மேனன் ஒரு நீண்ட சொற்பொழிவாற்றினார். விழாவுக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைத் திரு ஏ. வி. ராமலிங்கம் படித்தார். மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்த வெள்ளி விழா பம்பாயில் ஒரு கல்வித் திருவிழாவாகவே நடைபெற்று விட்டது. பள்ளிக்கூட நிர்வாகத்தின் தலைவர் திரு பி. நாராயணசாமி அவர்களையும், ஆறு மாணவர்களோடு தொடங்கிய கல்வி நிலையத்தைப் பிரும்மாண்டமான கட்டடங்களும், ஆயிரக்கணக்கான மாணவர்களும் நிறைந்த பெரிய நிறுவனமாக வளரச் செய்த ஏனைய நிர்வாகிகளையும் எத்தனை பாராட்டினாலும் தகும். பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் திரு பரமேசுவர ஐயரின் சேவையைப் பாராட்டும் வகையில் தங்கக் கடிகாரம் ஒன்று அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கலை வருத்தாதிர்கள். தென்றல் வீசும் யமுனைக் கரையில் பூரணச் சந்திரனை பார்த்தாய் விட்டதல்லவா? ஆகவே, மெல்லிடை மாதர்களே! வீடு திரும்பி உங்கள் கணவருக்குப் பணிவிடை செய்யுங்கள். அழும் குழந்தைகளைக் கவனியுங்கள். காத்திருக்கும் பசுக்களைக் கறவுங்கள். முக்தியை விரும்பும் மாதர் கணவனை விட்டு வரலாகுமா? என்னிடம் அன்புக்கு அண்டியிருக்க வேண்டுமென்பதில்லை. என் புகழ் கேட்டுச் செயல் பாடி மனத்திலே தியானம் செய்தால் போதுமானது'' என்றான்.

இந்தக் கொடிய சொல் கேட்டுக் கோபிகள் வருந்தினர். கண்ணில் தீட்டிய மை கரைந்து மேனியில் விழக் கண்ணீர் சொரிந்து, முகம் குனிந்து, கோவைப் பழம் போன்ற உதடுகள் பெருமூச்சினால் உலரப் புவியைக் கால் நகத்தால் கீறிக் கொண்டு அங்கேயே நின்றனர்.

பிறகு கண்களைத் துடைத்துக்கொண்டு பின்வருமாறு முறையிட்டனர்: ''எங்களிடம் இத்தகைய கல்நெஞ்சம் காண்பிக்கலாகுமா? முற்றிலும் துறந்து உனது பாதமே கதியென்று வந்துள்ளோம். எங்களை ஆட்கொள்வாய். மற்றவருக்குச் செய்ய வேண்டிய தொண்டை நாங்கள் அறிவோம். ஆனால் அனைவருக்கும் உயிரான உனக்குத் தொண்டு செய்தல் எல்லாருக்கும் செய்வதாகும். வேரில் வார்த்த நீரால் மரமெல்லாம் பலம் அடையும். தாமரைக் கண்ணனே! வீட்டில் இருந்த மனம் காட்டுக்கு உன்னிடம் வந்து விட்டது. வேலைகள் செய்யக் கை எழவில்லை. உன் தாளை அடைந்த கால்கள் வேறிடம் நகரவில்லை. கோகுலம் சென்றுதான் என்ன செய்வோம்? இல்லையேல் பிரிவென்ற தீயில் வெந்து முனிவரைப் போல் உன்னையே வந்து அடைவோம்'' என்றனர்.

இவ்விதம் கோபிகள் பரிதவிப்பதைப் பார்த்த கண்ணன் மனம் கசிந்தான். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினான். கோபிகள் நடுவே, மல்லிகைப் புன்முறுவலோடு, நட்சத்திரங்களுக்கு நடுவே சந்திரனென விளங்கினான். கோபிகளும் கண்ணனும் யமுனையின் கரையை அடைந்தார்கள்.

ஆம்பல் மணத்துடன் அங்கு மெல்லிய பூங்காற்று வீசியது. அவ்விடத்தில் கோபிகளும் கண்ணனும் லீலைகள் பல புரிந்தனர். கோபிகளுக்கு ஆனந்தம் பொங்கியது. தங்களுக்கு நிகர் உலகில் யாரும் இல்லை என்று செருக்குற்றனர். இதைக் கண்ணன் கண்டு கொண்டான். அவர்களுடைய தற்பெருமையை அடக்க வேண்டும் என்று எண்ணினான். திடீரென்று அவ்விடத்திலிருந்து மறைந்தான்.



என் குடும்பத்திற்கு என்னால் இனி கஷ்டமே இல்லை
போர்ன்-விடாவுக்கு எனது நன்றி
சென்ற வருஷம் நான் ஒரு பெரிய விபத்துக்குள்ளாகி வெகு நாட்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டேன். நான் வீட்டுக்கு வந்த பின்னும் சக்தியற்று பலஹீனமாக இருந்தேன். குடும்பத்திற்கு என்னால் நேர்ந்த கஷ்டத்தை எண்ணி கவலையுற்றேன். அப்போது தினமும் போர்ன்-விடா அருந்தும்படி எங்கள் டாக்டர் சொன்னார். அப்படியே செய்ய சீக்கிரத்திலேயே அதிக சக்தியையும் வலிமையையும் அடையப் பெற்றேன். போர்ன்-விடா எனக்குப் புத்துயிர் அளித்தது. சக்திக்கும் வலிமைக்கும் தினமும் போர்ன்-விடா அருந்துங்கள்.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
For Strength and Vigour
BOURN-VITA
MADE BY
Cadbury's

கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 11

ஏன் அந்தக் கண்ணீர்?

இப்பொழுது நாம் திருவாளர் தானுவதிப் பிள்ளை அவர்களைப் பற்றிச் சிறிது விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லா விட்டால், தொடர்ந்து அவர் புரியப்போகும் திருவிளையாடல்கள் அஸ்திவாரமற்ற கட்டடமாக, தலையற்ற முண்டமாக, சுவையற்ற விருந்தாக ஆகிவிடும்.

திருவாளர் தானுவதிப் பிள்ளையைப் பற்றித் தெரிந்துகொள்ள நாம் கால் நூற்றாண்டு காலம் பின்னோக்கிச் செல்ல வேண்டும். ஆம், சரியாகக் கால் நூற்றாண்டு காலம்! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்தான் அவர் இந்தக் கேசவபுரியில் திரு அவதாரம் செய்தார்! 'திரு அவதாரம்' என்று நான் கேலியாகக் குறிப்பிடவில்லை, உண்மையிலேயே அவருடைய பிறப்பு, திருமாலின் ராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் அரக்கர் கொடுமையால் அவதியுற்ற தேவர்களாலும் முனிவர்களாலும் எத்தனை ஆவலுடன் எதிர்பார்க்கப் பட்டதோ, அதேபோல் கேசவபுரத்து மானிடர்களால் எதிர்பார்க்கப்பட்டதாகும்.

அக்காலத்தில் (ஏன்? தானுவதியைப் பொறுத்தவரையில் இக்காலத்தில்கூடத் தான்!) கிராம முனிசிப் பதவி என்பது ஓர் அரச பதவிக்கு இணையானதாகக் கிராமாந்திரங்களில் கருதப் பட்டு வந்தது. தாங்கள் அரசருக்கு ஒப்பானவர்கள் என்பதற்கு ஓர் அசைக்க முடியாத சான்றுகூட அவர்கள் கூறுவார்கள். "இந்த உலகில் இரண்டே இரண்டு பதவிகளுக்குத்தாம் வம்சவாரி உரிமை உண்டு. ஒன்று அரச பதவிக்கு; மற்றொன்று எங்கள் பதவிக்கு. வேறு எந்தப் பதவியாக இருந்தாலும் அது அப்பனின் சொத்தாக மகனுக்குக் கிடைத்தே ஆகவேண்டும் என்ற நியதி கிடையாது. ஆகையால் எங்களையும் ஏன் ஒரு குட்டி அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளக் கூடாது!" என்று அவர்கள் வினவுவார்கள்.

அப்படிப்பட்ட பரம்பரையில் உதித்தவர் தானுவதியின் தந்தையான சொக்கலிங்கம் பிள்ளை. அந்தக் காலத்தில் சுதேச சமஸ்தானங்களைச் சேர்ந்த மக்கள் எப்படித் தங்களுக்கு வாய்க்கும் மன்னர் நல்லவராக இருக்க வேண்டும் என்று பிரார்த்திப்பார்களோ, அவ்வாறே கிராமாந்திர மக்களும் தங்களுக்கு வாய்க்கும் கிராம முனிசிப் நல்லவராக இருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்வது வழக்கம். ஏனென்றால் கிராமமுனிசிப் பதவி ஒன்றும் அத்தனை பெரிய பதவியில்லை எனினும், கிராம முனிசிப்புகளுக்குச் சிரசாக்கினை போன்ற பயங்கர அதிகாரங்கள் ஒன்றும் இல்லாதிருந்த போதிலும், அவர்கள் நினைத்தால் கிராம வாசிகள் வாழ்வை மிகச் சுலபமாக நரக வாழ்வாக்க முடிந்தது. ஆகையால்தான் கிராமவாசிகள் அவர்களைக் கண்டு நடுங்கினார்கள்; அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்று இறைவனை வேண்டினார்கள்.

ஆனால் அந்த முறையில் பார்க்கப் போனால் கேசவபுரத்துவாசிகள் சமீப காலம் வரையில் பாக்கியம் செய்தவர்களாகவே இருந்தார்கள். ஏனென்றால் அவ்வூரில் பல தலைமுறைகளாக ஒரு கிராமமுனிசிப்புக்கூடக் கிராம மக்களுக்கு ஒருவிதத் தொல்லையும் அளிக்கவில்லை. ஆனால் சொக்கலிங்கம் பிள்ளையின் காலத்தில் இதர கிராமவாசிகளுக்கு ஏற்படக் கூடிய அந்தக் கவலை இவர்களையும் மெல்லப் பிடிக்க ஆரம்பித்தது. ஏனென்றால் சொக்கலிங்கம் பிள்ளையின் மனைவி அபிராமி நாற்பதாவது வயது



வரையில் வயிறு திறக்கவே இல்லை. அவர் வாரிசின்றி இறந்துவிட்டால் கிராம முனிசீப் பதவி அவருடைய தம்பி இருளப்பனுக்குப் போய்விடும். இருளப்பனோ சொல்லி முடியாத தலைக்கனமும், குறுகிய சுயநல நோக்கும், கொடுமை நிறைந்த உள்ளமும் உடையவன். ஆகையால்தான் அவர்கள், "கடவுளே! அந்தக் கிராதகன் கைக்குக் கிராம முனிசீப் பதவி போய் விட்டால் எங்களை உயிரோடு வதைத்து விடுவானே!" என்று கலங்கினார்கள்.

ஆனால் நல்ல வேளையாக இரண்டொரு வருஷங்களுக்குப் பிறகு யாரும் எதிர்பாராவண்ணம் அபிராமி கருத்தரித்தாள். இப்பொழுது நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள், கேசவபுரத்துவாசிகள் திருவாளர் தாணுவதியின் திரு அவதாரத்தைத் திருமாலின் அவதாரத்தைப் போல் எதிர்பார்த்திருப்பார்களா, மாட்டார்களா?

இவ்வாறு ஊர் முழுவதும் தன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கத் தாணுவதி இந்த மண்ணுலகில் அவதரித்தான். ஆனால் அவன் பிறந்ததும் அவ்வூர்வாசிகள் அடைந்த களிப்பும் நிம்மதியும் ஓராண்டுகூட நீடிக்கவில்லை. தாணுவதிக்கு ஒரு வயது நிரம்புமுன்பே சொக்கலிங்கம் பிள்ளை திடீர் மரணம் அடைந்துவிட்டார்!

சமஸ்தான மன்னர்கள் குடும்பத்திலாவது பட்டத்துக்கு உரியவன் மைனராக இருந்தால் அவன் வயதடையும் வரையில் வேறு யாரையாவது 'ரீஜெண்ட்'டாக நியமித்து விடலாம். ஆனால் கிராம முனிசீப் விஷயத்தில் அப்படிச் செய்து விட முடியாது. அடுத்தபடியாக யாருக்குப் பதவி உரிமை உண்டோ, அவன்தான் மைனர் பையன் வயதடையும் வரையில் கிராம முனிசீப்பாக இருக்க வேண்டும். எனவே எந்த இருளப்பன் கைக்குக் கிராமமுனிசீப் பதவி போய்விடக் கூடாது என்று கேசவபுரத்துக்காரர்கள் பிரார்த்தித்தார்களோ, அவன் கைக்கே அது போய்விட்டது. அடுத்த இருபது ஆண்டு காலம் அவன் அவர்களைச் சக்கையாகக் கசக்கிப் பிழிந்து விட்டான். சரி, அதன் பிறகாவது அவர்களுக்கு விமோசனம் ஏற்பட்டதா என்றால் அதுவும் இல்லை. தாணுவதி வயதடைந்து கிராம முனிசீப் பதவியைச் சிற்றப்பனிடமிருந்து ஏற்றுக் கொண்டபோது, அந்தச் சிற்றப்பனே தேவலாம் என்று சொல்லத்தக்க நிலையில் இருந்தான்!


சொக்கலிங்கம் பிள்ளை மிகவும் நல்லவர். அவரைவிட நல்லவள் அபிராமி. அவர்களால் வளர்க்கப் பட்டிருந்தால் தாணுவதி இப்படி ஆகியிருக்க மாட்டான். ஆனால் கேசவபுரத்துவாசிகளின் போதாதகாலம், அவர்கள் சொக்கலிங்கம் பிள்ளையை இழந்ததோடு நில்லாமல், தாணுவதிக்கு நான்கு வயதாக இருந்த போது—அபிராமியையும் இழந்து விட்டார்கள். அபிராமிக்குச் சகோதர சகோதரிகள், அல்லது பெற்றோர் இருந்திருந்தால் தாணுவதியை வளர்க்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவன் தாய்-தந்தை அற்றவன்; உடன் பிறந்தார் யாரும் அவனுக்குக் கிடையாது. எனவே கிராம முனிசீப் பதவியோடு அடுத்த தலைமுறைக் கிராம முனிசீப்பைத் தயார் செய்யும் வாய்ப்பும் இருளப்பனுக்கே கிட்டியது.

இருளப்பன் தாணுவதியை ஒழுங்காக வளர்ப்பான் என்ற நம்பிக்கை கேசவபுரத்துக்காரர்களுக்குச் சிறிதும் இல்லாதிருந்தது மட்டுமன்று; அவன் அச்சிறுவனை அப்பதவியை ஏற்க உயிரோடு விட்டு வைப்பானா என்றுகூட அவர்கள் ஐயமுற்றனர். அவர்கள் ஐயம் ஆதாரமற்றதாக இருக்கவில்லை. இருளப்பன் தாணுவதியை ஒழித்துக் கட்டிவிட ரகசியமாக எவ்வளவோ முயற்சிகள் செய்யத்தான் செய்தான். ஆனால் அந்தப் பையனின் ஆயுள் கெட்டியாக இருந்ததாலோ, அல்லது பிற்காலத்தில் அவனுடைய சாவு வேறு ஒரு விதத்தில் நிகழ வேண்டியிருந்ததாலோ, தெரியாது. இருளப்பனின் முயற்சிகள் எல்லாவற்றுக்கும் அவன் 'டிமிக்கி' கொடுத்துப் பிழைத்துக் கொண்டான்.

தாணுவதியைத் தீர்த்துக் கட்ட இருளப்பன் கையாண்ட வழிகள் மிகத் தந்திரமானவை; கொடூரமானவை. அவை ஒவ்வொன்றையும் விவரித்து உங்களைக் கலங்கடிக்க விரும்பவில்லை. ஒரே ஒரு சம்பவத்தை மட்டும், அதுவும் அதன் சின்னம் தாணுவதியிடம் இன்றும் நிரந்தரமாகத் தங்கியிருப்பதால், விளக்குகிறேன்.


அது தாணுவதியின் ஆறாவது வயதில் நடந்தது. அவன் படிப்புக்காகத் திண்ணைப் பள்ளி ஒன்றுக்கு அனுப்பப்பட்டிருந்தான். ஆனால் அவனுக்குப் படிப்பு மண்டையில் ஏறவில்லை. ஒழுங்காகப் பள்ளிக்கூடத்துக்கே போக மாட்டான். ஒருநாள் பள்ளி ஆசிரியர் பரமசிவம் இருளப்பனிடம் வந்து தாணுவதி தொடர்ந்து சில நாட்களாகப் பள்ளிக்கே வரவில்லை என்று புகார் செய்தார். அவன் அம்மாதிரி இருந்து, கிராம முனிசீப் பதவியை ஏற்கவே தகுதியற்ற தற்குறியாகிவிட வேண்டும் என்பதுதான் இருளப்பனின் விருப்பமாக இருந்தபோதிலும் ஊரார் ஒப்புவதற்காக அன்று பரமசிவத்தின் முன் தாணுவதியை அடி அடி என்று அடித்து விட்டான்.

அன்றிரவு தாணுவதியைக் காணோமென்று இருளப்பன் வீட்டில் ஒரே பரபரப்பு. தலையாரி, வெட்டியான் எல்லோரும் தலைக்கொரு மூலையாக அவனைத் தேட அனுப்பப்பட்டனர். ஊரிலுள்ள கிணறு-குட்டைகளெல்லாம்



தேடப்பட்டன. ஒருநாள், இரண்டு நாட்களும் ஆகிவிட்டன. தானாவதியைக் காணவே காணோம். ஒன்று அவன் தொலைவான இடம் எங்காவது ஓடிப் போயிருக்க வேண்டும்; அல்லது கண் காணா இடத்தில் உயிரை மாய்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அனைவரும் தீர்மானித்து விட்டனர்.

இந்நிலையில் மூன்றாவது நாள் காலையில் தானாவதி அகப்பட்டு விட்டான் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. அவன் எங்கும் ஓடிப் போகவில்லையாம். இருளப்பனின் வீட்டில், பணம், நகை-நட்டு முதலியன வைப்பதற்காக ஒரு நிலவறை இருந்தது. அங்கே இரண்டு நாட்களாக ஒளிந்து கொண்டிருந்தானாம்!



இது உண்மையாக இருக்கும் என்று வடக்குத் தெருவிலிருந்த கிராம முனிசிப்பின் வீட்டுக்குச் சென்றிருந்தவர்களால் நினைக்க முடியவில்லை. ஏனென்றால் அந்த நிலவறைக் கதவு இரண்டு ஆட்கள் சேர்ந்து தூக்கும் அளவு கனமானது. அதை ஓர் ஆறுவயதுச் சிறுவன் எப்படித் தானாகவே திறந்து மூடி உள்ளே போய்ப் பதுங்கிக் கொள்ள முடியும்?

அவர்களுக்கு அப்படிச் சந்தேகம் ஏற்பட்டதில் தவறே இல்லை. ஏனென்றால் உண்மையில் தானாவதி தானாக அங்கே சென்று ஒளிந்து கொள்ளவில்லை. அவனைத் தீர்த்துக் கட்டுவதற்கு இதை ஓர் இறுதி முயற்சியாக எடுத்துக் கொண்டான் இருளப்பன். ஆசிரியர் பரமசிவத்தின் முன் அவனைச் செம்மையாகப் புடைத்ததோடு நில்லாமல், அவர் வீடு திரும்பிய பிறகு அவனை இந்த நிலவறைக்குள்ளே தள்ளிச் சோறு—தண்ணீரின்றிப் பூட்டிவைத்து விட்டான். அங்கே சுவாசிக்கப் போதிய காற்று வரக்கூட வசதி கிடையாது; வெளிச்சமும் கிடையாது. நிலவறைக் கதவிடுக்கின் வழியே வந்த சிறிதளவு காற்றும் வெளிச்சமுந்தாம். இதற்குள் பையன் தீர்ந்திருப்பான் என்ற எண்ணத்துடன் இருளப்பன் மூன்றாம் நாள் அதிகாலையில் கதவைத் திறந்து உள்ளே இறங்கிப் பார்த்தபோது, அந்தக் காலகண்டன் கொட்டக் கொட்டென விழித்தவாறு பசியினால் சோர்ந்து படுத்திருந்தான்.

இதைப் பார்த்தபோது இருளப்பனுக்கு மலைப்புத் தட்டி விட்டது. இவன் மண்



புழு. கண்டம் கண்டமாக வெட்டினாலும் இவன் உயிர் பிரியாது. இனிமேல் இவனைக் கொல்ல முயற்சி செய்வதெல்லாம் வீண்தான் என்று அவனுக்குத் தோன்றிவிட்டது. ஆனால் இந்த இருட்டறை அடைப்பில் தானாவதி பிழைத்துக் கொண்டு விட்டபோதிலும், அது அவனுக்கு ஓர் ஊனத்தை ஏற்படுத்திவிட்டது. அவனை இருளடித்து விட்டது! அவன் உடல் வளர்ச்சியும் உள்ள வளர்ச்சியும் அதனால் பாதிக்கப்பட்டன. ஆதலால் தான் இன்று இருபத்தைந்து வயதாகியும் அவன் வடிகட்டின அசடாக இருந்தான்; வயதுக்கேற்ற வளர்ச்சியின்றிக் குண்டுக் கத்திரிக்காயாகவும் இருந்தான்.

ஆயினும் இருளடிப்பினால் ஒருவனின் உடல் வளர்ச்சியும் உள்ள வளர்ச்சியுந்தாம் பாதிக்கப்படுமே அன்றி வயதின் முதிர்ச்சி பாதிக்கப்படாதல்லவா? தானாவதி வயதில் வளர்ந்தான். எப்படியோ நான்காவது வகுப்பு வரையில் குப்பை கொட்டிக் 'கைச்சாத்து'ப் போடும் அளவு கல்வியறிவு பெற்றான் திண்ணைப் பள்ளியோடு படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, ஊரிலுள்ள 'விடலை'களோடு சுற்றித் திரிந்தான். கெட்ட பழக்கங்கள் ஒன்று விடாமல் கற்றுக் கொண்டான். ஊர்ப் பெண்களுக்குக் கிலி அளிப்பவனாகவும், ஊர் ஆண்களுக்குக் கசப்பு அளிப்பவனாகவும் தலையெடுத்து, உரிய பிராயத்தில் கிராம முனிசிப் பதவியும் ஏற்றுக் கொண்டான். அந்தத் தேங்காய் மண்டை பிடிக்காத அளவு கர்வமும், தானே மன்மதன், தானே பிருகஸ்பதி என்ற எண்ணமும் கொண்டு ஊரைக் குட்டைப் புழுதி ஆக்கி வந்தான்.

ஊர்க்காரர்கள் பாவம், என்ன செய்வார்கள்? அவர்கள் அவனுடைய தொல்லைகளைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. கூடிய வரையில் அவன் செயல்களுக்கு 'ஆமாம் சாமி' போட்டு, தங்கள் வரையில் அவன் வாலாட்டாமல் பார்த்துக் கொள்ளத்தான் முடிந்தது. ஆனால் அவனுக்கு வயது ஏற ஏற அவர்களையும் ஒரு கவலை பிடித்துக் கொண்டது. அதாவது அடுத்த தலைமுறைக் கிராம முனிசிப்பைப் பற்றிய கவலை. இந்த மன்மதக் குரங்கை எந்தப் பெண்ணும் கண்ணெடுத்தும் காண மாட்டாளென்றாலும், யாராவது ஓர் அநாதை ஏழையைப் பிடித்து அவனுக்கு மாலையிடச் செய்தால்தான் அடுத்த தலைமுறையிலாவது தங்கள் கிராமத்தார் நிம்மதியாக வாழ முடியும் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. ஆம், தானாவதி சந்ததியற்றுப் போய்விட்டால் கிராம முனிசிப் பதவி மீண்டும் இருளப்பன் குடும்பத்துக்கே போய்விடும். அந்தக் கிராதகன் இறந்து விட்டான். ஆனால் அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். மூன்றும் மூன்று கொள்ளிக்கட்டைகள். அவர்கள் தாம் தானாவதியை முழுக்க முழுக்கக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். எப்படியாவது, ஏதாவது ஆபத்தில் மாட்டி அவனை அழித்துவிட்டுத் தங்களில் ஒருவர் கிராம ஆதினத்தைப் பெற்றுவிட வேண்டுமென்று தீவிரமாக முனைந்து வந்தார்கள். ஆகையால் அதற்கு இடமளித்து விடாமல் தானாவதிக்கு ஒரு கால்கட்டைக் கட்டி, ஒரு வாரிசுக்கு வழி ஏற்படுத்திவிட வேண்டுமென்று சிலர் துணிந்தார்கள். அவர்கள் அவன் திருமண விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு, அவனுடைய சொத்து, பதவி ஆகியவற்றை ஆசை காட்டி, எப்படியோ ஒரு சுமாரான அழகுடைய பெண்ணை அவனுக்கு மாலையிட இணங்கச் செய்தார்கள். ஆனால் தானாவதியிடம் அப்பெண்ணைப் பற்றிச் சொன்னபோது அவன் அவளை மணந்து கொள்ள மறுத்து விட்டான். "நான் யாரு? என் தகுதி என்ன? என்னையா அந்த மூளி அலங்காரியைக் கட்டிக்கிடச் சொல்றீங்க?" என்று அவன் கோபத்தோடு இரைந்தான்.

"அது சரிதான் தம்பி. ஆனா உங்களுக்கு வயசு ஆகிக்கிட்டுப் போகுது இல்லையா? காலா காலத்திலே கலியாணம் முடிஞ்சாத்தானே நல்லா இருக்கும்?" என்று அவர்கள் அவனை மேலும் தூண்டிப் பார்த்தனர்.

ஆனால் அவன் அதற்கெல்லாம் மசிந்து விடவில்லை. "வயசு என்னங்க வயசு? நான் என்ன கிழவனாகவா ஆயிட்டேன்? அதுவும் தவிர இந்தத் தானாவதி என்ன 'சச்ச-புச்சா' ஆளா? 'ம்'ன்னு வாயசைச் கட்டேன்னா கிளி கிளியா நூறு பெண்கள் ஐயாவுக்கு மாலை போட 'நான்-நீ'ன்னு அடிபிடி போட்டுக்கிட்டு வந்து நிக்க மாட்டாங்க? என்னங்க முழிக்கிறீங்க? நான் சொல்றது நிசந்தானே?" என்று அவன் கேட்டான்.


வந்திருந்தவர்கள் அனைவரும் வயதும் அநுபவமும் நிறைந்த கிராமத்துப் பிரமுகர்கள். ஆகையால் அவர்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டு, "அப்படியாச்சும் நீங்களே ஒங்களுக்குப் புடிச்ச பொண்ணா ஒருத்தியைப் பார்த்துக் கட்டிக்கிடுங்களேன்" என்று கூறினர்.

"கட்டிக்கிடத்தான் போறேன். பின்னே என்ன ஆயிசு முழுக்க இப்படி ஒத்தைக் கட்டையாகவே நின்னுக் கிட்டிருப்பேன்னு நினைச்சீங்க. ஆனா பாருங்க; நானும் நாலஞ்சு வருசமா எத்தனையோ பொண்ணுங்களைப் பார்த்துக் கிட்டுத்தான் வரேன்; ஒண்ணுகூட ஐயாவுக்கு ஏற்ற சோடியாக அமையலையே......!"

இப்படிப் பேசும் ஒருவனிடம் அவர்கள் என்ன செய்ய முடியும்? 'அவ்வளவுதான் நம் விதி' என்று அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி விட்டனர்.

இது நடந்து கிட்டத்தட்ட ஓராண்டு காலம் ஆகி விட்டது. தானாவதியை மணந்துகொள்ளத் துணியும் அளவு மோசமான நிலையிலிருந்த அந்த ஏழைப் பெண்ணுக்குக்கூட ஒரு கணவன் கிடைத்து விட்டான். ஆனால் தானாவதியின் மனத்துக்கேற்ற காரிகைதான் கிடைக்கவில்லை. அவனும் அழகான





புதுதில்லி சென்ட்ரல் போர்ட் ஆப் ரிவினியூ அங்கத்தினர் திரு கே. எஸ். சுந்தரராஜன் அவர்களின் புதல்வி சௌ. கோதாமணிக்கும் திரு எஸ். சாந்தி ஐ. ஏ. எஸ் அவர்களுக்கும் மே மாதம் 27-ந் தேதி சிறப்பாகத் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும், பிரமுகர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

பெண்கள் கண்களில் படும்போது அவர்கள் மனத்தைக் கவர என்ன என்ன வேலைகளோ செய்துதான் பார்த்தான். ஆனால் அந்த அசட்டுப் பெண்கள் அவனுடைய அருமை பெருமைகளை யெல்லாம் உணரவில்லையே!

இந்த நிலையில் தான் அவன் நேற்று வீணாவைச் சந்திக்க நேரிட்டது. எவரையும் கவரும் எழிலுருவம் படைத்த அவள், பெண் பித்துப் பிடித்து அலைந்த தாணுவதியைக் கவருவதற்குக் கேட்கவா வேண்டும்? ஊர் எல்லையில் அவளை முதல் தடவை பார்த்தபோதே அவன் உள்ளம் அவளிடம் ஒட்டிக்கொண்டு விட்டது. ஆனால் அவள் சுந்தரத்துடன் காரில் வந்து கொண்டிருந்தாள். ஒருகால் பட்டணத்தில் அவனோடு படிப்பவளாக இருக்கலாம். இங்கே இரண்டொரு நாட்கள் தங்கி விட்டுப் போகிறவளாக இருந்தால் தன் மனத்தை அவள் பின்னே அலைய விட்டு என்ன பயன் என்று அப்பொழுது அவன் சும்மா இருந்து விட்டான்.

ஆனால் பிறகு அவள் சச்சிதானந்தத்தின் மகள் என்பது தெரிய வந்த போது அவனுடைய ஆசை மீண்டும் துளிர்த்துக் கொண்டு கிளம்பிற்று. சச்சிதானந்தம் பிள்ளைக்கு ஒரு மகள் உண்டு; அவள் விதவை என்பதை அவன் ஏற்கெனவே அறிவான். அதோடு அவள் உள்ளூரில் டாக்டராகத் தொழில் நடத்தப் போகிறாள் என்ற விவரமும் தெரிந்ததும், 'சரி, இனி நாம் முழுக் கவனத்தையும் இவள் மீதுதான் செலுத்த வேண்டும். வாழ்விழந்தவளாதலால், வேறு ஒரு பயலும் அவளை அடையப் போட்டியிட மாட்டான். அவளை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு, பக்குவமாக நடந்து அவள் மனத்தைக் கவர்ந்துவிட வேண்டும்' என்று அவன் தீர்மானித்துக் கொண்டான். இந்தத் தீர்மானத்தை ஒட்டியே அன்று காலையில் அவன் சச்சிதானந்தம் பிள்ளையின் வீட்டுக்கு வந்தான்.

* * *

ஊஞ்சலில் வலது முழங்கையை ஊன்றியவாறு உள்ளங்கையில் தலையைத் தாங்கி ஒருக்களித்துப் படுத்திருந்த சச்சிதானந்தர், தாணுவதியின் குரல் கேட்டதும் எழுந்து உட்கார்ந்தார். அது அவருடைய வழக்கம். இரவு வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கும் அவர், அதிகாலையில் ஐந்து, ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து படுக்கையைச் சுருட்டி வீட்டுக்குள்ளே கொண்டு வைத்து விட்டுப் பிறகு சிறிது நேரம் இந்த ஊஞ்சலில் அனந்தசயனம் செய்தவாறு ஒரு கோழித் தூக்கம் போடுவார்.

"அடடா! ஒங்க உறக்கத்தையில்லா கெடுத்துட்டேன் போலிருக்கு ஏங்க, நான் சொல்றது நெசந்தானே?" என்று முகத்தில் அசடுவழியச் சிரித்துக்கொண்டு ஊஞ்சலை நெருங்கி வந்தான் தாணுவதி.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. வா தம்பி; இப்படி உட்காரு" என்று சச்சிதானந்தம் ஊஞ்சலைத் தட்டிக்காட்டினார்.

தாணுவதி ஊஞ்சலில் வந்து அமர்ந்தான். அதன் சங்கிலிகள் கிரீச்சிட்டன.

"எங்கே தம்பி, இப்படிப் பொழுது விடியுமுன்னே?" என்று அவர் கேட்டார்.

"சோலி இல்லாம வருவேனுங்களா? டாக்டர் அம்மா எங்கே? அவங்க கிட்டயில்லா சொல்லணும்!" தாணுவதி தனது கோழிமுட்டைக் கண்களைச் சுற்றிலும் உருள விட்டான்.

"வீணா நடை உள்ளிலே உறங்கிக்கிட்டிருக்கா. என்ன விசயம் தம்பி?"

"நேத்து ராத்திரி ஸ்டேசன் பக்கம் போயிருந்தேன். ஸ்டேசன்மாஸ்டர் ஐயா முருகேச முதலியாரைப் பார்த்தேன். ஒங்க மகள் சௌகரியமாக வந்துட்டாங்க என்கிற விசயத்தைக் கேட்டு ரொம்ப சந்தோசப் பட்டுக்கிட்டார். அப்பாலே அம்மாகிட்டே ஒரு விசயமும் சொல்லச் சொன்னாரு."

"என்ன தம்பி, அவங்க வீட்டிலே யாருக்காச்சும் உடல்நிலை சரியில்லையா?"

"பார்த்தீங்களா? டாக்டர் அம்மாவுக்கு அப்பா நான்தான்னு காட்டிட்டீங்களே! அதெல்லாம் அவங்க வீட்டிலே எல்லாரும் சேமமாத்தான் இருக்கிறாங்க. அம்மாவுக்குக் ஆட்சிலே ஏதோ சாமான்கள் வந்து கிடக்குதாம். ரெண்டு நாட்களாச்சுதாம். நேத்து உங்களைப் பார்த்தபோது சொல்ல மறந்துட்டாராம்."

"ஓ! ஆமாம். ஆஸ்பத்திரிக்கான சாமான்கள். அதுக்குள்ளே வந்துடிச்சா? தேவலாமே!"

"ஆஸ்பத்திரிச் சாமான்களா? என்னங்க நீங்க. அதைப் பற்றி எங்கிட்டே முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லியிருக்கப்படாது? தலையாரிப் பயலைப் போய்த் தூக்கிக்கிட்டு வரச் சொல்லியிருப்பேனே."

"நேற்று விஷயம் வந்து சொன்ன பிறகுதான் எனக்கே தெரியும் தம்பி. இருந்தாலும் அவை ஆள் சுமையிலே வருகிற சாமான்கள் இல்லே. வண்டியிலேதான் எடுத்துக்கிட்டு வரணும். ஒரு வண்டிப் பாரம் இருக்குமாம்."

"அது என்னங்க பிரமாதம்? சொல்லுங்க; நம்ம மயிலை ரெண்டும் கொட்டிலிலேதான் நிக்குது. தலையாரிப் பயலை வண்டி கட்டிக்கிட்டுப் போய் எடுத்துக்கிட்டு வரச் சொல்லுகிறேன்."

"உனக்கு ஏன் தம்பி சிரமம்? நம்ம மாடுகளும் சும்மாத்தானே நிக்குது! நான் மாடசாமியைப் போயிட்டு வரச் சொல்லுகிறேன்?" என்றார் சச்சிதானந்தம்.

"என்னங்க சிரமம் இதிலெல்லாம்? அதிலேயும் ஒங்க சோலியிலே. அந்தப் பயல் தலையாரி இங்கே என்ன வெட்டி முறிச்சிட்டா இருக்கான்? இப்படி ஒரு வேலையாச்சும் செய்யட்டுமே. ஏங்க, நான் சொல்றது நிசந்தானே?"

"தானுவதித் தம்பியா? வாங்க தம்பி. சுகந்தானா?" என்று கேட்டவாறு வெள்ளைச் சேலையும், திருநீறு அணிந்த நெற்றியுமாக, சரத் தலையைச் 'சொருக்கு'ப் போட்டுக் கொண்டு அச்சமயம் அடுக்களையிலிருந்து வந்தாள் தைலம்மாள்.

"வணக்கம் அத்தை. என்ன, இப்போ ஒங்களைக் கண்ணிலே காண்கிறதில்லே?" என்று கேட்டான் தானுவதி.

"காணாமல் என்ன தம்பி? எனக்கு இந்த வீட்டை விட்டா வேறு போக்கிடம் ஏது?"

"சரி பேசிக்கிட்டு இரு தம்பி. நான் போய்ப் பல் விளக்கிக்கிட்டு வரேன்" என்று புறப்பட்டார் சச்சிதானந்தம்.

அவர் தலை திரும்பியதும், "என்ன அத்தை, மருமகன் வந்திருக்கிறாப்போலே இருக்குதே!" என்றான் தானுவதி.

கூடத்தைத் தாண்டித் தாழ்வாரத்தில் அடியெடுத்து வைத்த சச்சிதானந்தம் இதைக் கேட்டதும் சட்டென்று நின்று திரும்பினார். "மருமகனின்னு சொல்லாதே தம்பி. 'அக்கானுக்குக் கோபம் வந்துடப் போகுது" என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

"தொடங்கிட்டீங்களா மாமா வேடிக்கை பண்ண? அத்தைக்கு எந்த முறையிலே பார்த்தாலும் டாக்டர் அம்மா மருமகள்தானே மாமா? தம்பி மகள்; மகனைக் கட்டிக்கிட்டவங்க......"

"அது என்னவோ தம்பி. ஆனால் விஷயத்தை மருமகளின்னு யாரு சொன்னாலும் உங்க அத்தைக்குக் கோபம் பொத்துக்கிட்டு வந்துடுது!" என்று சொல்லி விட்டுச் சச்சிதானந்தம் பல் துலக்குவதற்காகத் திரும்பி நடந்தார்.

அவர் கொல்லைக் கிணற்றடிக்குப் போகும்வரையில் பார்த்துக் கொண்டே நின்றாள் தைலம்மாள். பிறகு சொன்னாள்: "பின்னே என்ன தம்பி! மகனை முழுசா வாயிலே போட்டுக்கிட்டவளை அந்த உறவு முறை வைச்சுப் பேசினா என் வயிறு பத்திக்கிட்டு எரியாது?"

"அடடா! இதெல்லாம் என்ன பேச்சு, அத்தை. என்னவோ அவன் தலைவிதி போயிட்டான். அதுக்காக உறவு முறை விட்டா போயிடும்? அதிலேயும் மகன் உசிரோட இருந்து தர வேண்டிய பெருமையையெல்லாம் இப்போ இவங்க தானே டாக்டர் அம்மாவாகி ஒங்களுக்குத் தரப் போறாங்க!"

"அவள் எனக்குப் பெருமை ஒண்ணும் தர வேண்டாம், தம்பி. என்னைச் சிறுமைப்படுத்திடாமல் இருந்தாப் போதும்."

"அத்தை!" தானுவதி ஊஞ்சலில் நிமிர்ந்து உட்கார்ந்தான். "பெரிய குண்டாத் தூக்கிப் போடறீங்களே. சப்பான்காரன் எறிஞ்ச குண்டை விடப் பெரிசா!" அவன் குரல் தாழ்ந்தது. சுற்று முற்றும் ஒரு தடவை பார்த்து விட்டு, "என்ன விசயம், அத்தை?" என்று கேட்டான்.

"விசயம் என்ன தம்பி. விசயம்? தாலி அறுத்த பொண்ணு, தனக்கு அடக்கமா வீட்டிலே குந்தியிருந்து தின்னுக்கிட்டு இருக்குமா? டாக்டராம்! நர்சாம்! எனக்கு என்னவோ அவள் போக்கும், அவள் அப்பன்காரன் போக்கும் சரியாப் படலே. அவ்வளவுதான் தம்பி!"

"நீங்க என்ன அத்தை இன்னும் பழங் காலத்து ஆளா இருக்கிறீங்க! இந்தக்

அருள் வாக்கு

ஒரு மலரிலே எவ்விதம் சுகந்தமானது சேர்ந்திருக்கிறதோ, அமிருதத்திலே சுவை எப்படிக் கலந்திருக்கிறதோ, அம்மாதிரி ஈசுவரனுடைய உருவத்தோடு அம்பிகையின் உருவம் கலந்திருக்கிறது. அக்கினியோடு சேர்ந்திருக்கும்படியான பிரகாசத்தை, அக்கினி வேறு, பிரகாசம் வேறு என்று எப்படிப் பிரிக்க முடியாதோ அவ்விதம் ஈசுவரனையும், அம்பிகையையும் பிரிக்க முடியாது. அம்பிகையும் ஈசுவரனும் அர்த்தநாரீசுவரர் கோலத்தில் சேர்ந்திருக்கிறார்கள். ஒரே சரீரத்தில் ஒரு பாகம் அம்பிகையாகவும், ஒரு பாகம் ஈசுவரனாகவும் சேர்ந்து அவதாரம் செய்து எல்லா ஜீவராசிகளுக்கும் அருள் புரிகின்றனர்.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி [illegible] பீடம்

அகிலன் எழுதும்



வேங்கையின் மைந்தன்



புதிய
சரித்திர
நாவல்
கல்கி
ஜூலை
5உ
இதழில்
ஆரம்பமாகிறது

காலத்திலே இவங்களைப் போற பெண்ணுங்களெல்லாம் கல்யாணம் கட்டிக்கிட்டுக் குடியும் குடித்தனமுமாக இருக்குதாம் பட்டணக் கரைகளிலே...''

'' அது பட்டணக் கரைக்குச் சரிதான் தம்பி. இந்தக் கேசவபுரத்திலே அப்படித் தப்புத் தண்டாவா நடந்துட்டா ஊர்ச் சனங்க சும்மா விட்டுடுவாங்களா ?''

'' ஆங்... ஊர்ச் சனங்களாம், ஊர்ச் சனங்க! இந்தச் சிங்கம் கிராம முனிசிப்பாக இருக்கிற மட்டும் ஒரு பயல் வாய் திறந்து ஒங்க வீட்டு விசயமா ஒண்ணு சொல்லிப் பிழைச்சிடுவானு ?''

'' அதுக்காக நாம் தப்புத் தண்டா நடக்க இடம் கொடுத்துடறதா, தம்பி? ஆசுபத்திரி அது இதுன்னு ஆட்டம் போட்டா, நாலு பேரு வருவாங்க; போவாங்க. அதுவும்தான் நாலு இடத்துக்குப் போகும்; வரும். ஒரு கட்டுக் காபந்தே இல்லாமப் போயிடுமே, தம்பி.''

'' அதைச் சொல்லுங்க, ஒத்துக்கிடறேன். அவங்களுக்குச் சின்ன வயசு. கட்டுக் காபந்து வேண்டியதுதான். ஆனா இதுக்காக நீங்க கவலைப்பட்டுக்கிடாதீங்க, அத்தை. நான்தான் ஒருத்தன் இருக்கேனே !''

'' நீங்க என்ன தம்பி, ஒங்க சோலிகளைக் கவனிப்பீங்களா ? இதுங்கூடச் சுத்திக் காபந்து பண்ணிக்கிட்டு இருப்பீங்களா ? போதாக் குறைக்குப் பொன்னியும் வந்த கதையா, இங்கே ஒரு ஆசுபத்திரியாம்; புங்கனூறு வேலை நடக்கிற இடத்திலே ஒரு ஆசுபத்திரியாம் !''

'' ரெண்டு ஆசுபத்திரியா ?''

'' ஆமாம் தம்பி, ஆமாம். என்னவோ அந்தப் பிள்ளை, நம்ம புஷ்பவனம் தம்பி மகன் சொல்லிடிச்சாம், இவங்களும் சரின்னுட்டாங்க. அதுக்கு என்ன தெரியும், சின்ன வயசுப் பிள்ளை. பெரியவங்களுக்குப் புத்தி வேண்டாம் ?''

'' சரி, சரி. எனக்கு விசயம் புரிஞ்சு போச்சுது அத்தை !'' என்று தாணுவதி தன் தேங்காய் மண்டையைப் பலமாக உருட்டினான். '' சுந்தரத்துக்கு அணையிலே வேலை ஆகியிருக்குதாமில்லே.''

''ஆமாம்; அதனாலேதான் ' அவன் வீணாவைக் கவனிச்சுக்கிடுவான். நீ ஏன் கிடந்து கவலைப்பட்டுக்கிட்டிருக்கே'ன்னு புஷ்பவனம் தம்பியும் இவனுமா என் வாயை மூடிட்டாங்க.''

'' கவனிச்சுக்கிடுவான் அத்தை! நல்லாக் கவனிச்சுக்கிடுவான் ! ரொம்ப நல்லாக் கவனிச்சுக்கிடுவான்!'' தாணுவதி மீண்டும் ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தாழ்ந்த குரலில் தொடர்ந்தான்: '' நேத்து அவங்க காரிலே வந்த ஜோரைப் பார்த்த போதே நெனைச்சேன். இந்தத் தாணுவதிச் சிங்கம் ஒரு புள்ளி வைச்சா அது பிசகிப் போயிடுமா ? எல்லாம் பட்டணத்து நாகரிகம் அத்தை. முத்திக்கிட்டுப் போகுது. காரிலே பின் சீட் காலியா இருக்க, ஒங்க மருமகளும் அவனும் ஜோரா புருசன் பெஞ்சாதி கணக்கிலே முன் சீட்டிலே உட்கார்ந்து வந்ததை நீங்க பார்த்தீங்க இல்லையே !''

''அட! காரிலே பக்கத்திலே உட்கார்ந்து வந்தா என்ன தம்பி. அதெல்லாம் நம்ம சுந்தரம் தங்கமான பிள்ளை. அதைப் பத்தித் தப்பா நினைக்கக் கூடாது.''

'' அத்தை! ஒங்க மனசு இருக்குதே, தங்கமான மனசு, அத்தை! ஆனா இந்த விசயத்திலே மட்டும் எந்த வயசுப் பிள்ளையையும் நம்பிடாதீங்க. நெருப்பையும் பஞ்சையும் நெருக்கி வைச்சா எப்போவானாலும் பத்திக்கிடத்தானே செய்யும்!''

''என்னவோ தம்பி. எனக்கு இவள் இங்கே வந்ததுதொட்டு ஒண்ணுமில்லாட்டா ஒண்ணுக் கவலையாத்தான் இருக்குது.''

'' கவலைப்பட்டுக்கிடாதீங்க, அத்தை. இந்தத் தாணுவதி இருக்கிற வரைக்கும் நீங்க ஒண்ணுக்கும் கவலைப் பட்டுக்கிடக் கூடாது. நான் அவங்க மேலே ஒரு கண்ணு வைச்சுக்கிடறேன். ஆனா அத்தை, நீங்கமட்டும் ஒரு காரியம் செய்யணும்.''

''என்ன செய்யணும், தம்பி?''

''டாக்டர் அம்மாகிட்டே என்னைப் பத்திக் கொஞ்சம் நல்லதனமாச் சொல்லி வைக்கணும். பாருங்க, நேத்து அவங்க முன்னாலே அந்தச் சுந்தரம் என்னைச் சண்டை போடப் பண்ணிட்டான். அவங்க என்ன கண்டாங்க? என்னைச் சண்டைக்காரன்னு நினைச்சுக்கிட்டு இருப்பாங்க.''

'' ஆகட்டும் தம்பி. அதுக்கு என்ன ?''

இந்தச் சமயத்தில் சச்சிதானந்தம் பல் விளக்கிவிட்டுத் திரும்பினார். ஈரக் கையை மேல் துண்டில் துடைத்துக் கொண்டே வந்த அவர் தைலம்மாளிடம், ''என்ன அக்கா, வீணா இன்னுமா எழுந்திருக்கவரலை?'' என்று கேட்டார்.

''பட்டணத்திலே வளர்ந்த பொண்ணு இல்லையா? அவங்களெல்லாம் பொழுது விடிஞ்சதும் எழுந்திரிச்சு வந்துடுவாங்களா? போ, போய் உன் அருமை மகளை எழுப்பி, இது கிராமாந்திரமின்னு சொல்லிட்டு வா.'' தைலம்மாள் மோவாயைத் தோளில் இடித்துக்கொண்டு அடுக்களைக்குச் சென்று விட்டாள்.

''இரு தம்பி. வீணாவை எழுப்பிட்டு வரேன்'' என்று கூறிவிட்டு நடை உள்ளே நோக்கி நடந்தார் சச்சிதானந்தம்.

ஆனால் வீணாதான் எப்பொழுதோ எழுந்து விட்டாளே! அவள் அந்த அறையில் ஒரு நாற்காலியில் அமர்ந்து, எதிரே கிடந்த மேசைமீது கைகளை மடித்து அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தாள். தந்தை உள்ளே வந்ததைக் கூட அவள் கவனிக்கவில்லை.

''என்னம்மா, நீயும் என்னைப்போல் கோழித் தூக்கம் போட்டுக்கிட்டிருக்கிறே!'' என்ற அவர் குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள்.

மகளின் முகத்தைப் பார்த்ததும் சச்சிதானந்தம் அதிர்ந்தார். ஆம், அந்த வண்ண முகத்தில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது ! (தொடரும்)









யார், எங்கே?

இங்கே பத்து தேசத்துக் குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் தாய்நாட்டில் இல்லை. ஒவ்வொரு நாட்டுக் குழந்தையும் வேறொரு நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். எந்த நாட்டுக் குழந்தை எந்த நாட்டுக்குப் போயிருக்கிறார்கள்? குழந்தைகளை அதன் உருவம் உடைகளிலிருந்து அது எந்த நாட்டைச் சேர்ந்த குழந்தை என்பதைக் கண்டு பிடித்து விடலாம். விஜயம் செய்திருக்கும் நாட்டை அந்தக்குழந்தையின் பின்னால் காட்டியுள்ள காட்சிக் குறிப்புகளினால் உணரலாம். யார் எங்கே போயிருக்கிறார்கள் என்பதை இப்போது சொல்லுங்கள்? – மௌனிகன

விடை: 1 இந்தியப் பெண் ஜப்பானில். 2. அரேபியச் சிறுவன இங்கிலாந்தில் 3. திபெத்தியப் பையன் அமெரிக்காவில். 4. எஸ்கிமோப் பையன் ஹாலந்தில் 5. செவ்விந்தியன் ஆப்பிரிக்காவில். 6. டச்சுக்காரப் பெண் அரேபியாவில். 7 சீனப் பையன் கிரீன்லாந்தில். 8 ஆங்கிலேயப் பையன் சீனாவில். 9 ஜப்பானியச் சிறுமி இந்தியாவில் 10. ஆப்பிரிக்காச் சிறுவன் திபெத்தில்.
















6. ஒருநாள் பொழுது

மல்லிகா கதறி அழுததைக் கண்டு சந்திரன் மனம் கலங்கவில்லை. அவளைத் தேற்றி ஒரு ஆலமரத்தடிக்கு அழைத்துச் சென்றான். இரவு பத்து மணி வரையில் மழை பெய்து கொண்டே இருந்தது. 'இந்த இருளிலும் மழையிலும் எங்கே போய்த் தங்குவது' என்று சந்திரன் யோசிக்கத் தொடங்கினான்.

மல்லிகாவைப் பார்ப்பதற்குச் சந்திரனுக்குப் பரிதாபமாக இருந்தது. சந்திரனுக்காக அவள் அழுவதை நிறுத்தி விட்டாளென்றாலும், குளிராலும் பயத்தாலும் அவள் உடம்பு வெட வெட வென்று நடுங்கியது. சந்திரன் அவளை இறுகப் பிடித்துக் கொண்டான்.

மழை விட்ட பிறகு, இருவரும் மேல் துணியைப் பிழிந்து துவட்டிக் கொண்டு தெருக்களில் நடந்தார்கள். படுத்துக் கொள்ள ஏதேனும் இடம் கிடைக்குமா என்று பார்த்தார்கள். கடைசியில் ஒரு சிறிய திண்ணை கிடைத்தது. ஒட்டுத் திண்ணை. சரியாக ஒருவர்கூடப் படுக்க முடியாது. என்ன செய்வது? அந்த இடத்தில் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொண்டு இருவரும் படுத்தார்கள். தூக்கமே வரவில்லை. குளிரும் நடுக்கமும் நிற்கவில்லை. பயங்கரமான சொப்பனங்கள் இருவரையும் வாட்டின. பொழுது விடிவதற்கு சற்று முன்னதாகவே எழுந்து அந்த இடத்தை விட்டுக் கிளம்பினார்கள்.

" நாம் பிச்சைக்காரர்களாகவே போய் விட்டோம், அண்ணா! இனிமேல் அம்மா அப்பாவை நாம் பார்க்க முடியாதா?" என்று கேட்டாள் மல்லிகா.

" பயப்படாதே மல்லிகா! கட்டாயம் பார்ப்போம். பிச்சைக்காரர்களைப் பார். எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறார்கள்! நாம் மட்டும் ஏன் அதிகம் பயப்பட வேண்டும்?" என்றான். அவர்களைக் காணாமல் அரண்மனையில் உள்ளவர்கள் தவித்த தவிப்பு அவர்களுக்குத் தெரியவில்லை.

அன்றைக்குக் காலையில் இருவருக்கும் கொஞ்சம் பழைய சாதம் கிடைத்தது. சாப்பிட்டார்கள். மத்தியானம் சத்திரத்து மொச்சைக் கொட்டை அரிசிச் சாதம். அதையும் சாப்பிட்டார்கள். நேற்றைவிட இன்று சாப்பாடு அவர்களுக்கு ருசியாக இருந்தது. ஏன் தெரியுமா? வயிற்றில் அகோரப் பசி. பசி அதிகமானால் ருசி தெரியாதல்லவா?

இதற்குள் தங்க நகரத்தில் ஜனங்கள் பரபரப்போடு பேசிக் கொண்டார்கள். ராஜாவின் குழந்தைகள் இரண்டு பேரையும் காணோமாம். கண்ட இடங்களிலெல்லாம் தேடுகிறார்களாம். போலீஸ்காரர்களும் சுறுசுறுப்பாக இருக்கிறார்களாம். ராஜாவும், ராணியும் தனித் தனியாகக் கார்களில் ஊரெங்கும் சுற்றுகிறார்களாம். வெளியூர்களுக்கும் ஆட்கள் தேடப் புறப்பட்டு விட்டார்களாம்!

இவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டான் சந்திரன். அவனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது.

" அப்பாவும் அம்மாவும் நம்மைத் தேடுகிறார்களாம், வா! நாம் அவர்களைத் தேடுவோம் " என்று ஊருக்குள் நடந்தான்.

ராஜாவும் ராணியும் காரில் சுற்றிச் சுற்றித் தேடினார்கள். இங்கே பரட்டைத் தலையோடு, கந்தல் உடையோடு, பசி நிறைந்த வயிரோடு, ஏழைக் கோலத்தில் இந்த இரண்டு பேரும் தெருத் தெருவாய்ப் பெற்றோரைத் தேடினார்கள். எதிரே அரண்மனைக் கார் வந்தால், நிறுத்தச் சொல்லித் தங்களை அழைத்துப் போகச் சொல்லலாம் அல்லவா? ஒரு வேளை அம்மாவோ அப்பாவோ அதில் வந்தால் நேரில் சந்திக்கலாம் அல்லவா!

நல்ல வேளை. நினைத்தபடி நடக்கப் போகிறது. அதோ, அந்தத் தெரு மூலையில் அரண்மனைக் கார் வருகிறது.

அன்றைக்கு அவர்களை ஏற்றி வந்த அதே கார்தான்; புதிதாக வாங்கிய அது பளபளவென்று மின்னிக் கொண்டு வருகிறது.

மல்லிகாவுக்கு அளவுக்கு மீறிய ஆனந்தம். "அண்ணா! அதோ நம்முடைய கார்!" என்று அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். சந்திரனுக்கும் தலைகால் புரியவில்லை. காரை நிறுத்தச் சொல்லிக் கையைக் காட்டிக் கொண்டே குறுக்கே போய் நின்றான்.

வேகமாய் வந்த கார் படீரென்று நின்றது.

துள்ளிக் குதித்துக் கொண்டு இரண்டு குழந்தைகளும் கைகளை வேகமாக ஆட்டிக் கூப்பிட்டார்கள்.

அருள் வாக்கு

ஆனந்தம் என்பது எங்கும் பரிபூரணமாக நிறைந்து இருக்கும்படியான வஸ்து. ஆனால் நம்முடைய பாப கர்மா, கெட்ட மனம், புத்தி இவைகளினால் நம்மிடத்தில் ஆனந்தம் கொஞ்சம் கூடப் படாமல் மறைந்திருக்கிறது. ஒரு க்ஷணம் நாம் பண்ணியிருக்கிற புண்ணிய பலன்களினால் காற்று அடித்து இலைகள் விலகும்போது சூரியனுடைய ஒளி அதன் வழியாகப் பளீரென்று தோன்றுவதுபோல் இவ்வளவு ஆனந்தம் நமக்கு உண்டாகிறது. இதுவே பெருகி விட்டால் பேரானந்தமாகிறது. தபஸ் பண்ணி இறைவனையே எண்ணித் தியானம் செய்தால் என்றும் ஆனந்தமயமாக இருக்கும் கடலிலே இரண்டறக் கலந்துவிட முடியும் என்று ஞானிகள் கூறுகின்றனர்.

- ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

ஆனால் நின்ற கார் மறுபடியும் புறப்பட்டது! காருக்குள்ளிருந்த டிரைவர் தலையை நீட்டி, "பிச்சைக்காரக் கழுதைகளா! நடு ரோட்டில் நின்று ஆட்டம் போடுகிறீர்கள்? சனியன்கள்! விழுந்து சாகப் போகிறீர்கள்; ஓடுங்கள்" என்று கத்திவிட்டு மீண்டும் காரை வேகமாக ஓட்டினான். அந்தக் காருக்குள் ராஜா ராணி இரண்டு பேர்களுமே இருந்தார்கள். இருவருமே இந்தக் குழந்தைகளைப் பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்குப் புரியவில்லை; வெறுப்போடு பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டார்கள்.

எப்படி இருக்கும் சந்திரனுக்கு? என்ன பாடுபட்டிருப்பாள் மல்லிகா! பெற்ற தாயும் தந்தையுமே தங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாத நிலையைக் கண்டதும் அவர்கள் இடிந்து போய் விட்டார்கள். அவர்கள் மனத்தில் கொஞ்ச நஞ்சம் இருந்த தைரியமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

"ஐயோ, அப்பா!" என்றான் சந்திரன்.

"அம்மா! ஐயோ அம்மா!" என்று அலறினாள் மல்லிகா.

அதற்குள் தெரு மூலையில் நின்ற ஒரு போலீஸ்காரன் தன்னுடைய கையிலிருந்த தடியை ஓங்கிக்கொண்டே இவர்களை நோக்கி ஓடி வந்தான்.

"ஓடுங்கள்; நடுத்தெருவில் என்ன வேலை உங்களுக்கு?" என்று தடியை வீசினான். நல்லவேளை! இரண்டு பேரும் அடிபடாமல் தப்பினார்கள்.

மல்லிகா தேம்பித் தேம்பி அழுதாள். "அண்ணா! நம்மை யாருமே அடையாளம் கண்டுகொள்ளவில்லை. நாம் இனிமேல் இந்தப் பொல்லாத ஊரில் இருக்க வேண்டாம். வேறு எங்கேயாவது போகலாமா?" என்று கேட்டாள்.

"கவலைப்படாதே, மல்லிகா! ஏழைகளின் ஒருநாள் பொழுது எப்படிக் கஷ்டமாயிருக்கிறது பார்த்தாயா? தைரியமாக இரு" என்று சாந்தப்படுத்தினான் சந்திரன்.

"ஏழைகளாயிருப்பதை விடச் செத்துப் போவது தேவலாம், அண்ணா!" என்றாள் மல்லிகா கண் கலங்க.

சந்திரனோ இனிமேல் என்ன துன்பம் வந்தாலும் நான் அழுவதில்லை என்று தீர்மானித்தான். "ஏழைகள் சாக மாட்டார்கள்; கோழைகள்தான் சாவார்கள்" என்று கூறினான்.

சாயங்காலம் கடைத்தெருவில் தினசரிப் பத்திரிகைகளின் விளம்பரத்தாள்கள் தொங்கின. மக்கள் திரள் திரளாகக் குழுமி நின்று அந்தச் செய்தியைப் படித்தார்கள். அந்தக் கூட்டத்தில் நின்ற சந்திரனும், மல்லிகாவும் அச்செய்தியைப் படித்துத் திகைத்தனர். "ராஜகுமாரர் சந்திரனையும், ராஜகுமாரி மல்லிகாவையும் கொலை செய்த கொலையாளி பிடிபட்டான். கொலை செய்யவில்லை என்று மறுக்கிறான். அவனிடம் குழந்தைகளின் நகைகளும் உடைகளும் அகப்பட்டன!" என்று எழுதியிருந்தது.

"நம்மைக் கொலை செய்து விட்டானா? யார்?" என்றான் சந்திரன்.

மல்லிகாவின் தலை சுற்றியது.


"நாம் இப்போது உயிரோடு இருக்கிறோமா, இல்லையா?" என்று தன் அண்ணனிடம் கேட்டாள் மல்லிகா.

(அடுத்த இதழில் முடியும்)





மாஸ்டா
பல்புகள்
பிரகாசம்
அதிகம்
நீடித்து
உழைக்கும்
அஸோஸியேடட் எலெக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்
தலைமை ஆபீஸ்: க்ரவுன் ஹவுஸ், 6 மிஷன்ரோ, கல்கத்தா.
கிளைகள்:
பம்பாய், புதுடெல்லி, மதராஸ், பங்களூர், கோயம்புத்தூர், நாகபுரி.
AIC 208 TM
பி. நடேசன் அண் கோ., லிமிடெட், 10, மவுண்ட் ரோடு, சென்னை-2 ● போம்ரா பிரதர்ஸ், 392, தங்கசாலை தெரு, சென்னை-1 ● குட்மென் அண் கோ., 31, டூப்ளே வீதி, பாண்டிச்சேரி



பிரகாசிக்க
உங்கள் பித்தளை, செம்பு
சாமான்களை தினசரி
பிராஸோ
வால் துலக்குங்கள்
BRASSO

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

107. பரிணமசூலை (2)

"ஸார்! 'அல்ஸர்' என்றால் என்னது? விரணந்தானே?"

"ஆமாம்."

"விரண சிகிச்சையில் மேல்நாட்டு வைத்தியம் மிகவும் முன்னேறி இருக்கிறதல்லவா?....."

"........."

"என்ன ஐயா மௌனமாயிருக்கிறீர்?"

"சொல்லுங்கள்."

"விரண சிகிச்சையில் முன்னேற்றமடைந்துள்ள மேல்நாட்டு வைத்திய முறைப்படி இந்த 'டுவாடீனல் அல்ஸ'ரை ஆபரேஷனால் எளிதில் குணப்படுத்தி விடலாமே!"

"வி...ட...லாம். ஆனால்..."

"என்ன ஐயா புதிர் போடுகிறீர்?"

"சொல்கிறேன், கேளுங்கள். வயிற்றைக் கிழி ஆபரேஷன் செய்வதென்பது சின்ன விஷயமில்லை..."

"அதெல்லாம் அந்தக் காலம் ஐயா! இப்போது வந்துள்ள ஆன்டிபயாடிக்களும் — பெனிஸிலின் போன்ற சஞ்சீவிகளும் சேர்ந்து ஆபரேஷன் என்பதை ரொம்பச் சின்ன விஷயமாக்கி விட்டன."

"சந்தோஷம். ஆனால்..."

"உம்...சொல்லும், ஐயா! ஆனால்..."

"முன்னேற்றமென்றீர்களே! அதைப் பற்றித்தான் சொல்ல வந்தேன். முன்னாளில் செய்தறியாத எத்தனையோ ஆபரேஷன்களை இப்போது எளிதில் செய்து விடுகிறார்கள். பலன் என்ன? முன்னாளில் செய்து வந்த ஆபரேஷன்களில் சிலவற்றை இப்போது செய்வதில்லை. அதனால் ஏது நஷ்டமும் வரவில்லை...."

"என்ன ஐயா பெரியபோடாக ஒன்று போடுகிறீர்? பலனில்லாவிட்டாலும் தொடர்ந்து செய்து வரும் ஆபரேஷனுக்கு ஒரு உதாரணமும், முன்னாளில் செய்து வந்து இப்போது விட்டு விட்ட ஆபரேஷனுக்கு ஒரு உதாரணமும் சொல்லுங்கள், பார்க்கலாம்."

"டான்ஸில் வளருகிறது. அதனால் இது அது என்று பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே அதை ஆபரேஷன் செய்து விடலாம் என்று செய்தும் விடுகிறார்கள். டான்ஸில்களைக் களைவதால் பிறகு பல இன்னல்கள் விளையக் கூடும். விளைவதும் உண்டு என்று அவற்றை முறித்துக் களைவது பிசகு என்று நேரிடச் சொல்லாமல் மறைமுகமாகத் தெரிவிப்போர் மேல் நாட்டு வைத்தியர்களிடையிலேயே இருக்கிறார்கள். மேலும் டயாபிடீஸ்காரர் பங்கில் என்னும் பிரமேகப் பிளவைக் கட்டிகளைத் தோண்டித் தோண்டி அறுத்து வந்த ஆபரேஷன்களை இப்போதெல்லாம் ஆபரேஷன் செய்வதே இல்லை. ஆபரேஷன் இல்லாமலேயே சிகிச்சை செய்கின்றனர்.

இப்படியாக, ஆபரேஷனே கூடாது என்று சொல்லி வருவோரிடையில் ஒரு சிலர் கூடாதுதான் என்று சொல்லிக் கொண்டே ஆபரேஷனைச் செய்வது முன்னேற்றமா? இது ஒன்று. இரண்டாவதாக, பிரமேஹ பிளவைகளை ஆபரேஷன் செய்யவே கூடாது. தாமாக உடையவும் விடக் கூடாது. சிகிச்சை செய்து சுகமாக்கவும் வேணும் என்று நாட்டு வைத்திய சாஸ்திரங்கள் தொன்று தொட்டுத் தெரிவித்துள்ள விஷயம். இதை எள்ளி நகையாடி, ஆபரேஷன் செய்வதாகச் சில நாட்கள் ஆபரேஷன் மூலம் நோயாளிகளைச் சித்திரவதை செய்து, இப்போது ஆபரேஷன் தேவையில்லை, கூடாது, செய்யாதே என்று சொல்வது எத்தரப் போக்கு? இப்படியெல்லாம் விஷயத்தைக் குப்பையாய்க் குழப்பியுள்ள நிலையில் முற்போக்கு, பிற்போக்கு என்று நிச்சயிப்பது எப்படி?

"அப்படியானால் இந்த டுவாடீனல் அல்ஸருக்குச் செய்யும் விரண சிகிச்சை?"

இதற்கான விரண சிகிச்சையைப் பற்றிக் குறைசொல்லவில்லை. ஆனால் அது முன்னேற்றமா என்பதுதான் கேள்வி. ஒரு நிமிஷம் பொறுங்கள். விஷயத்தை விளக்கி விடுகிறேன். விஸ்தாரமான பூர்வாங்கப் பரீட்சைகள். படம் பிடிப்பு முதலான உபாயங்களால் விரணமிருப்பதாகத் தீர்மானித்த பிறகு ஆபரேஷன் செய்வதென முடிவு செய்து, மயக்கம் கொடுத்து ஆபரேஷன் செய்ய வயிற்றைக் கிழியபிறகு அங்கெங்கும் விரணமே இல்லாததைக் கண்டு மறுபடியும் கிழிய வயிற்றை மூடித் தைத்து விடுகின்றனர். அப்படியானால், இந்தப் பரீட்சைகள் விரணமில்லாத இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்க, அதை நம்பிச் செய்யும் ஆபரேஷனும் இப்படி அவசியமற்றதாகப் போவதாயின்.....போவதாயின் விரணமுள்ள இடத்தில் இருப்பதைத் தெரிவிக்காத குறையும் ஏற்படலாமே!

இதில் முன்னேற்றமென்பதென்ன? இதுதான் எனக்குப் புரியாத புதிராய்



இருக்கிறது. மேலும் விரணமும் இருந்து ஆபரேஷனும் செய்து நோயாளியும் பிழைத்து விட்டான் என்றும் உண்டல்லவா? அவர்கள் கண்ட சுகமென்ன? வயிற்றின் மேலே ஒரு தடித்த தழும்பு. இது சில சமயங்களில் மிகவும் கரடுமுரடாய்த் தடித்துப் புடைத்து நிற்பதால் வயிற்றுக்கு சங்கோஜ விகாசங்களில் சிரமம் ஏற்படுகிறது. இதுவும் இல்லையென்றாலும், சில நாட்கள், அல்லது மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் இப் பரிணாம சூலை ஏற்படுகிறது. அப்படி ஏற்பட்டு இரண்டு தரம் ஆபரேஷன் செய்தும் பரிணாமசூலம் தீராது. திரும்பவும் ஏற்பட்டுள்ளவரைக் கண்டிருக்கிறேன். பழைய துணி. நொந்து பஞ்சாய்ப் போனது. அதிலும் கதர்த் துணி. அதில் ஒரு கிழிசல் ஏற்படுகிறது. அதைத் தைத்து விடுகிறோம். அஜாக்கிரதையாக உபயோகித்தால் மறுபடியும் கிழியும். அதுவும் முன் தையலின் பக்கத்திலேயே தான் கிழியும். இந்தத் தையல் கிழிசல்களுக்கு முடிவு ஏது? இப்படிப்பட்ட ஆபரேஷன் வேண்டாமே!

இதற்கு எனது அனுபவத்தில் கண்டு கண்டு தெளிந்த நிச்சயம்பலன் அளிக்கும் மருந்து கல்யாணகக்ஷாரம் என்பது தான். ஒன்றிரண்டு சிட்டிகையளவு இம் மருந்தைத் தினம் இரண்டு வேளை காலை மாலை சிறிது நெய்யில் குழைத்து நக்கி வந்தால் போதும். வெகு விரைவில் குணம் ஏற்படும். மலபந்தமும் நிவர்த்தியாகும். இதனால் மலபந்தம் நிவர்த்தியாகாதபக்ஷம் அரை டீஸ்பூன் அளவு சிவதை வேரின் சூர்ணத்துடன் கல்யாணகக்ஷாரத்தை மேற்சொன்ன அளவில் சேர்த்து மேற்சொன்ன விதமே சாப்பிடல் நல்லது. அல்லது அவ்விதம் சாப்பிட்ட பின் பச்சைப் பயிறு வெந்த தண்ணீரை இரண்டு அவுன்ஸ் அனுபானமாகக் குடித்து, வெந்த அப்பயற்றில் சிறிதளவைத் தின்பதும் நல்லது.

அப்படியொன்றும் கடுமையான மலபந்தம் இல்லாதவருக்கும், வேறு சரீரக் கூறு காரணமாக ஒருசிலருக்கும் மேலே தெரிவித்த விதம் கல்யாணகக்ஷாரத்தை நெய்யில் குழைத்துக் கொடுப்பதால் மலம் இளகிப் போகவும் – இரண்டு மூன்று தரம் வெளிக்குப் போகவும் தொடங்கலாம். இவ்வினத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்யாணகக்ஷாரத்தை மேற்சொன்ன அளவில் சிறிது மோரிலிட்டுக் கலக்கி ஆகாரத்துக்குப் பின் தினம் இரண்டு வேளை கொடுக்கலாம். வயிறு கழியவும் செய்யாது. பரிணாம சூலையும் குணமாகும்.

இனி இக் கல்யாணகக்ஷாரத்தைச் செய்யும் முறையைத் தெரிவிக்கிறேன்.

கல்யாணக க்ஷாரம்: சுக்கு, திப்பிலி, மிளகு. இந்துப்பு, துவர்ச்சிலையுப்பு, சோற்றுப்பு, கடுக்காய்த் தோல், தானிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, தந்தி மூலம் (நேர்வாளகத்தின் வேர்) சேராங்கொட்டை, சித்திர மூலத்தின் [வேர்] பட்டை, இவற்றைச் சம எடையில் எடுத்துப் பெருந்தூளாக இடித்துக் கொள்ள வேண்டும். இத்தூளுடன் நல்லெண்ணெய், கோமூத்திரம் இரண்டும் சமனளவில் தேவையானதை விட்டுத் தயிர் சோறுபோல் பிசைந்து, ஒரு பெரிய மண்பானையிலிட்டு மடக்கினால் மூடி, களி மண் பூசி பந்தித்து, பானையை நிழல் தீயிட்டு எரிக்கவும். மருந்துகளெல்லாம் உள்ளே எரிந்து கருகிவிடும். தன்னாலாக ஆறிய பிறகு பானையைத் திறந்து உள்ளே இருக்கும் கருகிப் போன மருந்துகளை எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு முன்சொன்ன விதம் உபயோகிக்கவும்.

குழந்தை உள்ளம்

டி. எஸ். கோதண்டராமன்

“சரோ! இங்கே வா” என்று கனல் தெறிக்கும் குரலில் அம்மா அழைத்ததும் சரோஜா நடுங்கி விட்டாள். நடுங்கியபடியே அம்மாவின் அருகே வந்தாள்.

“ஏம்மா ?”

“ரப்பர்க் கிளி எங்கேடி?”

சரோஜா விழித்தாள். “அதுவா ?... அது...வந்து...கமலு கேட்டாள்; கொடுத்துட்டேன் !”

அம்மாவின் கை சரோஜாவின் இடது காதைத் திண்டியது.

“ரொம்பப் பெரிய மனுஷியோல்லியோ, நீ?... அவள் கேட்டதும் உடனே கொடுத்துட்டே!...அவளோடு சேராதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? உம்?...”

காது சிவந்தது. சரோஜா அலறினாள்.

அம்மாவின் ஆத்திரம் தணிந்து அடங்கியபோது சரோஜாவின் பால் முகம் செவ்வண்ணமாகச் சிவந்திருந்தது. கண்களிலிருந்து வெள்ளம் பெருகி ஓடிக் கொண்டிருந்தது. ஒரே ஒரு செல்வ மகள் என்பதைக் கூட மறந்து பாகீரதி அவளை அடித்து விட்டாள். அத்தனை கோபம் அவளுக்கு !

பின்னே, சரோஜா செய்யும் காரியத்தைக் கண்டு எந்தத் தாய்க்குத்தான் கோபம் வராது?

சரோஜாவின் தந்தை பாலகிருஷ்ணன், ஒரு பிரபல பாங்கில் அக்கவுண்டண்டாக இருந்தார். முந்நூறு ரூபாய் சம்பளம். கௌரவமான வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான சௌகரியங்களை யெல்லாம் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

சரோஜாவுக்கு ஐந்து வயது நிரம்பவில்லை. ஒரே குழந்தை. பெற்றோர்கள் போட்டி போட்டுக் கொண்டு செல்வமாக வளர்த்ததில் ஆச்சரியமில்லை.

பாங்கிலிருந்து புறப்பட்டு வீட்டுக்குத் திரும்பி வருகையில், விளையாட்டுச் சாமான் ஏதேனும் கண்ணில் பட்டால் உடனே வாங்கி விடுவார், பாலகிருஷ்ணன். அந்தப் பொருள் தேவையானதுதானு, மலிவானதா என்றெல்லாம் அவர் கவலைப்பட்டதில்லை. புதிய புதிய பொம்மைகளைக் கண்டதும் அழகாய்ப் புன்முறுவலித்துச் சந்தோஷ ஆரவாரம் செய்வாளே சரோஜா, அதைக் காண்பதை விடப் பெரிய இன்பம் இந்த உலகில் வேறு என்ன இருக்கிறது?

பாகீரதி எத்தனையோ தடவைகள் சொல்லி விட்டாள், விளையாட்டுப் பொம்மைகளை வாங்கிக் கொண்டு வந்து குவிக்க வேண்டாம் என்று.

ஆனால், அவள் நினைத்துக் கொண்டிருந்தபடி விளையாட்டுச் சாமான்களால் வீடு நிறைந்து வழியவில்லை. எப்போது பார்த்தாலும் நாலைந்து பொருள்களுக்கு மேல் இருந்ததில்லை. காரணம், சரோஜாவின் தாராளமனம் தான். அக்கம் பக்கத்திலுள்ள குழந்தைகள் எந்தப் பொம்மையையாவது கேட்டால், மறுத்துச் சொன்னதில்லை. அவள். ‘உனக்கே வைச்சுக்கோ’ என்று சொல்லிக் கொடுத்து விடுவாள்.

எத்தனை பொம்மைகள் இப்படிப் போயிருக்கின்றன.

முதலில், சரோவின் பரந்த மனப்பான்மையைப் பாராட்டாத பாகீரதி நாளடைவில் வெகுண்டெழுந்தாள். சாதாரண வார்த்தைகளால் கண்டித்தாள். பலனில்லை. அம்மாவுக்குத் தெரியாமல் பொம்மைகளைத் தானம் செய்யத் தொடங்கினாள், சரோ. ‘எங்க அம்மாவுக்குத் தெரிஞ்சா கோவிச்சுப்பா. ஒருத்தர்கிட்டேயும் சொல்லாதே’ என்று எச்சரிக்கையும் செய்வாள் மற்றக் குழந்தைகளிடம்.

அப்படித்தான், முன்தினம் மாலையில் பாலகிருஷ்ணன் ஆசையுடன் வாங்கி வந்திருந்த ரப்பர்க் கிளியைக் கமலிக்கு வழங்கி விட்டாள் சரோ. அம்மா அதட்டிக் கேட்டதும் பயத்தில் அவளால் பொய் சொல்ல முடியாமல் போய்விட்டது. உண்மையைக் கூறி அடிவாங்கிக் கொண்டாள் !

வாசல் திண்ணைக்கு வந்து தனக்குத் தானே அழுது தீர்த்து விசிக்கத் தொடங்கினாள் அவள். சில நிமிஷங்களுக்குப் பிறகு விசும்பல் அடங்கி விட்டது. வெளியைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் சரோ. அவளுக்கு உலகமே வெறுத்துப் போய்விட்டாற் போலிருந்தது. என்ன கேவலமான வாழ்க்கை இது? அழுதால் அரவணைத்துச் சமாதானம்

குழந்தைக்காக ஏங்கியவள் ஒரு தாய் குழந்தையைக் கொண்டு வந்து கொடுத்தது ஒரு குழந்தை! அவள் மனத்தையே குழந்தையாக்கிவிட்டது அது.

செய்வார் யாரும் இல்லையே! அப்பாவும் வீட்டில் இல்லை. காலையில் பத்து மணிக்குப் புறப்பட்டுப் போனால் இருட்டும் சமயத்தில்தான் திரும்பி வருகிறார். அது வரை வீட்டில் அம்மா வைத்தது தான் சட்டம். சே! அம்மாவாம் அம்மா! இருக்கட்டும், இருக்கட்டும். சாயங்காலம் அப்பா வந்ததும் அவர்கிட்டே சொல்லி அம்மாவை அடிக்கச் சொல்கிறேன்; காதைப் பிடித்துத் திருகச் சொல்கிறேன். அப்போது அம்மாவுக்கு வலிக்கும். 'ஐயோ, ஐயோ' என்று கத்துவாள். ஆனால்...? இந்த அப்பா உபயோகமில்லை அம்மா கிட்டே போய் எப்பப் பார்த்தாலும் 'ஹி ஹி ஹி' என்று சிரித்துக் கொண்டே பேசுகிறார். கோபித்துக் கொண்டதுகூட இல்லை. இவரா அடிக்கப் போகிறார்?

"சரோ...ஓ..." என்ற கனிவான குரல் கேட்டதும் அவள் திரும்பிப் பார்த்தாள். அடுத்த வீட்டுக் கல்யாணி மாமி இடுப்பில் நிறை குடத்துடன் நின்று கொண்டிருந்தாள்.



கல்யாணியைக் கண்டதும் அடங்கியிருந்த சரோஜாவின் அழுகை பீறிட்டு எழுந்தது. 'மாமி' என்று அலறியபடியே ஓடி வந்து கல்யாணியைக் கட்டிக் கொண்டாள். கல்யாணிக்குத் 'திக்' கென்றது. அவளுடன் பழகிய ஒரு வருஷ காலத்தில் இம்மாதிரி ஒரு தடவைகூட நிகழ்ந்ததில்லை.

"அழாதேடி, கண்ணு! வா உள்ளே போகலாம்" என்று இதமாகச் சொல்லியவாறே சரோவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றாள். நீர்க் குடத்தை இறக்கி விட்டுச் சரோவை அள்ளி எடுத்துத் தன் மடியில் இருத்திக் கொண்டாள்.

சரோவின் அழுகை மெல்ல மெல்லக் குறைந்தது. அவள் கண்களைத் துடைத்து விட்டுப் பட்டுக் கன்னங்களில் கல்யாணி முத்தமிட்டதும், அழுகை அடியோடு மறைந்தது. இளஞ் சிரிப்பு ஒன்றை உதிர்த்தாள்.

"அம்மா அடித்தாளா?"

'ஆமாம்' என்று பலமாகத் தலையாட்டினாள் சரோ.

"நீ ஏதாவது விஷமம் செய்திருப்பாய். அப்படித்தானே?"

"இல்லே, மாமி! வந்து நேத்திக்கு அப்பா ரப்பர்க் கிளி வாங்கிண்டு வந்



இருந்தாரோன்னோ? நீங்ககூடப் பார்த்தேளே? புடிச்சு அழுக்கிறல் 'பிய்ங் பிய்ங்'ன்னு சத்தம் போடுமே!''

''ஆமாம்!''

''அது வேணும்னு கமலி கேட்டாள். கொடுத்துட்டேன். அதுக்காக அம்மா என்னே அடி அடின்னு அடிச்சா, மாமி!''

சொல்லி வரும் போதே சரோவின் தொண்டை கம்மியது; கண்கள் பனித்தன.

பாகிரதியின் இயல்பை அறிந்திருந்த கல்யாணிக்கு விஷயம் - முழுதும் தெளிவாகி விட்டது. குழந்தைக்குப் பலவிதமாகச் சமாதானம் கூறினாள். பின், எழுந்து சென்று, முன் தினம் மாலையில் செய்திருந்த மைசூர்பாகில் ஒரு துண்டத்தை எடுத்து வந்து சரோவிடம் கொடுத்தாள்.

''அழக் கூடாது. உம்? எங்கே சிரி?''

குழந்தை நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டு சிரித்தது.

மத்தியானம் மூன்று மணி. தெருவில் ஏதோ விற்கும் குரல் கேட்டு வாசற்புறம் வந்தாள், கல்யாணி. எவர்ஸில்வர் பாத்திரக்காரன் நாலைந்து வீடுகள் தள்ளிப் போய்க் கொண்டிருந்தான். மனத்துக்குள் அலுத்துக் கொண்டே வீட்டுக்குள் போகத் திரும்பினாள். அதே சமயத்தில் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு பாகிரதி வெளியே வந்தாள்.

''என்ன விற்கிறது, கல்யாணி?''

''எவர்சில்வர் பாத்திரம். வேறே என்ன இந்தத் தெருவுக்கு வரப் போகிறது?''

இருவரும் பொருள் விளங்காத சிரிப்பைப் பரிமாறிக் கொண்டார்கள்.

''காலையில் சரோஜாவை ரொம்பவும் அடித்து விட்டேன்'' என்றாள் பாகிரதி குற்றம் செய்து விட்டதை உணர்ந்த குரலில்.

''அழுது அழுது அவள் கண்ணும் முகமும் ஒரேயடியாகச் சிவந்து போய் இருந்தன.''

''பின்னே, என்னடி?...அவராவது, என்ன சொன்னாலும் கேட்காமல், பொம்மைகளாக வாங்கிக் காசைக் கரியாக்குகிறார். இவளாவது பெரிய தாராளப் பிரபு மாதிரி தானம் செய்கிறாள்! ரப்பர்க் இனி வாங்கிக் கொண்டு வந்து இருபத்துநாலு மணி நேரம் முழுக்க முழுக்க ஆகவில்லை. அதற்குள் எந்தப் பெண்ணுக்கோ கொடுத்து விட்டு நிற்கிறாள்! ஆத்திரமாக வந்தது. அடித்து விட்டேன்....''

''குழந்தை ஏங்கி விட்டது. உள்ளே அழைத்துக் கொண்டு போய்ச் சமாதானப்படுத்தினேன்.''

''நான் பார்த்துக்கொண்டே இருந்தேன். நீ அணைத்துக் கொண்டதும் அவள் மனம் ஆறுதலடைந்து விடும் என்பது எனக்குத் தெரியாதா?'' என்றாள் பாகிரதி சிரித்துக் கொண்டே.

தன் 'செலுலாய்ட்' குழந்தையை நீரா[illegible]த் துடைத்து விட்டாள், சரோ. அதை மடியில் போட்டுக் கொண்டு

வெண்கலப் பாலாடையினால், பால் புகட்டினாள். பாலையெல்லாம் குடித்து விட்டு அது அழுவதாக எண்ணிக் கொண்டாள். தோளில் குழந்தையைச் சாத்திக் கொண்டு, 'லோ லோ லோ அழாதேடா, ராஜா' என்று வாத்சல்யம் நிறைந்த குரலில் ஆறுதல் கூறினாள்.

"சரோ" என்ற குரல் சமையலறையிலிருந்து கணீரென்று கேட்டது. சரோஜா பதில் கூறவில்லை. சத்தம் செய்யாமல் எழுந்திருந்து, குடுகுடுவென்று சமையலறைக்கு ஓடினாள். அம்மா அருகே சென்று, "சத்தம் போடாதே, அம்மா! குழந்தை தூங்கறது" என்று வேண்டிக் கொண்டாள்.

பாகீரதி தனக்குள் சிரித்துக் கொண்டாள். சரோவுக்குத்தான், அந்தப் பொம்மைக் குழந்தையிடம் எத்தனை பாசம்! அது பொம்மை என்ற நினைவே இல்லை, அவளுக்கு. உயிரும் உடலும் கொண்ட குழந்தையாகவே எண்ணிக் கொண்டிருக்கிறாள்! அதன் காரணமாகத்தானோ, என்னவோ, அவள் இன்னும் குழந்தைப் பொம்மையை யாருக்கும் கொடுத்து விடவில்லை.

"சரி! வாசற் கதவு சாத்தியிருக்கிறதா, பார்! இல்லா விட்டால் சாத்திவை. போ. அதற்காகத்தான் கூப்பிட்டேன்" என்றாள் பாகீரதி.

சரோ வெளியே வந்தாள். வாசற் கதவு திறந்து கிடப்பதைக் கண்டாள். அதைச் சாத்துவதற்காக நிலைப்படியருகே வந்தபோது, கல்யாணியின் வீட்டு வாசலில் ஜட்கா வண்டி வந்து நிற்பது தெரிந்தது. அதிலிருந்து கல்யாணியின் கணவன் நடராஜனும் ஒரு பெரியம்மாவும் இறங்கினார்கள்.

சரோ, கதவைச் சாத்திக் கொண்டு அம்மாவிடம் வந்தாள்.

"அம்மா யாரோ வந்திருக்கா...." என்றாள், கல்யாணியின் வீட்டைக் கையால் சுட்டியபடியே.

"அந்த மாமாவோடே அம்மாவாக இருக்கும். கல்யாணி சொல்லிக் கொண்டிருந்தாள்."

"அம்மாவா? ஐயய்யே! பூதம் மாதிரி இருக்கா! எவ்வளவு குண்டு தெரியுமோ?" என்று விவரித்துத் தன் வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டாள், சரோ.

"இந்தா, அந்த மாதிரி யெல்லாம் சொல்லக் கூடாது. அவர்கள் வீட்டில் போய்த் தத்துப் பித்தென்று உளறி வைக்காதே!" என்று கண்டித்தாள் பாகீரதி.

கூடத்துக்கு வந்தாள், சரோ. 'குழந்தை' அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. சரோவுக்குப் பொழுது போகவில்லை. கல்யாணி மாமி வீட்டுக்குப் போனாள்.

இரண்டே நிமிஷத்தில் அடுத்த வீட்டின் வாசலுக்கு வந்து கூச்சத்துடன் உட்புறம் எட்டிப் பார்த்தாள். 'உள்ளே அந்தப் பூதம் இருக்குமோ?'

அவள் தயங்கி நிற்கையில், நடராஜன் கண்களில் பட்டுவிட்டாள்.

"உள்ளே வா, சரோ!.... அம்மா! இவள் பக்கத்து வீட்டுக் க ரின் குழந்தை. பாதிப் பொழுது இங்கே தான் இருப்பாள். சமர்த்து. எங்களிடம் ரொம்பவும் ஒட்டுதல். அவள் அம்மா அடிக்க வந்தால் கல்யாணியின் மடியில் வந்து புகுந்து கொள்வாள்!"

அம்மாள் நிமிர்ந்து பார்த்துப் பல்லைக் காட்டிச் சிரித்தாள். பெரியதாக, மண் வெட்டி போன்ற பற்கள். வாயைத் திறந்தபோது குகை மாதிரித் தோன்றியது. 'சே, இவள் அம்மாவாமே? இந்த மாமாவும் மாமியும் எவ்வளவு அழகா இருக்கா? மாமிக்கு இவ்வளவு பெரிய வாயும் இல்லை, பல்லும் இல்லை, உடம்பும் இல்லை!'

அந்த அம்மாள் பித்தளைச் சம்புடத்தைத் திறந்து ஒரு முறுக்கை எடுத்து நீட்டினாள். "வாங்கிக்கோ!"

சரோ நகரவில்லை. கல்யாணியைப் பார்த்து விழித்தாள்.

"புதிசல்லவா? பயப்படுகிறாள். இரண்டு நாட்கள் பழகினால் ஒட்டிக் கொண்டு விடுவாள். கல்யாணி! அதை நீ வாங்கிக் கொடு" என்றான் நடராஜன்.

கல்யாணியிடமிருந்து முறுக்கைப் பெற்றுக் கொண்ட பின் அங்கே நிற்கப் பிடிக்கவில்லை, சரோவுக்கு ஒரே ஓட்டமாகத் தன் வீட்டை நோக்கி ஓடினாள். மெருகிட்ட தங்கக் குத்து விளக்கு காற்றில் மிதந்து செல்வது போன்றிருந்த அந்தக் காட்சியைக் கண்டு, அம்மாள் 'ஹூம்' என்று பெருமூச்செறிந்தாள்.

அன்று சாயந்திரம் விளக்கு வைக்கும் நேரம். சற்று முன்பு, நடராஜனும் அவன் தாயாரும் வெளியே புறப்பட்டுப் போனதைப் பார்த்துக் கொண்டிருந்த சரோ, அடுத்த வீட்டில் கல்யாணி மாமி மட்டும் இருக்கிறாள் என்பதை நிச்சயப் படுத்திக் கொண்டு, உள்ளே நுழைந்தாள். முன் அறையில் அவளைக் காணவில்லை. அதற்கு அடுத்தாற் போல், சுவாமி படங்கள் மாட்டியிருந்த அறைக்குள் எட்டிப் பார்த்தாள், அவள். பார்த்ததும் திடுக்கிட்டாள். 'ஐயோ! கல்யாணி மாமி ஏன் படங்களுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு குலுங்கக் குலுங்க அழுகிறாள்?'


LIFEBUOY SOAP
LIFEBUOY
SOAP
லைப்பாய் சோப்பினால்
ஸ்நானம் செய்தீர்களானால்
ஆஹாஹா! குளுகுளுவென்ற
மலர்ச்சி! கிளுகுளுவென்ற
ஆரோக்கியம்!
இந்துஸ்தான் லீவர் லிமிட்டெட் தயாரிப்பு
L/P. 1-X29TM

சரோவின் கண்களில் நீர் துளிர்த்தது.

அம்மாவிடம் சொல்ல வேண்டும் போல் துடிப்பு உண்டாயிற்று. சரோவுக்கு. வந்த சுவடு தெரியாமல் திரும்பித் தன் வீட்டுக்கு விரைந்தாள்.

"அம்மா! அந்த மாமி அழுதிண்டிருக்கா."

அடுப்பிலிருந்து பாலைக் காய்ச்சி இறக்கிக் கொண்டிருந்த பாகீரதி நிமிர்ந்து பார்த்தாள்

"என்ன சொல்கிறே?"

"மாமி அழறா..."

"நிஜமாகவா?"

"நெசம்மா!"

காய்ச்சிய பாலை மூடி வைத்து விட்டுக் கல்யாணியைக் காண வந்தாள் அவள். காலோசை கேட்டதும் கல்யாணி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அழுதாயா, கல்யாணி?"

'இல்லை' என்று தலையசைத்தாள் அவள். உயிரற்ற புன்னகை குறைப் பிரசவமாக உதட்டில் பிறந்தது.

"என்னிடம் பொய் சொல்லாதே. மத்தியானம் உன் மாமியார் போட்ட இரைச்சலை நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்."

கல்யாணிக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. பாகீரதியின் கைகளில் துவண்டு விசித்தாள்.

"நன்றாக அழுகிறாய் பைத்தியம்மாதிரி! உனக்கு என்ன, வயசாகிக் குழந்தையே பிறக்காது என்று ஆகிவிட்டதா? அப்படியில்லையே! இன்னும் இருபத்தாறு இருபத்தேழு ஆகவில்லை. அதற்காக இப்படி அழுவானேன்? மாமியாருக்கு ஆதங்கமாகத்தான் இருக்கும். கல்யாணமாகி எழெட்டு வருஷமாகியும் பேரன் பிறக்கவில்லையே என்று வருத்தமாகத்தான் இருக்கும். வெறுமனே இரைந்தால் காரியம் ஆகிவிடுமா? குழந்தை பிறக்கவில்லை என்றால் ராமேசுவரம் போவார்கள்; டாக்டரிடம் காட்டுவார்கள். அதை விட்டு மருமகளைத் திட்டினால் பேரன் பிறந்து விடுவானா?"

இந்த இதமான வார்த்தைகளால் கல்யாணிக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று. "என்னால் தாங்கவில்லை. அழுது விட்டேன். மாமியார் தாறுமாறாகப் பேசி விட்டார்" என்றாள் கல்யாணி மெல்லச் சிரித்தவாறே.

நிலைப்படியருகே நின்று அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த சரோவுக்குக் கல்யாணியின் முகத்தில் சிரிப்பைக் கண்டதும்தான் நிம்மதி உண்டாயிற்று.

அம்மாவுடன் வீட்டுக்குத் திரும்பி வருகையில் அந்த மாமியார் பூதத்தின் மீதிருந்த வெறுப்பும் பன்மடங்காகப் பெருகியது. அவர் திட்டியதால் தானே கல்யாணி மாமி அழுதாள்? மாமி எவ்வளவு நல்லவர்! அவரை யாராவது அழ விடுவார்களா?

'மாமிக்குக் குழந்தை பிறக்கவில்லையாம். ஏனோ தெரியவில்லை. என்னிடம் கூட ஒரு குழந்தை இருக்கிறதே? மாமிக்கும் அது போல ஒரு குழந்தை வாங்கிக் கொடுக்கக் கூடாதோ, அந்த மாமா? கமலியின் அம்மாவைப் போல் அவரும் மாமிக்கு எதுவும் வாங்கித் தர மாட்டாரோ?'

ஊஞ்சலில் உட்கார்ந்து சிந்தனை செய்துகொண்டிருந்த சரோஜாவுக்குத் திடீரென்று ஒரு யோசனை உதயமாயிற்று. அடுத்த நிமிஷமே அந்த யோசனையைச் செயலாக்கத் துணிந்தாள்.

"மாமி...!"

கல்யாணி திரும்பினாள். "என்ன, சரோ?"

"உஸ், இரையாதீர்கள்!" என்று உதட்டில் விரலை வைத்து ஜாடை காட்டினாள் சரோ.

கல்யாணிக்குச் சிரிப்பு வந்தது.

"என்ன இரகசியம் கொண்டு வந்திருக்கிறே? பின்னால் எதையாவது ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாயா?"

"கையை நீட்டுங்கோ!"

அவள் நீட்டினாள்.

இடது கையால் முதுகுப்புறத்தில் மறைத்து வைத்திருந்த 'செலுலாய்ட்' பொம்மையை நீட்டிய கரங்களில் வைத்தாள் சரோ.

"பொம்மை எனக்கா!"

"பொம்மையா? குழந்தை மாமி! உங்களுக்குத்தான். குழந்தையில்லேன்னு அந்த மாமி திட்டினாளோல்லியோ? அதனாலே என் குழந்தையைக் கொண்டு வந்தேன்! நீங்களே வைச்சுக்குங்கோ!"

கல்யாணியின் முகம் வெளிறியது.

"பயப்படறேளா மாமி? எங்க அம்மாவுக்குத் தெரியாமெ எடுத்திண்டு வந்தேன். நீங்களும் சொல்லிப்பிடாதேங்கோ. தெரிஞ்சதுன்னா அம்மா அடிப்பா. குழந்தை எங்கேன்னு அம்மா கேட்டா காணமப் போயிட்டுதுன்னு சொல்லிப்பிடறேன். அட நீங்க என் மாமி மறுபடியும் அழறேள்?"

கல்யாணியின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள் சரோ. ஆனால் அவள் இதயத்தில் வழிந்தோடிய ஏக்கத்தை யாரே துடைக்க முடியும்?


PEARS
Midland
PINEAPPLE SLICES

மற்றொரு தாஜ்மஹால்

சுவாதி

மனிதனுடைய படைப்புகளுக்குள்ளே ஆக்ரா நகரத்திலுள்ள தாஜ்மகாலைப் பற்றி வியக்காதவர் இல்லை. அதன் வேலைப்பாடுகளைப் புகழாதவர் இல்லை. இதைப் போன்ற கீர்த்தியான மற்றொரு கட்டடம் எழுப்ப முடியுமோ என்று ஐயப்படாதவர்களும் இல்லை.

இன்றுவரையில் இதற்கு நிகரான இரண்டாவது தாஜ்மஹால் நிர்மாணம் செய்யப்படவில்லை. ஆனால் முயற்சி செய்து பார்த்திருக்கின்றனர். வெற்றிதான் கிட்டவில்லை.

கேட்பதற்கு வியப்பாகத்தான் இருக்கும். முதன் முயற்சி செய்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? அர்ஜுமன் பானு பீகம் என்ற எந்த மொகலாய ராணியின் உன்னதமான காதலுக்குச் சின்னமாகத் தாஜ்மஹாலை சிருஷ்டிக்கக் காரணமாக எந்தச் சக்கரவர்த்தி ஷாஜஹான் இருந்தாரோ அவரே இரண்டாவது தாஜ்மஹால் ஒன்றை எழுப்ப முயன்றார். தமது அன்புள்ள மனைவிக்கு எழுப்பிய மகோன்னத சின்னத்துக்கு நேர் எதிராக யமுனா நதிக்கரையின் மறுபுறத்தில், கறுப்புச் சலவைக் கற்களால் தம்முடைய அந்திம கால இருப்பிடமாக அதே போல் மற்றொரு தாஜ்மஹால் அமைத்து, இவ்விரண்டையும் இணைக்கும் ஒரு பாலத்தையும் நதியின்மீது அமைத்து, வாழ்க்கையில் தமது மனைவியுடன் எப்படி இணைந்திருந்தாரோ அவ்வாறே இறந்தபின்னரும் தங்கள் இருவருடைய சமாதி நிலையங்களும் இணைக்கப்பட்டே இருக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி ஷாஜஹான் தீர்மானித்தார்.

இந்தக் கறுப்புத் தாஜ்மஹாலை நிர்மாணம் செய்யத் துரிதமாக வேலை துவக்கும்படி சிற்பத் தலைவர்களுக்கு உத்தரவும் கொடுத்தார். ஆனால் இதற்கு வேண்டிய செலவுகளை அப்பேர்ப்பட்ட மொகலாய மன்னரால்கூட மேற்கொண்டிருக்க முடியுமோ என்பது சந்தேகம்தான். அப்போதுதான் கட்டி முடிந்த தாஜ்மஹாலுக்கே மூன்றில் ஒரு பங்குச் செலவை மட்டுமே மொகலாய மன்னரின் கஜானாவினால் சமாளிக்க முடிந்தது. மீதியைப் பல்வேறு மகாராஜாக்களும், நவாப்புகளும், கப்பம் செலுத்தும் சிறு தலைவர்களும் நன்கொடை அளித்து உதவினார்கள் என்று சரித்திர வரலாறுகள் சொல்லுகின்றன. அதுவோ வெள்ளைச் சலவைக் கற்களால் ஆனது. இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது கறுப்புச் சலவைக் கல் கட்டடம். சலவைக் கற்கள் ஆசியா கண்டத்தின் மத்தியபாகத்திலுள்ள காகஸ் பிரதேசத்திலிருந்து வர வேண்டும். விலையோ வெள்ளைக் கற்களைவிட ஐந்து மடங்கு அதிகம். உத்தேசமாகக் கட்டடம் முடிவு பெற 16 கோடி ரூபாய்கள் பிடித்திருக்கும். தாஜ்மஹாலுக்கு மூன்றேகால் கோடி ரூபாய்தான் பிடித்திருந்தது.

வேலை ஆரம்பிக்கப்பட்டது. தாஜ்மகாலைக் கட்டிய உஸ்தாத் இஸாதான் இந்த வேலையும் மேற்பார்வை செய்தார். ஆரம்பக் காலத்திலேயே கறுப்புச் சலவைக் கற்கள் போதாமல் போயினவாம். அதற்காக வெள்ளைக் கற்களைக் கொண்டு வந்து ரஸாயனக் கலவைகள் செய்து கரும் நிறம் ஏறும் வரையில் கற்களை ஊற வைத்து, குறித்த அளவு கருமை ஏறியதும் எடுத்து அவற்றை உபயோகித்தாராம். இப்படிக் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது. எனினும் காரியம் முற்றுப் பெறவில்லை. ஷாஜஹான் ஆட்சியின் கடைசிக் காலம் சிங்காதனத்துக்காக நிகழ்ந்த போர்கள் இந்த மகோன்னத திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. யமுனை நதியின் மறு கரையில் தாஜ்மஹாலுக்கு எதிராக விஸ்தாரமாக அஸ்திவாரம் போடப்பட்ட சிவப்புக் கற்களாலான மேடையை இந்தக் கறுப்புத் தாஜ்மகாலின் சின்னமாக இன்றும் காணலாம்.

ஷாஜஹானுக்குப் பின் ஆட்சி புரிந்த அவுரங்கசீப் இக்கட்டடத்தை முடிப்பதில் சிரத்தை காட்டவில்லை. ஷாஜஹான் இறந்தபோது அவரது சடலத்தையும் மும்தாஜ்மஹாலின் சடலம் அடக்கம் செய்த இடத்துக்குப் பக்கத்தில் அடக்கம் செய்துவிட்டனர்.

மற்றொரு தாஜ்மஹால் கட்டுவது வீண் செலவு, அசட்டுத்தனம் என்று தீர்மானித்த அவுரங்கசீப், "இங்கே எனது பெற்றோர்கள் இருவரும் வாழ்க்கையில் காதல் கொண்டு கூடி வாழ்ந்தது போல் இறந்தபின்பும் இங்கே அடுத்தடுத்து அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்" என்று சுருக்கமாகச் சமாதியின் மீது செதுக்கி வைத்துவிட்டுத் தனயன் தன் கடமையை நிறைவேற்றி விட்டான்.

* * *

முதலில் இப்படி நினைத்த அவுரங்கசீப்பே சில ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது தாஜ்மஹாலைக் கட்ட வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டார். யாருக்காக? ராபியா உத்துரானி என்றும் துரானி பீகம் என்றும் பிரசித்தி பெற்ற டில்ரஸ் பானு என்ற தனது மனைவிக்கு ஞாபகச் சின்னமாக இதைப் பூர்த்தி செய்ய விரும்பினார். அவள் அவுரங்காபாத்தில் இறந்து போனாள். அவளுக்காக எழுப்பப்பட்ட சமாதிக் கட்டடம் "பீ-பீ-

கா-முக்பாரா" என்று இப்போதும் அவுரங்காபாத்தில் இருக்கிறது. இதைக் கட்டி முடிக்க ஏழு லட்சம் ரூபாய்கள் செலவழிந்ததாம். ஏழு வருஷங்கள் வேலை நிகழ்ந்ததாம். வட இந்தியாவில் தொலை தூரங்களிலிருந்து சலவைக் கற்கள் கொண்டுவர வேண்டியிருந்ததாகவும் தெரிகிறது. எனினும் தாஜ்மஹாலில் நிர்மாண ஒழுங்கும் எளிமையும் பிபி-கா-முக்பாராவில் இல்லை என்றுதான் சிற்பிகள் கூறுவர். இங்கேயும் கற்களால் புதைக்கப்பட்ட சாலையும் தடாகமும் உள்ளன. தடாகத்தின் நடுவே பதின்மூன்று நீர்ப்பீச்சிகள் அமைந்துள்ளன. கட்டடமும் 110 அடி உயரமுள்ள கம்பீரமான தோற்றமுடையது. மேல் பாகம் ஐந்தடி உயரத்துக்குப் பூராவும் சுத்த சலவைக் கற்களாலானது. அதற்குமேல் கருங்கல் வரிசையாலான மேல் தளம். மேல் ஸ்தூபியுள்ள அரை வட்டம் வெண் சலவைக் கற்களாலானது.

மொகல் மன்னரின் இறுதிக்கால ஆட்சியின் பலவீனமும் தலைகளிலிருந்து பிபி—கா—முக்பாரா இருந்த தொலை தூரமும் சேர்ந்து இக் கட்டடத்தைக் இலமடையும்படி விட்டு விட்டன. அவுரங்கசீப்பின் புதல்வன் இளவரசன் ஆஜாம்ஜா இதைப் புதுப்பிக்க முயன்றான். ஆனால் பலிக்கவில்லை. அடுத்த நூற்றாண்டில் கட்டடம் சிதைவுற்றதுடன் அதில் காப்பாற்றி வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த பொக்கிஷங்களும் இலமடைந்தன.


*   *   *

கர்ஸன் பிரபுவின் ஆர்வத்தினால் ஆக்ராவிலுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற கட்டடங்கள் காலத்தின் கொடுமைக்கு இரையாகாமல் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் அத்துடன் நிற்கவில்லை, அவருடைய அபிலாஷைகள். விக்டோரியா மகாராணியின் ஞாபகார்த்தமாக ஒரு நிரந்தரமான சிற்பச் சின்னம் அமைக்க வேண்டுமென்பது அவர் விருப்பம். அதன் விளைவாக உருவானதுதான் " இருபதாம் நூற்றாண்டின் தாஜ்மஹால் " என்று பிரசித்தி பெற்ற விக்டோரியா மெமோரியல் என்னும் கட்டடம். கல்கத்தாவில் உள்ளது இச் சிறந்த கட்டடம்.


விக்டோரியா மகாராணியின் மரணச் செய்தி கிடைத்ததும் ஸர் வில்லியம் எமர்ஸன் என்ற கட்டடச் சிற்பிக்கு, "பிரும்மாண்டமானதும் ஆனால் எளிமையும் கம்பீரமுமுள்ள ஒரு கட்டடம் அடுக்கடுக்காகத் தளங்களும் நடைபாதைகளும் மத்திய மண்டபத்திலிருந்து நாலா பக்கங்களிலும் பிரிந்துசெல்லும் வண்ணம் மகா

---


1. அவுரங்கசீப்பின் ராணி பிபிகா முக்பாரா சமாதி. 2. பிரசித்திபெற்ற தாஜ்மகால். 3. இருபதாம் நூற்றாண்டு தாஜ்மகால் என்று புகழ்பெற்ற கல்கத்தாவிலுள்ள விக்டோரியா ஞாபகார்த்தக் கட்டடம். 4. ஆக்ராவில் கட்டப்பட்டு வரும் ராதாகவாமி ஞாபகார்த்தக் கட்டடத்தின் மாதிரி.




1



2



3



4

ராணியின் ஞாபகச் சின்னமாக அமைக்க வேண்டும்'' என்று கர்ஸன் பிரபு உத்தரவிட்டார். நிதி திரட்ட அவர் விடுத்த வேண்டுகோளுக்கு எதிர்பாராத விதத்தில் ஆதரவு கிட்டியது.

இந்த மூன்றாவது தாஜ்மஹால் முயற்சிக்கு அஸ்திவாரக் கல்லை மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் வேல்ஸ் இளவரசராக இருந்த போது 1906-ம் ஆண்டில் நாட்டினார். அவருடைய புதல்வர், வின்ட்ஸர் கோமகனால் அவர் 1921-ம் ஆண்டு இந்தியா விஜயம் செய்தபோது இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் ஒரு முயற்சி நான்காவது தாஜ்மஹால் கட்ட வேண்டுமென்று இப்போது இந்துக்களில் ஒரு பிரிவினராகிய ராதாஸ்வாமி இனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வேலை நடந்துவருகிறது. தங்களுடைய முதல் குருவின் ஞாபகச் சின்னமாக உருவாகிக் கொண்டிருக்கும் இந்தக் கட்டடம் முடிவடைந்ததும் உலகத்திலேயே ஒரு சிறந்த அற்புதமாகவும், தாஜ்மஹாலைத் தோற்கடிக்கும் கம்பீரத்துடனும் திகழும் என்று சொல்லப்படுகிறது. இந்த வேலை கடந்த ஐம்பது ஆண்டுகளாகவே நடந்து கொண்டு வருகிறது. இதுவரைக்கும் ரூ. 20 லட்சம் ரூபாய்கள் செலவாகியிருக்கிறதாம். மேற்பார்வையிடும் தலைமை என்ஜினீயர் திரு ஜீ. எஸ். பாட்கரின் அபிப்பிராயப்படி இந்த மகோன்னதமான கட்டடத்தின் ஒரு சிறிய பகுதியே இப்போது கட்டி முடித்திருக்கிறது என்கிறார். இப்போதுள்ள போக்கில் இந்தக் கட்டடம் முடிவுபெற இந்த நூற்றாண்டு இறுதி வரையில் போகலாம். கட்டி முடிந்தால் இது எப்படித் தோற்றமளிக்கும் என்பதைக் காட்ட இதன் சிறு அமைப்பு வடிவம் ஒன்று ராதாஸ்வாமி ஞாபகார்த்தச் சங்கத்தின் நடு மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கத்திய நாட்டுக் கலாசாரத்துக்கு ஒத்த முறையில் இந்தக் கட்டடம் இருக்குமாயினும் பல்வேறு சிற்பப் பாணிகளும் அழகுறக் கலந்து இழைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் இதற்கு 50 லட்சம் ரூபாய் மட்டுமே செலவாகலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒரு கோடி ரூபாய் வரையில் பிடிக்கலாம் என்று இப்போது மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

இக்கட்டடத்தின் உயரம் 193 அடி. தாஜ்மஹாலின் உயரத்தைவிட 27 அடி குறைவு. இன்னும் நன்றாக முடிவு பெறாத இக் கட்டடத்தின் முதல் மாடி மீது நின்று பார்த்தால் தூரத்தில் தாஜ்மஹால் தனிச் சிறப்புடன் நிற்பதைக் காணலாம். ராதாஸ்வாமி ஞாபகச் சின்னம் தாஜ்மஹாலை மிஞ்சாமல் இருக்கலாம். எனினும் வேலைப்பாடுகளில் அதற்கு எவ்வகையிலும் குறைவாக இருக்காது என்றே சொல்ல வேண்டும்.

பாண்டிமாதேவி

அத்தியாயம் 20

தீவினை பரவுகிறது!


புவனமோகினி பயறைபட்டு ஓடி வருகிறவளைப் போல் ஓடி வந்ததைக் கண்டவுடன் மகாராணி, குழல்மொழி, விலாசினி எல்லோரும் திகைப்போடு விரைந்து வந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

“என்னம்மா? ஏன் இப்படி நிலை கெட்டுத் தடுமாறி ஓடி வருகிறாய்? என்ன நடந்தது?” என்று அந்தப் பெண்ணை நிறுத்தி நிதானப்படுத்தி விசாரித்தார்கள் பவழக்கனிவாயரும் அதங்கோட்டாசிரியரும். பயந்து வெளிறிய கண் பார்வையால் தன்னைச் சூழ்ந்து நின்றவர்களை ஒவ்வொருவராகப் பார்த்தாள் புவனமோகினி. மகாராணியையும் விலாசினியையும் பார்த்து விட்டுக் குழல்மொழியின் மேல் அவள் பார்வை திரும்பியபோது அவள் கண்கள் சுருங்கி வெறுப்புப் படர முகம் சிறுத்தது. அவளைப் பார்க்கவே விருப்பமில்லாதவள் போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு விட்டாள் புவனமோகினி.

இதைக் கண்டு குழல்மொழியின் உள்ளம் அவமானப்பட்டு விட்டது போலக் கொதித்தது. புவனமோகினி என்ற சாதாரணமான வண்ண மகள் தன்னிடம் இப்படி நடந்துகொண்டாளே என்று வேதனையாக இருந்தது அவளுக்கு. ‘பகவதியைப் பற்றி விசாரித்துக் கொண்டு வரப்போன புவனமோகினி உண்மையைத் தெரிந்து கொண்டு வந்து விட்டாளோ? அதனால் தான் என் முகத்தை இப்படி வெறுப்போடு பார்க்கிறாள் போலும்! ஐயோ, நான் ஏன் இந்தச் சமயத்தில் இங்கே இருக்க நேர்ந்தது? நான் மறைத்து வைத்த உண்மை என் முன்னாலேயே வெளிப்பட்டு என்னைத் தலைகுனிய வைக்க வேண்டுமா?’ என்று மனத்துக்குள் எண்ணிப் பதற்றமடைந்தாள் குழல்மொழி.

“வண்ண மகளே! ஏன் இப்படிப் பதற்றமும் பயமும் அடைந்து வாய் பேசாமல் நிற்கிறாய்? நீ பகவதியைப் பற்றி விசாரித்துக் கொண்டு வரச் சென்ற இடத்தில் என்ன நடந்தது? சொன்னால் தானே எங்களுக்குத் தெரியும். சொல், அம்மா!” என்று மகாராணி புவனமோகினியைக் கேட்டார். புவனமோகினி வெறுப்பும் அச்சமும் கலந்த முகபாவத்தோடு மறுபடியும் குழல்மொழியை நிமிர்ந்து பார்த்தாள். பார்த்து விட்டுப் பதில் சொல்லத் தயங்குவது போல் நின்றாள். இனிமேலும் தான் அங்கு நின்று கொண்டிருந்தால் வெளிப்படையாக அவமானப்பட்டுத் தலைகுனிய நேர்ந்து விடும் என்று அஞ்சினாள் குழல்மொழி.

“உன் பக்கம் போய் விட்டு இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்” என்று ஏதோ அவசர காரியமாகச் செல்கிறவளைப் போல் சொல்லி விட்டு மெல்ல நழுவிச் சென்றாள் குழல்மொழி. முகத்திலோ, குரலிலோ, தான் அங்கிருந்து செல்வது மற்றவர்களுக்கு அநாகரிகமாகத் தோன்றி விடுவதற்குரிய குறிப்பே காட்டாமல் சுபாவமாகச் சொல்கிறவளைப் போல் சிரித்துக் கொண்டே சொல்லி விட்டு உட்புறமாகச் சென்று விட்டாள் அவள். சென்று விட்டாள் என்று முடித்துச் சொல்வது தவறு. செல்வது போல் போக்குக் காட்டி விட்டு அருகேயிருந்த ஒரு கதவுக்குப் பின் மறைந்து நின்று கொண்டாள். புவனமோகினி என்ன சொல்லப் போகிறாள்



என்பதைக் கேட்டு அறிந்து கொள்ளும் ஆவல் அவனுக்கும் இருக்குமல்லவா? செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு விநாடிக்கு விநாடி விரைவாகத் துடிக்கும் நெஞ்சத் துடிப்புடன் கதவு மறைவில் நின்றான் அவன்.

"இன்னும் ஏன் அம்மா தயங்குகின்றாய்? இடையாற்றுமங்கலத்துப் பெண் இருக்கும் போதுதான் அவன் முகத்தைப் பார்த்துப் பேசக் கூசி மருண்டு நின்றாய்! அவனோ உள்ளே போய் விட்டான். பயப்படாமல் நீ சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்" என்று பவழக்கனிவாயர் புவனமோகினியைத் தூண்டித் தூண்டிக் கேட்டார்.

"பெண்ணே! இன்னும் எங்கள் பொறுமையைச் சோதித்துக் கொண்டு நிற்காதே! சொல்" என்று மகாராணியும் தூண்டவே புவனமோகினி வாய் திறந்தாள்.

"அதை நான் எப்படிச் சொல்வேன், தேவி! சொல்வதற்கே நாக் கூசுகிறது எனக்கு. கோட்டாற்றுப் படைத்தளத்துக்குப் போகிற பாதையில் மகாமண்டலேசுவரருக்கு எதிராகக் கலவரங்களும் குழப்பங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பெரியவரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் பற்றி மிகக் கேவலமான முறையில் பேசிக் கொள்கிறார்கள். குழல்மொழியும், நாராயணன் சேந்தனும், ஈழத்துக்குப் பயணம் செய்த கப்பலில் பகவதியும் சென்றாளாம். மகா மண்டலேசுவரர் தம்முடைய சூழ்ச்சியால் அந்தப் பெண் பகவதியை ஈழநாட்டிலிருந்து திரும்ப முடியாதபடி அங்கேயே இறக்கும்படி செய்து விட்டாராம். தளபதி வல்லாள தேவனைப் போர்க்களத்துக்குப் போகக் கூடாதென்று தடுத்துச் சிறைப்படுத்தினாராம். மகா மண்டலேசுவரருடைய காவலிலிருந்து தப்பித் தளபதியும் ஆபத்துதவிகள் தலைவனும் குழற்கால்மாறனார் முதலியவர்களோடு சேர்ந்து கொண்டு ஒரு பெரிய கலகக் கூட்டத்தையே உருவாக்கியிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் முரட்டுக் கொள்ளைக் கூட்டத்தைப் போல் ஆயுதபாணிகளாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள். நான் தப்பி ஓடி வரத் தெய்வம்தான் துணை புரிந்தது. போகிற வழியில் இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்டேன். ஆனால் இவை எவ்வளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியாது. முதலில் என்னால் நம்பவே முடியவில்லை. மீண்டும் மீண்டும் பல இடங்களில் பலர் கூறக் கேட்ட போது நம்பாமலும் இருக்க முடியவில்லை. இந்த நிலையில் கலக்கமுற்றுப் பதறி வந்த போது கலகக்காரர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் உயிர் பிழைத்து வரவேண்டுமே என்ற பயம் இங்கு வந்து சேர்கிறவரை என்னை விடவில்லை. ஒரு வழியாக அரண்மனைக்கும் வந்து உங்களிடமே நடந்ததைக் கூறி விட்டேன்." பேசி முடிப்பதற்குள் புவனமோகினிக்கு மூச்சு இரைத்தது. அச்சத்தினாலும் குழப்பமான மன நிலையினாலும் சொற்கள் தடைப்பட்டு உருக்குலைந்து வெளிவந்தன. அவள் பேசி நிறுத்தியபின் அங்கு ஒரு விதமான அமைதி நிலவியது.

அவள் சொல்லி முடித்தபின்பும் சிறிது நேரம் வரை மகாராணி முதலியவர்களுக்கு அவளுடைய சொற்களில் நம்பிக்கை உண்டாகவே இல்லை. மகாராணி சோகம் தோய்ந்த குரலில் கூறலானார்.

"பவழக் கனிவாயரே! இதெல்லாம் உண்மையாயிருக்குமென்றே என்னால் நம்ப முடியவில்லையே? பகவதி எப்போது இலங்கைக்குப் போனாள்? மகாமண்டலேசுவரர் ஏன் அவளைக் கொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்? தளபதிக்கும் அவருக்கும் அவ்வளவு பெரிய பகைமை இருப்பதற்கு ஒரு காரணமும் இல்லையே? இந்த மாதிரிச் செய்திகளையெல்லாம்



மகாமண்டலேசுவரர் மேல் வெறுப்புக் கொண்ட கூற்றத் தலைவர்கள் யாராவது பொய்யாகத் திரித்து விட்டிருப்பார்களோ? இது என்ன கெட்ட காலம்? ஒரு பக்கத்தில் நாட்டின் எதிர்காலத்தையே முடிவு செய்து நிர்ணயிக்கும்படியான போர் நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் இன்னொரு பக்கத்தில் இப்படி உள்நாட்டுக் குழப்பம் எழுந்தால் எவ்வளவு கேவலம்?"

"மகாராணி! நீங்கள் கூறுவது போல் எனக்கும் இதில் நம்பிக்கை ஏற்பட மாட்டேன் என்கிறது. பகவதி ஈழ நாட்டில் போய் மரணமடைந்திருந்தால் குமார பாண்டியருக்குத் தெரியாமலா போகும்? அவ்வளவேன்? நம்மோடு இங்கேயே தங்கியிருக்கும் மகாமண்டலேசுவரரின் பெண் குழல்மொழியைக் கேட்டால் எல்லா விவரமும் தானே தெரிந்து விடுகிறது. எங்கே? அந்தப் பெண்ணை உள்ளேயிருந்து இப்படிக் கொஞ்சம் கூப்பிட்டு அனுப்புங்களேன். உடனே விசாரித்து விடலாம்" என்று பவழக்கனிவாயர் கூறியவுடன், "இதோ நான் போய் உடனே இடையாற்றுமங்கலத்து நங்கையை உள்ளேயிருந்து கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன்" என்று விலாசினி சென்றாள். அப்போது அதங்கோட்டாசிரியர் கூறுவார்: "மகாராணி! நம்பிக்கை உண்டாவதும், உண்டாகாததும் நம் எண்ணங்களின் அடிப்படையைப் பொறுத்தது. ஆனால் நெருப்பில்லாமல் புகையாது. வெளியில் இவ்வளவு பெரிய கலவரம் எழ வேண்டுமானால் அதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும்."

"காரணம் இருக்கிறதோ, இல்லையோ? இவையொன்றும் நல்ல காலத்துக்கு அறிகுறியாகத் தோன்றவில்லை. மனக் கலக்கம்தான் அதிகமாகிறது" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார் மகாராணி. அந்தச் சமயத்தில் குழல்மொழியைத் தேடிக் கொண்டு உள்ளே சென்றிருந்த விலாசினி திரும்பி வந்தாள்.


"மகாராணி! இடையாற்றுமங்கலத்து நங்கையைக் காணவில்லை. அநேகமாக அரண்மனையின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றிப் பார்த்து விட்டேன். எங்கே போனாளென்று தெரியவில்லை" என்று திரும்பி வந்த விலாசினி கூறியபோது எல்லாரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

"உள்ளே சென்று வருகிறேன் என்று போனவள் அதற்குள் எங்கே சென்றுவிட முடியும்? நன்றாகத் தேடிப் பாருங்கள். அரண்மனைக்குள்ளேதான் எங்காவது இருப்பாள்!" என்றார் அதங்கோட்டாசிரியர். அவர்கள் இவ்வாறு திகைத்துக்கொண்டிருந்த சமயத்தில் அரண்மனையின் பிரதான வாயிலாகிய பராந்தகப் பெருவாயிலைக் காக்கும் காவலர்களில் ஒருவன் அங்கு வந்து வணங்கி நின்றான். அவன் மகாராணியை நோக்கிக் கூறலானான்.

"சற்று முன் இடையாற்றுமங்கலத்திலிருந்து அம்பலவன் வேளான் என்ற படகோட்டி மகாமண்டலேசுவரரின் புதல்வியாரைச் சந்தித்து ஏதோ முக்கியமான செய்தி தெரிவிக்க வேண்டுமென அவசரமாக வந்தான். நான் அவனை உள்ளே அனுப்புவதற்குத் தயங்கிக் கொண்டிருந்த போது மகாமண்டலேசுவரரின் திருப்புதல்வியாரே அந்தப் பக்கமாக வந்து விட்டார்கள். சந்தித்துப் பேசிக் கொண்டதும், 'அவசரமாக இடையாற்றுமங்கலம் போவதாக, தங்களிடம் கூறிவிடுமாறு என்னிடம் சொல்லி விட்டுச் சென்று விட்டார்கள் இடையாற்றுமங்கலத்து நங்கை" என்று தெரிவித்து விட்டுக் காவலன் போய்விட்டான்.

"மகாராணியாரைச் சந்தித்து விடை பெற்றுக் கொள்ளாமல் போவதற்கு அவ்வளவு அவசரமான காரியம் என்ன



முன்னாள் சென்னை அண்டர்ஷெரீப் திரு என். எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ. நீலாயதாக்ஷிக்கும் திரு எஸ். கோபால கிருஷ்ணனுக்கும் சுவாமிமலையில் அதி விமரிசையாக விவாகம் நடைபெற்றது.

தான் வந்து விட்டதோ? இருந்தாலும் இடையாற்றுமங்கலத்து நங்கைக்கு இவ்வளவு அலட்சியம் ஆகாது!" என்று உதட்டைக் கடித்துக் கொண்டு சொன்னாள் விலாசினி.

"பரவாயில்லை! அது அந்தப் பெண்ணின் சுபாவம். அதைப் பற்றி நான் இப்போது கவலைப்படவில்லை. புவனமோகினி வந்து தெரிவித்த செய்திகள் உண்மைதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்! எல்லாவற்றையும் கேட்டு என் மனம் ஒரேயடியாகக் கலங்கிப் போயிருக்கிறது. போர்க்களத்திலிருந்து ஒரு தகவலும் இல்லை. இடையாற்று மங்கலத்துக்குச் சென்று விட்டுக் கூடிய விரைவில் அரண்மனைக்கு வந்து விடுவதாகச் சொல்லிச் சென்ற மகாமண்டலேசுவரரை இன்னும் காணோம்" என்று மகாராணி வானவன்மாதேவியார் கூறினார்.

"மகாராணிக்கு அந்தக் கவலை வேண்டாம். புவனமோகினி கூறியவை உண்மையா, இல்லையா என்பதை இன்று மாலைக்குள் நானும் அதங்கோட்டாசிரியர்பிரானும் விசாரித்துக் கூறி விடுகிறோம்" என்று உறுதி தெரிவித்த பவழக்கனிவாயர் ஆசிரியரையும் அழைத்துக் கொண்டு அப்போதே வெளிக் கிளம்பினார். ஒரு நினைவிலும் மனம் பதியாமல் அவர்கள் உண்மையை விசாரித்துக் கொண்டு திரும்பும் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் மகாராணி. விலாசினியும் புவனமோகினியும் உடனிருந்து ஆறுதல் தோன்றப் பேசிக் கொண்டிரா விட்டால் அன்றைய தினம் மகாராணிக்குத் தன் நினைவு தடுமாறிப் பித்துப் பிடித்திருக்கலாம். அந்த அளவுக்கு மனம் குழம்பி யிருந்தது.

அந்தி மயங்கிய சிறிது நேரத்துக்குப் பின் பவழக்கனிவாயரும், அதங்கோட்டாசிரியரும் திரும்பி வந்தார்கள். அவர்கள் என்ன கூறப் போகிறார்களோ என்று அறியப் பதைபதைத்துக் கொண்டிருந்தது மகாராணியின் நெஞ்சம். திரும்பி வந்தவர்களின் முகத்தில் மகிழ்ச்சியோ, மலர்ச்சியோ தென்படவில்லை. வாட்டமே மிகுந்திருந்தது.

"மகாராணீ! காலையில் புவனமோகினி வந்து கூறியவற்றில் பொய் எதுவும் இல்லை. எங்கு பார்த்தாலும் மகாமண்டலேசுவரருக்கு எதிராகக் கலகம் விளைப்பதற்குப் பலர் புறப்பட்டிருக்கிறார்கள். கழற்கால்மாறனார் முதலிய கூற்றத் தலைவர்களும், தளபதியும், ஆபத்துதவிகள் தலைவனும், இந்தக் கலகக்கூட்டத்துக்கு முதன்மையாளர்களா யிருக்கிறார்கள். தளபதியின் தங்கை ஈழ நாட்டில் இறந்தது உண்மைதானாம். அதற்கும், தளபதி போர்க்களத்துக்குப் போய்த் தலைமை தாங்கிப் போர் செய்ய முடியாமற் போனதற்கும், மகாமண்டலேசுவரரின் சூழ்ச்சிதான் காரணமென்று எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்" என்று அவர்கள் கூறினார்கள்.

"பொய்! முழுப் பொய், நான் இவற்றை நம்பவே மாட்டேன். வேண்டுமென்றே அவருக்கு எதிராக யாரோ சூழ்ச்சி செய்கிறார்கள். மகாமண்டலேசுவரரையே நேரில் சந்தித்துக் கேட்டாலொழிய நான் நம்ப மாட்டேன். அவர் அப்பழுக்கற்ற நேர்மையாளர்" என்று ஆவேசமுற்றவர் போல் கூச்சலிட்டார் மகாராணி. மற்றவர்கள் அவரிடம் என்ன சொல்வதென்று புரியாமல் வாயடைத்துப் போய்த் திகைத்து நின்றார்கள்.

மகாராணியே மீண்டும் பேசினார்: "நான் இப்போதே இடையாற்றுமங்கலத்துக்குப் புறப்பட்டுப் போகிறேன். அவரைப் பார்த்துக் கேட்கிறேன். அப்போதாவது உண்மை தெரிகிறதா, இல்லையா! என்று பார்க்கிறேன்."


"எங்கும் கலகக்காரர்கள் ஆயுதங்களோடு திரிகிற இச் சமயத்தில் தாங்கள் தனியே இடையாற்றுமங்கலம் புறப்படுவது கூடாது" என்று எல்லோருடைய குரல்களும் ஒன்றாக எழுந்து ஒலித்து மகாராணியை மறுத்தன. மகாராணி அதைக் கேட்கவில்லை. மறுநாள் பொழுது புலர்ந்ததும், புவனமோகினியை உடன் அழைத்துக் கொண்டு சிவிகையில் இடையாற்றுமங்கலம் புறப்படுவதற்கு உறுதி செய்து கொண்டு விட்டார் அவர். அந்தப் பிடிவாதத்தை எப்படித் தடுப்பதென்று தெரியாமல் ஆசிரியரும், பவழக்கனிவாயரும், விலாசினியும் அஞ்சிக் கொண்டிருந்தார்கள். இவர்களையெல்லாம் இதே நிலையில் விட்டு விட்டு மறுபடியும் போர்க்களத்துக்குச் சென்றால் அங்கே குமார பாண்டியனின் நிலையைப் பற்றிய விவரங்களை அறிந்துகொண்டு விடலாம்.

* * *

நள்ளிரவில் படைவீரர்களின் பாசறைகள் இருந்த பகுதியில் கலவரமும் குழப்பமும் எழுந்ததாகச் சென்ற பகுதியில் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? "படைவீரர்களுக்குள் ஏதாவதொரு

அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...
அவள் உபயோகிப்பது பாண்ட்ஸ்





நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

இலேசானதும் பனிக்கட்டிபோல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாது காத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச் செய்யும். எண் ணெய்ப் பசையில்லாத இந்த க்ரீம் தேய்த்துக்கொண்ட மறு விநாடி யிலேயே மறைந்துவிடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்கு முன் இந்த க்ரீமை தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.

சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்
தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)


நான் எப்பொழுதும் ஹமாம்
சோப்பையே வாங்குகிறேன்
புதுமுறையான மிருதுத்துவம் அளிக்கும்
இதன் தன்மையினால் மிருதுவான நுரை அளிக்கிறது.
இதை உபயோகித்து குளிக்கும்போது சத்திகரித்து புத்துணர்ச்சி அளிக்கிறது
ஹமாம் சோப் மிகவும் நேர்த்தியானது நறுமணமுள்ளது.
நீண்ட நாட்கள் நீடித்து நிற்கிறது.
மிகவும் சிக்கனமானது.
ஹமாம்
சோப்பை உபயோகித்து புத்துணர்ச்சி யுடனும் நறுமணத்துடனும் விளங்குங்கள்
HAMAM
TOILET SOAP
HAMAM
THY-2 TAM.
எங்கள் குடும்பத்தில் யாவரும்
ஹமாம் சோப்பையே விரும்புகிறார்கள்
ஓர் டாடா தயாரிப்பு—எனவே
அது நல்லதென்று உங்களுக்கே தெரியும்.

"சாதாரணமான தகராறு உண்டாகியிருக்கலாம். அதை நாமிருவரும் போய் உடனே தீர்த்து விடலாம்" என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டு எழுந்து சென்ற குமாரபாண்டியனும், சக்கசேனாபதியும் அங்கே போய்ப் பார்த்தவுடன் திடுக்கிட்டார்கள்.

படைவீரர்களல்லாத வெளி மனிதர்கள் பாசறைப் பகுதிகளில் வந்து வீரர்களைக் கூட்டம் கூட்டி ஏதேதோ கூறி மனத்தை மாற்றிக் கொண்டிருந்தார்கள். குமாரபாண்டியனும், சக்கசேனாபதியும் அந்த இடத்தை அணுகியவுடன் ஒரே எதிர்ப்புக் குரல்களாக எழும்பின.

"மகாமண்டலேசுவரரின் சூழ்ச்சிகளுக்கு அடிபணிய மாட்டோம்" என்றது ஒரு குரல்.

"தளபதி வல்லாளதேவர் வராவிட்டால் காலையிலிருந்து களத்தில் இறங்கிப் போர் செய்ய மாட்டோம்!" என்றது மற்றொரு குரல். தொடர்ந்து அதே இரண்டு எதிர்ப்பு வாக்கிய ஒலிகள் நூற்றுக் கணக்கில் பெருகி ஒலித்தன. எந்தக் காரியங்களுக்காகப் பயந்து மகாமண்டலேசுவரர் தன்னிடம் வாக்குறுதிகள் வாங்கினாரோ அது பயனில்லாமற் போய் விட்டதைக் குமாரபாண்டியன் அந்த நள்ளிரவில் அங்கு கண்டான்.

அத்தியாயம் 21

பொருள் மொழிக்காஞ்சி

சேந்தன் மகாமண்டலேசுவரரின் கால்களில் விழுந்து கெஞ்சிப் பார்த்தான். கதறினான்; அழுது அலறினான். தொழுது புலம்பினான். "சுவாமீ! நான் ஒரு வகையிலும் தங்கள் குமாரிக்குத் தகுதியற்றவன். என்னால் அழகும், இளமையும் நிறைந்த தங்கள் பெண்ணின் இன்பக் கனவுகள் சிதையக் கூடாது" என்றெல்லாம் அவன் கூறிய வார்த்தைகளை அவர் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

"அதிகம் பேசாதே; நீ எனக்குச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாய். நான் கொடுப்பதை வாங்கிக் கொண்டு தான் ஆகவேண்டும். என் பெண்ணின் கைகளை ஒரு காட்டின் இளவரசனிடம் பிடித்துக் கொடுப்பதைவிட உனக்குக் கொடுப்பதில் ஆயிரம் மடங்கு இன்பமடைகிறேன் நான். ஒரு காரியத்தை இப்படித்தான் செய்ய வேண்டுமென்று நான் தீர்மானித்துக் கொண்டபின் மாற்றவே மாட்டேன்! எனக்காக நீ இன்று வரை அடிமைபோல் உழைத்திருக்கிறாய். பொருளை வாரிக் கொடுத்து மட்டும் ஈடு செய்ய முடியாத நன்றி இது" என்றார் மகாமண்டலேசுவரர்.

சேந்தன் அதற்கு மேல் அவருடைய கட்டளையை மறுத்துப் பேசும் சக்தி இழந்தான். சிவன் கோவில் குறட்டில் ஒரு தூணடியில் கல்லோடு கல்லாகச் சமைந்து போய் உட்கார்ந்து விட்டான். தாங்கிக் கொள்ள முடியாத சோதனையைத் தாங்கிக் கொள்ள வேண்டுமென்றே அந்த இரவு அவன் வாழ்வில் இப்படி ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து சேர்த்ததா? தங்கத்துக்கு இரும்பால் பூண் பிடிக்கிறது போல் செல்வச் செருக்குடன் கூடிய இறுமாப்பு நிறைந்த குழல்மொழிக்குத் தான் தகுதியற்றவன் என்பது தோன்றித் தோன்றி நினைவு நெருப்பாக அவன் உள்ளத்தை வாட்டியது. 'செழிப்பும், கொழிப்புமாக உயர்ந்து நிற்கும் தங்கச் சிலை போன்ற குழல்மொழி எங்கே? நேற்றுவரை அவளை இடையாற்றுமங்கலத்து இளவரசியாகக் கருதி ஊழியன்போல் பணிபுரிந்த நான் எங்கே? அவளோ நானோ இப்படி ஒரு நினைவைக் கனவில்கூட நினைத்திருக்க முடியாதே! மகாமண்டலேசுவரர் ஏன் இப்படிப் பிடிவாதமாகச் சோதனை செய்கிறார்' என்று எண்ணியவாறே நெடுநேரம் இடிந்து போய் உட்கார்ந்திருந்தான். இரவு நீண்டு வளர்ந்திருந்தது. சேந்தன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு இருளில் எதிரே பார்த்தான். மகாமண்டலேசுவரர் உட்கார்ந்த இடத்திலேயே தூணில் சாய்ந்திருந்தார். கண்கள் மூடியிருந்தன. மகுடத்தை எடுத்த பின் அன்று அந்த மனிதருடைய முகத்தில் அவ்வளவு அமைதி எவ்வாறு வந்து பொருந்தியதென்று வியந்தான் சேந்தன். அந்த ஒரே நாளில், ஒரு சில நாழிகைகளில் அவர் கிறங்கி இளைத்துத் தளர்ந்து விட்டதுபோல் அவருடைய தோற்றம் காட்சியளித்தது. உள்ளே எரிந்து கொண்டிருந்த சிவன் கோவில் விளக்கின் மங்கலான ஒளியில் தூணில் சாய்ந்திருக்கும் அந்த அறிவு மலையை இமையாமல் பார்த்தான் அவருடைய அந்தரங்க ஊழியன். அவர் உணவே உட்கொள்ளவில்லை என்ற நினைவு அவனுக்கு ஏற்பட்டதும் பரபரப்போடு எழுந்து அருகிற் சென்று, "சுவாமி!" என்று மெல்லக் கூப்பிட்டான். அவர் கண் விழித்து, "என்ன வேண்டும், சேந்தா?" என்று புன்னகையோடு கேட்டார்.

"தாங்கள் சாப்பிட வேண்டும்."

"சேந்தா! நம்முடைய வள்ளுவர் பெருமான் இந்தச் சமயத்தில் நான் நினைத்துப் பார்ப்பதற்கென்றே ஒரு அழகான குறளை எழுதிவிட்டுப் போயிருக்கிறார்."

"என்ன குறள் சுவாமி, அது?"

"மருந்தோ மற்று ஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து."

என்பதுதான் அப்பா அந்தக் குறள். இனிமேல் நான் சாப்பிடுகிற சாப்பாடு

அடுத்த பிறவியில் இருக்கும். என்னைத் தொந்தரவு செய்யாதே; நீ போய்ப் பேசாமல் தூங்கு."

சேந்தன் இதைக் கேட்டுப் பொறுக்க முடியாமல் அழுதுவிட்டான்.

"அழாதே! நீ ஏன் அழுகிறாய்? ஆயிரக் கணக்கான பசுக்களுக்கு நடுவே தன் தாய்ப் பசுவை இனம் கண்டு அடையும் கன்றுக்குட்டி போல் வினைப் பயன் யாரையும் தவற விடாது. மேலே வீசி எறியப்பட்ட பொருள் கீழே விழுந்துதான் ஆக வேண்டும். இது வரையில் நல்வினைகள் என்னை மேலே வீசி எறிந்திருந்தன. நான் உயர்ந்த நிலையில் இருந்தேன். இப்போது அவை கைவிட்டுவிட்டன. அதனால் நான் விழுந்து விட்டேன்."

"சுவாமீ! இப்படி யெல்லாம் பேசாதீர்கள். நீங்கள் பேசப் பேச எனக்கு அழுகை குமுறிக் கொண்டு வருகிறது."

"தான் அழியுமுன் உலகத்துக்குத் தன் அனுபவ உண்மைகளில் முடிந்தவற்றை மொழிந்து விட்டுப் போவது நம் தமிழ் நாட்டு மரபு அப்பா! அதைப் 'பொருள் மொழிக் காஞ்சி' என்பார்கள். இது வரையில் நான் கூறியவற்றையெல்லாம் அப்படிப்பட்ட வகையில் ஏற்றுக்கொள். போ! நீ போய்த் தூங்கு! என்னைக் கொஞ்சம் தனிமையில் மூழ்கவிடு."

சேந்தன் எழுந்து போனான். தூக்கம் வரக் கூடிய நிலையா அது? அத்தனை ஆண்டுகளாக அந்த மேதையின் நிழலில் வாழ்ந்த வாழ்க்கையை மனத்தில் அசை போட்டுக் கொண்டே தூணடியில் விழுந்து கிடந்தான் அவன். கண்ணீர் கோவில் குறட்டை ஈரமாக்கியது.

விடிந்தது. முதல் நாள் மாலை செய்தது போலவே பறளியாற்றில் போய் நெடுநேரம் நீராடிவிட்டு ஈர உடையோடு வந்தார் மகாமண்டலேசுவரர். பிறகு சிவன் கோயிலுள் போய்த் தியானத்தில் அமர்ந்தார். சேந்தனும் நீராடி விட்டு அவருக்குப் பூக் கொண்டு வந்து கொடுத்தான். அவர் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. சேந்தனை ஓலையும் எழுத்தாணியும் கொண்டு வரச் சொன்னார். கொண்டு வந்து கொடுத்தான். ஏதோ எழுதத் தொடங்கினார்.

கதிரவன் மேற்கே சாய்கிற நேரத்துக்குக் குழல்மொழியோடு அம்பலவன் வேளான் அங்கே வந்து சேர்ந்தான். வருகிறபோது இருவருமே பெரிய அளவில் பதற்றமும் பரபரப்பும் அடைந்திருந்தனர்.

"சுவாமீ! தளபதியும் கழற்கால் மாறனும், ஒரு பெரிய கலகக் கூட்டத்தைக் கூட்டிக் கொண்டு இடையாற்று மங்கலத்தை நோக்கி வெறியோடு தாக்குவதற்கு ஓடி வந்து கொண்டிருக்கிறார்கள். நானும் தங்கள் புதல்வியாரும் அவர்களிடம் அகப்படாமல் இங்கு வந்து சேர்ந்தது தெய்வத் துணையால்தான்" என்று அம்பலவன் வேளான் கூறியதைக் கேட்டு மகாமண்டலேசுவரர் அதிர்ச்சியடைந்து விடவில்லை.

"நான் எதிர்பார்த்ததுதான். வரட்டும், விரைவாக வரட்டும்" என்று சர்வ சாதாரணமாகப் புன்முறுவலோடு பதில் சொன்னார். "அப்பா! மகாராணிக்குக் கூட இதெல்லாம் தெரிந்து விட்டது. புவனமோகினி என்ற பணிப்பெண் போய்ப் பார்த்துக் கொண்டு வந்து கூறினாள்" என்று குழல்மொழி சொன்ன போதும் வியப்படையவில்லை அவர்.

"பெண்ணே! உலகம் முழுவதும் தெரியட்டும். தெரிய வேண்டியதுதானே? மறைப்பதற்கு இனி என்ன இருக்கிறது? நான் இப்போது படுகிற கவலையெல்லாம் ஒன்றே ஒன்றுதான்! அதைப் போக்குவது உன் கையில் இருக்கிறது!" என்று தம் பெண்ணிடம் சொல்லி விட்டு அருகிலிருந்த சேந்தனையும், அம்பலவன் வேளானையும் சிறிது தொலைவு விலகிப் போய் இருக்குமாறு குறிப்புக் காட்டினார்; அவர்கள் சென்றார்கள்.

"நான் என்ன அப்பா செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் குழல்மொழி.

"எனக்காக நீ ஒரு மகத்தான தியாகம் செய்ய வேண்டும், மகளே!"

குழல்மொழி கண்களில் நீர் அரும்ப மருண்டு தயங்கி நின்றாள். மகுடமிழந்து, கம்பீரமற்றுச் சாதாரண மனிதரைப் போல் சிவன்கோவிலில் கிடக்கும் தந்தையைக் கண்டு பிழியப் பிழியக் கண்ணீர் சிந்தி அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

"என்னம்மா அப்படி என்னைப் பார்க்கிறாய்? இந்த இரண்டு மூன்று நாட்களில் நான் இவ்வளவு இளைத்துப் போய் விட்டேனே என்றுதானே பார்க்கிறாய்? போகட்டும். என் இளைப்பைக் கண்டு நீ வருந்த வேண்டாம். நான் கேட்டதற்கு மறுமொழி சொல்!"

நிருபர் திலகத்தின் பிரிவு

'ரேபன்' செய்தி ஸ்தாபனத்தின் சென்னை நிருபராக விளங்கி வந்த ஸ்ரீ எஸ். முத்துசாமி அவர்கள் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். ஸ்ரீ முத்துசாமி சென்னையின் புகழ்மிக்க நிருபர்களில் ஒருவராகப் பணியாற்றி வந்தார். செய்திகளைச் சேகரித்து அளிக்கும் துறையில் அல்லாது, இலக்கியம், இசை, நாடகம் ஆகிய துறைகளில் நிகரற்ற ரசிகராகவும் விளங்கி வந்தார். அவருடைய பிரிவினால் துயரத்தில் ஆழ்ந்துள்ள அவர் குடும்பத்தினர்க்கு நமது அநுதாபம் உரித்தாகுக.

"நான் எதைத் தியாகம் செய்ய வேண்டும், அப்பா?" குழல்மொழியின் குரலில் துயரக் கரகரப்படைத்து ஒலி மங்கியது.

"நான் ஒரு மனிதனுக்குத் தவிர்க்க முடியாதபடி கடன் பட்டிருக்கிறேன், மகளே! அந்தக் கடனை உன் தியாகத்தால் தீர்க்க வேண்டும். செல்வச் செருக்கோடு வளர்ந்து விட்ட உனக்கு மற்றவர்களை அதிகாரம் செய்யவும், ஆளவும், ஆட்படுத்தவும்தான் தெரியும். ஆனால் இன்றிலிருந்து நீ இன்னொருவருக்கு ஆட்பட்டு அடங்க வேண்டிய காலம் வந்து விட்டது. என்னுடைய அறிவின் அகந்தை அழிந்து விட்டது. அதைப் போலவே உன்னுடைய அன்பின் அகந்தையும் அழிய வேண்டியதுதான். செல்வம், செருக்கு, பிடிவாதம், முரண்டு இவற்றையெல்லாம் மறந்து விட்டால் தான் நான் கூறுகிற தியாகத்தை நீ செய்ய முடியும் அம்மா!"

"உங்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன், அப்பா!"

"இப்போது சொன்ன வார்த்தை மெய்தானா, மகளே? எனக்காக எதையும் செய்வாய் அல்லவா?"

தந்தையின் இந்தக் கேள்வியைச் செவியுற்றதும் குழல்மொழி விசும்பலோடு அழத்தொடங்கி விட்டாள். "நான் எப்போது அப்பா உங்கள் சொல்லை மீறியிருக்கிறேன்? என்னைத் திரும்பத் திரும்பக் கேட்கிறீர்களே?" என்று அவள் அழுகைக்கிடையே கேட்டபோது அவர் சிரித்துக் கொண்டே சொல்வார்:

"அப்படியானால் கேள்! இந்தக்கணமே குமார பாண்டியனைப் பற்றிய உன் கனவுகளை அழித்து விடு. தன் வாழ்நாளில் எனக்காகவே தன்னை அடிமையாக்கிக் கொண்டு உழைத்த இந்த நன்றியுள்ள மனிதன் சேந்தனை மணந்து கொண்டு அவனோடு செல். இது என் கட்டளை."

"அப்பா......!" என்று அலறினாள் குழல்மொழி. அதற்கு மேல் வார்த்தைகளே எழவில்லை அவளுக்கு. அப்படியே மின்னற் கொடிபோல் சுருண்டு அவர் காலடியில் விழுந்தாள் அவள். 'கோ'வென்று கதறியழுத மகளின் தவிப்பு அவர் மனத்தை மாற்றவில்லை. "அப்பா! என்னைக் கொன்று விடுங்கள். உங்கள் கையாலேயே கொன்று விடுங்கள். என்னால் இந்தத் தியாகத்தைச் செய்ய முடியாது" என்று அவள் கதறியபோது அவர் ஒவ்வொரு வார்த்தையாக யோசித்துப் பேசுபவர் போல் அவளைத் தூக்கி நிறுத்தி முகத்தைப் பார்த்துக் கொண்டே பேசினார்.

"உன்னை ஏன் கொல்ல வேண்டும், அம்மா? என்னைக் கொன்று கொள்கிறேன் நான். சொன்ன வார்த்தையைக் கேட்காத ஒரு முரட்டுப் பெண்ணைப் பெற்றதற்காக என்னை நானே கொன்று கொள்கிறேன். தியாகம் செய்து புகழ் தேடிக் கொள்ளும் உயர்ந்த பண்புள்ள மகளை நான் பெறவில்லை போலிருக்கிறது. கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்? நீ போ......உன் விருப்பம் போல வாழ்!" என்று சொல்லி விட்டு மேலாடையால் கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்பி நடந்தார் அவர். நடை தள்ளாடித் துவண்டது.

"நில்லுங்கள்."

நடந்து சென்றவர் நின்று திரும்பிப் பார்த்தார். குழல்மொழிதான் கூப்பிட்டிருந்தாள். அருகில் வந்து நின்று தந்தையின் முகத்தையே பார்த்தாள் அவள். விநாடிகள் உணர்ச்சிகளில் கரைந்து கொண்டிருந்தன. அவர் முகத்தையும், கண்களையும் பார்க்கப் பார்க்க அவள் மனத்தில் கல்லாக இருந்த ஏதோ ஓர் உணர்வின் இறுக்கம் இளகி நெகிழ்ந்தது. அடுத்த கணம் அழுக்குத் துடைக்கப் பட்ட கண்ணாடிபோல் அவள் முக பாவம் புனிதமானதொரு மாறுதல் அடைந்தது. கண்களில் உறுதியின் ஒளி வந்து குடிகொண்டது.

"அப்பா! நான் சேந்தனை மணந்து கொள்கிறேன்" என்று திடமான குரலில் சொன்னாள் குழல்மொழி. அவர் ஆச்சரியத்தோடு முகம் மலர்ந்து அவளைப் பார்த்தார். அவளைச் சிறு குழந்தை போல் கருதி அருகில் அழைத்துத் தழுவி உச்சி மோந்தார். "சேந்தா! இங்கே வா" என்று உற்சாகத்தோடு அழைத்தார் அவர். சேந்தன் ஓடிவந்து வணங்கினான்.

"இந்தா! உன் மனைவியை அழைத்துக் கொண்டுபோ. இருவரும் பறளியாற்றில் நீராடி வாருங்கள்"—பல நாட்கள் பழகிய காதலனை அணுகுவதுபோல் குழல்மொழி அவனை அணுகி வந்தாள். சேந்தன் கூசிப் பயந்து ஒதுங்க முயன்றான். அவள் விடவில்லை.

"ஒதுங்கினால் மட்டும் உறவு போகாது. வாருங்கள்!" — குழல்மொழி துணிவாக அவன் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு போனாள். அந்தக் கை தன் மேல் பட்டபோது மலர்க் கொத்து ஒன்று தீண்டியது போன்ற உணர்வை அடைந்தான் சேந்தன். அவன் உடல் சிலிர்த்தது. வயிற்றுப் பசியுள்ள பிச்சைக்காரனுக்குப் பட்டுப் பீதாம்பரம் கிடைத்தது போல் அவன் எண்ணமெல்லாம் தாழ்வு மனப்பான்மையும் கூச்சமும் உண்டாயிற்று. குழல்மொழி கலகலப்பாகப் பேசிப் பழக முயன்றும் சேந்தன் கூசிக் கொண்டேயிருந்தான். அவளால் அவ்வளவு சுலபமாகத் தன்னை எப்படி மாற்றிக் கொள்ள முடிந்ததென்று அவனுக்குப் புரியவே இல்லை.

இருவரும் நீராடி விட்டுச் சிவன் கோயில் வாயிலை அடைவதற்குள் இடையாற்று மங்கலம் நிலையைச் சுற்றி ஒரு பெருங் குழப்பம் உண்டாயிற்று. கூட்டம் கூட்டமாக ஆயுதம் தாங்கிய முரட்டு மனிதர்கள் ஓடி வந்தார்கள். மரங்களெல்லாம் வெட்டப்படும் ஓசை காதைப் பிளந்தது. ஒரே கலக ஓலம்தான். கலகக் கும்பல் நிலையை நெருங்கி விட்டது.

அந்த நேரத்தில் குழல்மொழியையும், சேந்தனையும் சிவன் கோயிலுக்குள்

அழைத்துப் போய் மலர் தூவி ஆசி கூறினார் மகாமண்டலேசுவரர். பின்பு இருவரையும் வெளியே அழைத்து வந்தார். "இங்கிருந்து போய் எங்கேயாவது நன்றாக வாழுங்கள். அது போதும். என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். கலகக் கூட்டம் வந்துவிட்டது. வேறு வழியாகத் தப்புங்கள்" என்று அவர்களை அவசரப்படுத்தினார் மகாமண்டலேசுவரர்.

"அப்பா! நீங்களும் எங்களோடு வந்து விடுங்கள். இங்கே இருக்க வேண்டாம்" என்றாள் குழல்மொழி.

"இல்லை! நான் வரப் போவதில்லை. நீங்கள் புறப்படுங்கள்" என்று சொல்லி விட்டு உள்ளே போய் ஒரு ஓலையை எடுத்து வந்து சேந்தனிடம் கொடுத்தார். "சேந்தா! எப்போதாவது முடிந்தால் இந்த ஓலையை மகாராணியிடம் கொடுத்து விடு" என்று சொன்னவர் இருவரையும் ஒரு முறை நன்றாகப் பார்த்து விட்டு விறுட்டென்று சிவன் கோவிலுள் நுழைந்து கதவை அடைத்து உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டார். வெறித்தனமான கூச்சல்களோடு ஆட்கள் ஓடி வரும் ஓசை மிக அருகில் கேட்டது.

சேந்தன் குழல்மொழியை இழுத்துக் கொண்டு ஓடினான். புதர்களிலும் மரக் கூட்டங்களின் அடர்த்தியிலும் பதுங்கிப் பதுங்கி ஆற்றைக் கடந்து இரவோடு இரவாக முன்சிறைக்குப் போகிற வழியில் கடந்தார்கள் அவர்கள்.

மகாமண்டலேசுவரர் சிவன் கோவில் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தபோது இடையாற்று மங்கலம் மாளிகை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அழகான நந்தவனமும், தோட்டமும், வசந்த மண்டபமும் சீரழிக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் தனியாக இருந்த அந்தச் சிவன் கோவில் யாருடைய கண்களிலும் படவில்லை போலும்.

உருக்குலைந்து சீரழிந்து எரிந்துகொண்டிருக்கும் அந்த நிலையைப் பார்த்துக் கொண்டே கோவில் குறட்டில் நின்ற மகாமண்டலேசுவரர் கால் தளர்ந்து போனதன் காரணமாக மெதுவாக உட்கார்ந்தார். தாகம் நெஞ்சை வறளச் செய்தது. தொண்டைக் குழியை ஏதோ அடைத்தது. கண்கள் வெள்ளை விழி தெரியும்படி சொருகின. வாய் கோணியது. மெல்லச் சாய்ந்து படுத்துக் கொண்டார். பின்பு எழுந்திருக்கவேயில்லை. மறுநாள் காலையில் தளபதி வல்லாளதேவனும், கழற்கால் மாறனும் தற்செயலாக அங்கே வந்து அவருடைய சடலத்தைக் கண்டனர்.

"மனிதர் நம்மை முந்திக் கொண்டு விட்டார்!" என்று கூறிக் கொடுமையாகச் சிரித்தவாறே அந்த உடலைப் புரட்டித் தள்ளினான் தளபதி. பழி வாங்கிவிட்ட பெருமிதம் அவனுக்கு!

அருணோதயத்தின் அழகை அனுபவித்துக் கொண்டே முன்சிறை அறக் கோட்டத்தின் வாயிலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த கோதை யாரோ வருகிற காலடி ஓசை கேட்டு நிமிர்ந்தாள்.

அவள் எதிரே நாராயணன் சேந்தனும், குழல்மொழியும் வந்து நின்று கொண்டிருந்தனர். கோதைக்கு மைத்துனனைக் கண்ட மகிழ்ச்சி பிடிபடவில்லை. "வாருங்கள், மைத்துனரே! ஓய்வாக வந்திருக்கிறீர்களே..." என்று அவள் ஆர்வத்தோடு வரவேற்றாள்.

"ஓய்வுதான்! நிரந்தரமான ஓய்வு...... நெடுங்காலத்துக்கு ஓய்வு" என்று சிரித்துக் கொண்டே கூறினான் சேந்தன். அதற்குள் அண்டராதித்தனும் அங்கு வந்து விட்டான். சேந்தனும், குழல்மொழியும் அண்டராதித்தனையும் கோதையையும் வணங்கி ஆசி பெற்று உள்ளே சென்றார்கள். (தொடரும்)

கொச்சைத் தமிழ்

வேறுபாடு

ஏட்டுத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் எத்தனையோ வகைகளில் வேறுபாடு உண்டு. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம். பொருளுடையவனைச் செல்வன் என்பது ஏட்டுத் தமிழ்; பணக்காரன் என்பது பேச்சுத்தமிழ். இரவலன் என்பது ஏட்டுத் தமிழ். பிச்சைக்காரன் என்பது பேச்சுத்தமிழ். இவ்வாறு பல சொற்களில் 'காரன்' என்பது ஆண்பாற் பெயர் விகுதியாகவும், 'காரி' என்பது பெண்பாற் பெயர் விகுதியாகவும் வழங்கக் காணலாம். வீட்டுக்காரன், வேலைக்காரன், தோட்டக்காரன், சமையற்காரன் இவை ஆண்பாற் பெயர்கள். வீட்டுக்காரி, வேலைக்காரி, தோட்டக்காரி, சமையற்காரி, இவை பெண்பாற் பெயர்கள். ஆங்கில வாடை அதிகமாக வீசும் இடங்களில் வேலைக்கார், தோட்டக்கார், சமையற்கார் என்று ஈறு கெட்டு வழங்குதலும் உண்டு. இதற்கும் மேலாகக் கொச்சைத்தமிழ் சென்னையில் கொழுத்து விட்டு வளர்ந்திருக்கிறது. அண்ணன், தம்பி, அப்பன், மாமன் இவர்களை முறையே 'அண்ணங்காரன், தம்பிக்காரன், அப்பங்காரன், மாமங்காரன்' என்று கூறுவதைக் கொச்சைத் தமிழிலே கேட்கலாம். அப்படியே அக்காளை 'அக்காக்காரி' என்றும் அம்மையை 'அம்மைக்காரி' என்றும் மாமியை 'மாமிக்காரி' என்றும் வழங்குவர்.

— பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை



அத்தியாயம் 21

உள்ளம் துள்ளியது!

பாபு சைக்கிளில் ஏறிக் கொண்டு அந்த முன்ஹாலை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றான். அது வரையில் முகத்தைச் சுளித்துக் கொண்டுநின்ற சொர்ணம்பாள்குரலில் வெறுப்புத் தொனிக்க, "என்ன விஷயம்?" என்று உஷாவிடம் கேட்டாள்.

"ஒன்றுமில்லை!" என்றாள் உஷா அலட்சியமாக.

"எதற்கு இவன் அடிக்கடி இங்கே வருகிறான்? மிஸஸ் மீனாட்சி வீட்டு வேலைக்காரன் தானே இவன்?"

"அடிக்கடி ஒன்றும் வரவில்லை; இங்கே அவன் வந்து ஒரு வருஷத்துக்கு மேலாகிறது!"

தேன் கிளை

ஆர்வி

"அடேயப்பா! வருஷம், மாசம், தேதியெல்லாம்கூடக் கணக்குவைத்திருக்கிறாய் போலிருக்கிறதே! அப்படியே இருக்கட்டும். இப்பொழுது எதற்கு வந்து விட்டுப் போகிறான்? என்ன கேட்டு விட்டுப் போகிறான்? இவன் பேசுவது வேலைக்காரன் பேசுகிற பேச்சாக இல்லையே. ஏதோ அதிகாரமாக உத்தரவு போட்டு விட்டுப் போகிறானே!"

உஷாவுக்கு ஏனோ கோபம் வந்தது. முகம் செவசெவக்க, "எல்லாவற்றையும் நீ ரொம்பக் கண்டாயோ?" என்று எரிந்து விழுந்தாள்.

"நான்தான் அவன் பேசின லட்சணத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேனே!"

"அப்படியானால் என்னை ஏன் கேட்கிறாய்? நீதான் ஒட்டுக் கேட்டிருக்கிறாயே!"

"ஏன்? நீங்கள் பேசுவதை நான் கேட்கக்கூடாதோ? அவ்வளவு ரகசியமோ?"

தன் தாய் இத்தனை கொடுமையாகப் பேசி உஷா இது வரையில் கேட்டதேயில்லை. அவளுக்குக் கோபத்தோடு ரோசமும் குமுறிக் கொண்டு வந்தது; அழுகையே வந்து விடும்போல் இருந்தது.

"ரகசியமோ ரகசியமில்லையோ, நீ எதற்காக ஒட்டுக் கேட்பது?"

"எல்லாம் காரியத்தோடு தான் கேட்டேன். நீ என்ன பச்சைக் குழந்தை என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயா? கண்டவன் வந்துபேசினால், கண்ணை மூடிக் கொண்டு காதைப் பொத்திக் கொண்டு இருந்து விட வேண்டும் என்கிறாயா?"

"நானும் அதையேதான் கேட்கிறேன். நான் என்ன பச்சைக் குழந்தை என்று எண்ணுகிறாயா? கண்டவனோடு எல்லாம் பேசிக் கொண்டிருக்க!"

"இவன் கண்டவன் இல்லாமல், நமக்கு ரொம்பத் தெரிந்தவனோ?"

"தெரிந்தவன் தான்; தெரிந்தவன் தான்! பொன்னிக்குத் தெரிந்தவன்; குப்பனுக்குத் தெரிந்தவன்; மீனாட்சிக்குத் தெரிந்தவன்; உனக்கும் தெரிந்தவன்; எல்லோருக்குமே தெரிந்தவன் தான்! போதுமா?" என்றாள் உஷா.

"உனக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம் வருகிறது?"

"எனக்கு ஒன்றும் ஆத்திரம் வரவில்லை; நீ பேசுவதைக் கேட்டால் எரிச்சல்தான் வருகிறது!"

"வரும். வரும்; எரிச்சல் மட்டுமா வரும்? எல்லாமே வரும். புத்தி கெட்டுப் போய் உனக்குத் தலைக்குமேல் இடம் கொடுத்தேன் பார்! எரிச்சல் மட்டுமா வரும்? ஆத்திரம்கூட வரும்!" என்றாள் சொர்ணாம்பாள்.

"என்னைக் கண்டால் உனக்கு இப்போது பிடிக்கவில்லை. உனக்கு உன் சின்னப் பெண்தான் ஒசத்தி. நான் மட்டம். இல்லாவிட்டால் என்ன பேசுகிறோம் என்று ஒட்டுக் கேட்பாயா? கண்டதை யெல்லாம் வாய் கூசாமல் வந்து கேட்பாயா?"


உஷா இவ்வளவு வெளிப்படையாக இதுவரையில் குற்றம் சாட்டியதில்லை. அதைக் கேட்டுச் சொர்ணாம்பாள் வாயடைத்து நின்றாள். அந்தப் பார்வையின் முன்னால் மலையத்தனை குற்றத்தைச் செய்து விட்டு, கடுகாகச் சிறுத்து நிற்பது போல் அவள் உணர்ந்தாள்.

"என்னை உனக்கு எப்பொழுது பிடிக்கவில்லையோ, நான் என் இஷ்டப்படி யாரோடு வேண்டுமானாலும் பேசுவேன்; எங்கே வேண்டுமானாலும் போவேன். நீ அதிலெல்லாம் தலையிட வேண்டியதில்லை. அவனைப் போய் வேலைக்காரன் என்று வெகு இளப்பமாய்ச் சொல்லி விட்டாய்! ஆனால் அந்த மீனாட்சி அத்தை அவனுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்திருக்கிறாளோ அதில் பாதிகூட எனக்கு இந்த வீட்டில் இல்லை. அவனிடம் அவள் எவ்வளவு பிரியமாக இருக்கிறாளோ அதில் கால்வாசிகூட என்னிடம் உனக்குப் பிரியமில்லை. ஆனால் இதற்கெல்லாம் மட்டும் வந்து விடுகிறாயே!"

"ம்...!" என்று பேசத் தோன்றாமல் பெருமூச்சு விட்டாள் சொர்ணாம்பாள்.

"நீ என்ன எனக்குத் தலைக்கு மேல் இடம் கொடுத்து விட்டாய்? நான் அதற்குத் தகுதியில்லாமல் அப்படி என்ன குற்றம் செய்து விட்டேன்?"

இதற்கெல்லாம் சொர்ணாம்பாளிடம் ஒரு விடையும் இல்லை. "நீ என்ன செய்வாய்? நான்தான் செய்தேன்? உன்னிடம் பேச வந்தேன் பார், அது தப்புத்தான்!" என்று சொல்லிக் கொண்டே வந்த வழியே போனாள்.



"என்ன உஷா, அப்படியே விக்கிச்சுப் போய் நிக்கறே?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் குப்பன். உஷா நெஞ்சு தழுதழுக்க, "ஒன்றுமில்லை; சும்மாத்தான்!" என்றாள்.

"பாபு வந்திருந்தானா இங்கே?"

"ஆமாம்."

"போகப் போறியா அங்கே?"

உஷா அவன் முகத்தையே ஒரு கணம் பார்த்து விட்டு, "ஏன் போகக் கூடாதோ?" என்று கேட்டாள்.

குப்பன் மாடியைக் காட்டி, "அவுங்க எதுவும் சொல்ல மாட்டாங்களா? காணு கூடாது என்கிறேன்!" என்றான்.

"அதில் ஒன்றும் தப்பு இல்லையே?"

"என்னைக் கேட்டா?"

"பின்னே யாரைக் கேட்பது? நீதான் அப்பாவுக்கே யோசனை சொல்லிக் கொடுக்கிறவனாச்சே!"

குப்பன் இந்தப் பரிகாசத்தைக் கேட்டுச் சிரித்துவிட்டு, "உன்னைப் போலப் பங்களாவிலே பிறந்தவங்க அந்தக் குடிசைகள் இருக்கிற தோட்டத்துக்குப் போறது தப்புன்னா, அது தப்புத்தான்! ஆனால் எசமான் என்னை இதுக்கெல்லாம் யோசனை கேட்க மாட்டாரு. கிளப்பிலே சீட்டாடறதுக்கு நாத்தியெட்டுக்குள்ளே ஒரு எண்ணைச் சொல்லச்சொல்லி மட்டும்தான் கேட்பாரு. தப்பு-சரியெல்லாம் அவரே பாத்துக்குவாரு!" என்றான்.

அவனுடைய வேடிக்கைப் பேச்சிலே மறைந்திருந்த உண்மையைக் கண்டறிந்தவனைப் போல, "அதே போல நானும் பார்த்துக் கொள்கிறேன். வண்டியை எடு! தோட்டம் எப்படியிருக்கிறது என்று பார்த்து விட்டுத்தான் வருகிறேனே!" என்று புறப்பட ஆயத்தமானாள் உஷா.

"அம்மாவைக் கேட்க வேண்டாமா?"

"தோட்டத்தில் என்னை யாரும் விழுங்கி விட மாட்டார்களே! அப்புறம் என்ன பயம்? இதற்கு ஏன் அம்மாவைப் போய்க் கேட்க வேண்டும்?"

"அவசியமில்லையானால் சரி!"

உஷா ஐந்து நிமிஷங்களுக்குள் வேறு ஆடைகளை அணிந்துகொண்டு வந்து, "போகலாமா, குப்பா?" என்றாள்.



குப்பன் மாடிப் படிகளிலிருந்து இறங்கிக் கொண்டே, "ஓ, வண்டி ரெடியா இருக்குது!" என்றான்.

"ஒரு நிமிஷம்!" என்று சொல்லி விட்டு, ஏதோ நினைவுக்கு வந்தவளைப் போல உஷா உள்ளே போய்விட்டு மீண்டும் வந்தாள். வண்டி புறப்பட்டதும், "ஆமாம், நான் டிரஸ் பண்ணிக் கொள்வதற்குள் மாடிக்கு ஏன் போனாய்?" என்று கேட்டாள்.

"பொன்னியைப் பார்த்துச் சொல்லி விட்டு வரத்தான் போனேன்!"

"பொய் சொல்லாதே. ஏன் போனாய் என்று எனக்குத் தெரியும்!"

குப்பன் முகத்தைத் திருப்பாமலே, "அதெல்லாம் தப்பு, உஷா. நீதான் சிறு பிள்ளைன்னா? நான் அப்படியா? அப்புறம் என்னைத்தானே சொல்வாங்க! ஒரு வார்த்தை சொல்லிப்புட்டா மேலே வம்பு இல்லே பாரு!" என்றான்.

"அதுக்காகச் சொல்லப் போனாயாக்கும்!"

"என்ன சொல்லிட்டேங்கறே! 'உஷாவுக்கு இப்படிச் சுத்திக்காட்டிப்பிட்டு வந்திடறேன்'னேன். சரின்னாங்க. முடிஞ்சுது சங்கதி!"

"இந்தப் பொய்யைச் சொல்லத்தான் யோக்கியன் மாதிரிப் போனாயோ? அப்புறம் நான்போய் உண்மையைச் சொல்லி விட்டால் என்ன செய்வாய்?"

குப்பன் உஷாவின் பக்கம் திரும்பினான். அவன் முகம் பரிதாபமாகக் கெஞ்சுவது போல் இருந்தது.

மாலைச் சூரியனது ஒளி அந்தத் தோட்டத்தின் உச்சிக்குப் போய்விட்டது. காற்றில் மெல்ல அசைந்தாடிய தென்னை மட்டைகள் அந்த ஒளி பட்டுப் பொன் னிறமாகச் சிரித்து அவளை வரவேற்றன. வண்டி வெல்லப் பிள்ளையார் வீற்றிருந்த இடத்துக்கு எதிரே, சாலையிலேயே நின்றது. முப்பது நாற்பது கஜதூரம் நடந்து தான் அங்கே போக வேண்டும். உஷா வண்டியை விட்டு இறங்காமலேயே ஓரமாக வந்து உட்கார்ந்து அந்த இடத்தைப் பார்த்தாள். அந்த இடம் கால் வாங்கின எழுத்துப்போல் ஒடுங்கி, உள்ளடங்கிக் கிடந்தது. இரண்டு புறமும் குடிசைகள்; வேலி அடைப்புகள். மசியால் எழுதப்பட்டிருந்த சங்கத்தின் அட்டைத் தட்டி, சங்கம் என்பதையே கேலி செய்வது போலிருந்தது.

"இளைஞர் சங்கம் — வெள்ளையன் தோட்டம்."

மோட்டார் வந்த சத்தத்தைக் கேட்டு, முருங்கை மரத்தடியில் ஒரு தலை எட்டிப் பார்ப்பதைக் கவனித்தாள் உஷா. ஆனால் அதைக் கவனிக்காதவள்போல் "இங்கு யாரையும் காணோமே, குப்பா!" என்றாள்.

குப்பன் வண்டியை விட்டிறங்கி, கதவைச் சத்தமிடாமல் சாத்தினான். "இரு; நான் போய் யாராவது இருக்கிறார்களான்னு பார்த்து விட்டு வரேன்!" என்று கூறிவிட்டுக் கொட்டகையை நோக்கிச் சென்றான்.

அவன் அந்தப் பக்கம் சென்றதும் இந்தப் பக்கமாக ஒரு பெண் அவள் வண்டிக்கு அருகில் வந்து நின்றாள். களையான முகம்; பளிச்சென்ற பல் வரிசை; பதினாறு பதினேழுதான் இருக்கும் வயது. "நீங்கதான் உஷாவா!" என்று சன்னக் குரலில் இனிமை சொட்டக் கேட்டாள் அந்தப் பெண்.

உஷா சட்டென்று திரும்பி, "ஆமாம்" என்பது போலத் தலையை அசைத்தாள். அவள் யார், அவளுக்குத் தன் பெயர் எப்படித் தெரிந்தது என்ற எண்ணம் கூட உஷாவுக்கு உண்டாக வில்லை. ஆனால் அவள் அத்துடன் இந்த இடத்தை விட்டுப் போய் விட்டால் போதும் என்ற எண்ணமே உண்டாயிற்று. அவ்வளவு கூச்சமாக இருந்தது.

"எம் பேரு தேவானை!"

"அப்படியா, வணக்கம்!" என்று கும்பிட்டாள் உஷா.

தேவானை சுட்டி மயிர் பறக்க, கன்னம் குழியச் சிரித்து, "ரெண்டு பேரும் இருக்காங்க! ஆனா சந்தர்ப்பம்தான் சரியா யில்லே!" என்று பிற்பகுதியை ரகசியமாகக் கூறினாள்.

"இரண்டு பேர் யார், யார்?"

"அதுதான் வந்து மூத்த வீட்டுப் பாபு. அப்புறம் அதோடே கிடேகிதரு!"

"யாரு, சண்முகமா?"

தேவானையின் கண்கள் சட்டென்று நாணத்தால் சுழியிட்டன. கொய்யாத் துண்டம் போன்ற உதடுகள் குறுகுறுப் பால் குவிந்து கொண்டன.

"அதைத் தெரியுமா, உங்களுக்கு?"

"கேள்விதான் ; பார்த்ததில்லை."

"எனக்கும் அப்படித்தான். இல்லாட்டி உங்களை எப்படி எனக்குத் தெரியும்?"

"சண்முகம் உனக்கு உறவா?"

தேவானை காலால் தரையைக் கீறிக் கொண்டு, "ஊஹூம்" என்று தலையை வேகமாக ஆட்டினாள்.

"ரொம்ப நாளாகப் பழக்கமா?"

"க்குங்......ஊஹூம்!" — அவளுடைய கால் கீறித்தட்டுப் போட்டது.

"இதுக்கு ஏன் இப்படி வெட்கப் படறே?"

"யாரு வெட்கப்பட்டாங்க? எனக்கு என்ன வெட்கம்? க்குங்...அது யாரோ, நாங்க யாரோ?" வலது கால் பெருவிரல் கீறித்தட்டுவட்டத்தைப் பூர்த்திசெய்தது.

உஷாவுக்கு உண்மை புரிந்து விட்டது. "உங்கள் இரண்டு பேருக்கும் இப்போது ஏதாவது சண்டையா?" என்றாள்.

தேவானைக்குக் குப்பென்று முகம் சிவந்தது. இதற்குள் சண்முகம் வேகமாக வருவதைப் பார்த்து விட்ட அவள் அந்த இடத்தை விட்டுப் போய் விட முயன்றாள். சண்முகம் வழியை மறித்துக் கொண்டு வந்ததால் அவள் சற்று ஒதுங்கி நின்றாள்.

சண்முகம் கிட்டத்தட்ட பாபுவைப் போலத்தான் இளமை முறுக்கோடு காணப்பட்டான். ஆனால் கத்தரித்து

விடப்பட்ட இள மீசையும் சந்தனப் பொட்டும் அவன் அதிகப் பொறுப்பைச் சுமந்து கொண்டிருப்பவனைப் போல் உணர்த்தின. அவன் கை யெடுத்து வணங்கி விட்டு, உஷாவை இறங்கி வரச் சொல்லி அழைத்துக் கொண்டு போனான். அவன் தேவானையைப் பார்த்தும் பாராதவனைப் போல், "இந்தா! அப்புறம் முழிச்சுக்கிட்டு நிக்கலாம்; இப்போ இவங்களை அழைச்சுக்கிட்டு வரணும்!" என்று சொல்லிவிட்டு முன்னால் போனான்.

"அதிகாரத்துலே ஒண்ணும் குறைச்சலில்லே!" என்று தேவானை முணுமுணுத்தது அவன் காதுகளில் விழவில்லை. ஆனால் உஷாவுக்குத் தெளிவாகக் கேட்டது. அவளுக்கு எல்லாம் புதுமையாக இருந்தது. இது போன்ற இடங்களுக்கு அவள் இதுவரையில் வந்ததே யில்லை.

"குனிஞ்சு, குனிஞ்சு!" என்று எச்சரித்தான் தேவானை.

பணிவோடு வாயிலில்நுழையும்போதே, "வரட்டுமே; இந்த நாயத்தை அதுங்கிட்டேயும்தான் சொல்லிப் பாப்பமே!" என்று ஒரு பெண் குரல் பல்லைக் கடித்துக்கொண்டு உறுமியது.

டிரைவர் குப்பனும் பாபுவும் ஓலைத் தடுக்கில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு எதிரே, படியாத தலையுடன் பத்திரகாளியைப் போல் நின்று கொண்டிருந்தாள் பாஞ்சாலி. உஷாவைக் கண்டதும் அவள் சிறிது ஒதுங்கி நின்று கொண்டாள். பாபுவின் முகத்தில் சுரத்தையே காணோம். அவன் மிகவும் பிரயாசைப்பட்டுச் சிரிக்க முயன்றான். குப்பன் மட்டும் எழுந்திருந்து, "நீயே வந்திட்டியா, உஷா! இதுதான் இவங்க சங்கம். இவங்க திட்டம் இன்னிக்கு மாறிப் போச்சாம். இதோ பாத்தியா, நீ கொடுத்த புஸ்தகங்கள் எல்லாம்!" என்றான்.

ஏதோ அசந்தர்ப்பமான வேளையில் வந்து விட்டதாகத் தோன்றியது உஷாவுக்கு. பின்னால் வந்த சண்முகம், கொட்டகைச் சார்ப்பிலிருந்து ஒரு தீப்பெட்டியை எடுத்துத் தேவானையிடம் போட்டு, "இந்தா விளக்கைக் கொளுத்து!" என்றான். பிறகு புதிய ஓலைத் தடுக்கு ஒன்றை எடுத்துப் போட்டு, "முதல்லே உக்காருங்க இப்படி!" என்று உஷாவைக் கேட்டுக் கொண்டான்.

"இல்லே; உட்காருவதற்கு இல்லே!" என்றாள் உஷா.

"உடனே போக வேண்டியதுதான்!" என்றான் குப்பன்.

ஆனால் பாபுவின் கண்களைப் பார்த்த உஷா அவனுடைய ஏக்கத்தை உணர்ந்து மறு வார்த்தை பேசாமல் காலை மடக்கிக் கொள்ள முடியாமல் உட்கார்ந்து கொண்டாள். இதைப் பாஞ்சாலியும் கவனித்தாள்; குப்பனும் கவனித்தான். ஆனால் தேவானையும் சண்முகமும் அப்போதுதான் விளக்குக்கு மண்ணெண்ணெய் இல்லை என்பது பற்றிச் சைகை செய்து கொண்டிருந்தார்கள்.

சிரிக்காதே!

தலைப் 'பூ'

"பூவும் மணமும் என்ற என்னுடைய புஸ்தகத்தை சினிமாப் பிடித்துவிட்டார்கள். ஆனால்தலைப்பைத் தான் மாற்றிவிட்டார்கள்."

"உங்கள் பாடு தேவலேயே. என் புஸ்தகம் ஒன்றை அனுப்பினேன், தலைப்பை மட்டும் எடுத்துக் கொண்டு புஸ்தகத்தைத் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

ஆப்பரோஷம்!

"இந்த ஆப்பரேஷன் பயங்கரமானதா டாக்டர்!"

"நல்ல ஆளய்யா! நீங்க கொடுக்கிற 25 ரூபாய்க்குப் பயங்கர ஆபரேஷன் வேறு பண்ணுவாங்களா?"

குளிப் 'பாட்டி!'

"என்னுங்கறேன்! இந்தப் பயல்களெல்லாம் சேற்றில் விளையாடிவிட்டு வந்தால் எந்தப் பயல் எங்க பயல் என்று தெரியறதில்லே. நேற்றைக்கு என் பயலைக் கண்டு பிடிக்க ஆறு பயல்களைக் குளிப்பாட்டிப் பார்க்க வேண்டியதாயிற்று!" —பாட்டி

நீ யில்லாமல்—

"நம்ம நாட்டுப் பெண் இன்றைக்கு ரொம்ப நன்றாகச் சமையல் செய்திருக்கா பார்த்தையா?"

"உம்...ம்...நான் கூட இருந்து சொல்லிக் கொடுத்தேன்...!"

"அப்படி இருந்தும் நன்னு சமைத்திருக்காளே!"

உயர்ந்த மோசம்!


"உலகில் நடக்கும் மோசங்களையெல்லாம் வைத்து எப்படி எழுதி இருக்கிறேன். உங்களுக்குத் தெரிகிறதா!"

"தெரிகிறதாவா? இதை விட மோசமான புஸ்தகம் யாரும் எழுத முடியாது!"

உனையே நீ உணர்ந்து...

"அந்த சினிமா ஸ்டார் ரொம்ப அழகி என்கிறீர்களே! அவள் முக வெட்டு, உடல் அமைப்பு இரண்டையும் ஒதுக்கிப் பார்த்தால் எப்படி இருப்பாள் என்று யோசித்துப் பாருங்கள்!"

"'சாக்ஷாத்' உன் மாதிரியேதானிருப்பாள்!"


என் கடன் பணி
செய்து கிடப்பதே . . .
பிரபாத்
ப்ராடக்ட்ஸ்
விளக்கை சற்றே தேய்த்த மாத்திரத்தில் இட்ட பணியை நிறைவேற்ற, அல்லாதீன் முன்னிலையில் தோன்றும் அந்த பூதம் விசுவாசம் உள்ளது, நம்பத்தகுந்தது . . . . . .
பிரபாத் தயாரிப்புகளும் அதே அளவுக்கு விசுவாசம் உள்ளவை, நம்பத்தகுந்தவை . . . 'பணி செய்து கிடப்பதே' கடமையாகக் கொண்டவை.
" இந்தியாவில் முதன்முதலானவை . . . இன்றும் தலைசிறந்தவை ! "
பிரபாத் (ஸ்டவ் & லாம்ப்) ப்ராடக்ட்ஸ் கோ. ப்ரை. லிட்.,
தோபில் சேம்பர்ஸ், பார்ஸி பஜார் ஸ்ட்ரீட், போர்ட், பம்பாய்—1,
TAM
KSK

"ஒரு நிமிஷம்; இதோ வந்து விட்டேன்!" என்று சொல்லி விட்டு, சண்முகம் ஒரு ஹரிக்கேன் லைட்டைத் தூக்கிக்கொண்டு ஓடினான்.

அவன் திரும்பி வந்த போது உஷா கொட்டகையை விட்டு எழுந்து வாசலுக்கு வந்து விட்டாள். பாஞ்சாலியோ, பாபுவோ யாரும் அவளிடம் பேசவில்லை. எல்லாரும் அவளைப் பின்பற்றி வெளியில் வந்து நின்றார்கள்.

"புறப்பட்டுட்டீங்களா?" என்றான் சண்முகம், கையில் லைட்டை வைத்துக் கொண்டே.

"ஆமாம்; இருட்டிப் போய் விட்டது. இனிமேல் இருக்க முடியாது. சும்மா இந்தப் பக்கம் வந்தோம். அப்படியே உங்கள் சங்கத்தையும் பார்த்து விட்டோம். இடம் என்னமோ பரிசுத்தமாகத்தான் இருக்கிறது. காற்று பிய்த்துக்கொண்டு போகிறது! நல்ல இடம்தான்!" என்று நற்சாட்சிப் பத்திரம் வாசிப்பதுபோல் கூறினாள் உஷா.

பாஞ்சாலி இப்போது எல்லாரையும் தாண்டிக் கொண்டு முன்னால் போய் நின்று, "அடேய் பாபு! கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டழிஞ்சு போயிடாதே! யோக்கியமா இருக்கணும்னா இன்னிக்கே வந்து ஒரு ஒழுங்கு செய்திட்டுப் போ! இல்லாட்டி உன் மரியாதி எல்லாம் காத்துலே போயிடும். கண்டிப்பா வச்சுக்க!" என்று சபதம் கூறுவதுபோல் சொல்லி விட்டு, விடுவிடென நடந்து சென்றாள்.

எல்லாருக்குமே இந்தப் பேச்சு விரசமாகத்தான் இருந்தது. ஒருவருக்காவது பேச்சு எழும்பவில்லை. ஆனால் உஷா மிகவும் சாமர்த்தியமாகப் பேச்சை மாற்றி, "வெள்ளையன் தோட்டம் இவ்வளவு நல்ல இடம் என்பது எனக்கு இது வரையில் தெரியாது!" என்றாள் கலகலப்பான குரலில்.

பாஞ்சாலி பேசிவிட்டுச் சென்றதனால் உண்டான அதிர்ச்சி அவளைச் சிறிதும் பாதித்ததாகத் தெரியவில்லை. இதுவே எல்லாருக்கும் ஆறுதலாக இருந்தது.

"பாபு! சண்முகம் எங்கே? அவனைக் கூப்பிடேன்!" என்றாள் உஷா.

சண்முகம் லைட்டை வைத்து விட்டு வரப் போயிருந்தான். பாபு கண்களில் நன்றிக் கண்ணீர் பெருக, "எனக்குத் தெரியும், உஷா! நீ குணத்தில் மிகவும் சிறந்தவள். நான் எதையோ எண்ணிக் கொண்டு உன்னை வரச் சொல்லி அழைத்தேன். ஆனால் நினைத்தபடி ஒன்றும் செய்ய முடியவில்லை. என் வார்த்தையை மதித்தோ, மதிக்காமலோ நீ வந்தாயே அதுவே எனக்குப் போதும். இதை நான் என்றும் மறக்க மாட்டேன்!" என்றான்.

சண்முகமும் ஏதோ தவறு செய்து விட்டு மன்னிப்புக் கேட்கிற குரலில் பேச முயன்றபோது, "அதெல்லாம் இருக்கட்டும், சண்முகம்! பல நாட்கள் பழகியவன் போல் பார்த்ததுமே பழகுகிற உன் குணத்தினால் இந்தச் சங்கம் மேன்மை அடையும் என்று நிச்சயமாகச் சொல்வேன். இந்தா. இதை நாங்கள் போன பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று கைப் பையினுள் வைத்திருந்த ஓர் உறையை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

வண்டி புறப்பட்டது. சற்றுத் தூரம் போனதும் அங்கே ஒதுங்கி நின்ற தேவானைக்கு அருகில் வந்து நின்றது. உஷா அவளைப் பக்கத்தில் அழைத்து, "நான் வந்ததும் ஒரு விதத்தில் நல்லதாகப் போய் விட்டது, இல்லையா தேவானை? இன்று உங்கள் சண்டை தீர்ந்து ஒரு சமரசம் உண்டாகி விட்டது போலிருக்கிறதே!" என்று சொல்லிச் சிரித்தாள்.

ஆனால் தேவானை, முகத்தில் சிரிப்பையே காட்டாமல், "அதுங்கூட பேச்சு வச்சுக்கிறதைவிட, பேசாமலிருக்கிறதே எவ்வளவோ விதத்திலே தேவலாம். இன்னொரு சண்டை வருகிற வரைக்கும் என் பாடு திண்டாட்டம்தான்!" என்றாள்.

"போக்கிரி! ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன். எது எப்படி இருந்தாலும் உங்க இரண்டு பேருக்கும் முதலில் சரியான பெயர்ப் பொருத்தம் இருக்கிறது! அதனாலே...என்ன?" என்றாள் உஷா.

"போங்கம்மா!" என்று சிணுங்கினாள் தேவானை.

"சரி, போகிறேன். போய்விட்டு வருகிறேன். சண்முகம் பேச்சில்தான் முரட்டு-ஆள் முரடனில்லை, வரட்டுமா?" என்றாள்.

வண்டி ஒரு துள்ளுத் துள்ளிக் கொண்டே பாய்ந்தது. தேவானையின் உள்ளமும் அப்படித்தான் துள்ளியது. உஷாவின் பேச்சு தேனாக இனித்தது.

அத்தியாயம் 22

குறுக்கு வழியில்...

உஷா எவ்வளவு பெருந்தன்மையோடு நடந்துகொண்டு விட்டாள்! ஒரு கணத்தில் அவர்களுடைய மதிப்பில் அவள் எவ்வளவு உயர்ந்து விட்டாள்!

அவள் சண்முகத்திடம் கொடுத்துச் சென்ற உறையில் மூன்று பத்து ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. ஆயினும் நண்பர்கள் இருவருக்கும் அது மூன்று ஆயிரமாக, லட்சமாகத் தோன்றின. அதை அவள் பிறர் அறியாமல் கொடுத்துச் சென்றது அவர்களுக்கு இன்னும் உயர்வாகப் பட்டது. இதுகூட அத்தனை பெரிய காரியமாகப் படவில்லை. ஆனால் பாஞ்சாலி பேசிவிட்டுப் போனபோது உஷா நடந்து கொண்ட விதம் உண்மையிலேயே சிறப்பாகத் தோன்றியது.

"பாபு! பணக்காரங்க வீட்டிலேகூட இப்படிப்பட்ட பெண்கள், பிள்ளைகள்

எல்லாம் இருக்காங்களாடா?" என்று கேட்டான் சண்முகம். அதற்கு அவன் பாபுவிடமிருந்து விடையை எதிர்பார்க்கவில்லை. "நீ சொன்னதுக்காக வந்து, உக்காந்துட்டுப் போறபோது அன்பளிப்பும் கொடுத்துட்டுப் போச்சே அது. அதை நினைச்சாத்தாண்டா எனக்கு உலகத்துக்கிட்டேயே ஒரு நம்பிக்கை பிறக்குது. என்னிக்கும் நல்லவங்க யாராவது இருந்துகிட்டுத்தாண்டா இருப்பாங்க! உலகத்திலே பணக்காரன், ஏழைன்னு இரண்டு ஜாதின்னுதான் நான் இன்னி வரையிலும் நெனச்சேன். இப்பத்தான் தெரியுது. நல்லவன், கெட்டவன் என்றுதான் இதைப் பிரிக்கணும். அப்பத்தாண்டா கணக்குச் சரியாக வரும்!" என்றான் சண்முகம்.

அதேசமயத்தில் பாபுவுக்கு உஷாவிடம் நன்றியுணர்ச்சி பொங்கி வழிந்தது. முதலில் புத்தகங்கள் கேட்டு வாங்கச் சென்றபோது அவன் அவளைச் சங்கத்துக்கு வரும்படியாக அழைக்கவேயில்லை. அது தெரிந்தும் அவள் வந்தது அவனை உச்சாணிக் கிளையில் கொண்டுபோய் வைத்துவிட்டது. சும்மா இந்தப் பக்கம் வந்தவள் எதற்காக ஓர் உறையில் முப்பது ரூபாயை வைத்துக்கொண்டு வரவேண்டும்! அந்தப் பணத்தை அவள் பாபுவிடம் கொடுத்திருந்தால் கூட அவன் அவ்வளவு மகிழ்ச்சியடைந்திருக்க மாட்டான். சண்முகத்திடம் கொடுத்தது அவளுடைய கற்பனையின் மேன்மையைக் காட்டியது. நண்பனுடைய மதிப்பில் அதனால் அவன் எவ்வளவு உயர்ந்து விட்டான்! கேவலம் குடிசைகளிடையே இருக்கும் ஒரு சாதாரண சங்கத்துக்காக முப்பது ரூபாய் நன்கொடை யளிக்க யார்தான் முன் வருவார்கள்? அதுவும் கைம்மாறு எதுவும் கருதாமல்! பணத்தின் அருமையை மற்றவர்களைவிடப் பணக்காரர்களே அதிகம் அறிந்தவர்கள். குறைந்தது முப்பது பேராவது கொண்டாடாத காரியத்துக்காக அதுவும் இந்த நாளில் எந்தப் பணக்காரனும் முப்பது ரூபாயைக் கொண்டு போய்க் கொடுத்துவிட மாட்டான். ஆனால் உஷா இதை ஒருவரும் அறியாதவாறு கொடுத்தாள் என்றால், யாரை முன்னிட்டு?

உஷாவின் வருகையால் மொத்தத்தில் அவன் ஒரு சுற்றுப் பருத்து விட்டது போலவே உணர்ந்தான். ஆனால் இந்தப் பாஞ்சாலியின் போக்குத்தான் அவனுக்குக் கசப்பைத் தந்தது. அவளை என்ன செய்வது? அவள் எத்தனை பணம் கொடுத்தாலும் திருப்தியடையக் கூடியவளாகத் தோன்றவில்லை. அவள் அவனிடமிருந்து இன்னும் என்ன எதிர்பார்க்கிறான்? பாபுவுக்கு அவளுடைய போக்கே விடுபடாத புதிராக இருந்தது. அவளுடைய பிடுங்கலுக்குப் பயந்துகொண்டு வெண்ணையன் தோட்டத்துக்கே வராமலிருப்பது பெரிய கோழைத்தனமாக நண்பர்கள் இருவருக்குமே பட்டது.

"இன்னிக்கு உன் சின்னம்மாவைப் பார்க்கப் போறியா, பாபு?" என்று கேட்டான் சண்முகம்.

"இன்னிக்கு என்ன, இனி என்னிக்கும் நான் அங்கே போகப் போறதில்லை! அவளால் முடிந்ததைச் செய்து கொள்ளட்டும்......எனக்கு நேரமாகி விட்டது. எஜமானியம்மாளிடம் சீக்கிரம் வந்து விடுவதாகச் சொல்லி வந்தேன்!" என்று விடைபெற்றான் பாபு.

அப்பொழுதே மணி ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. இன்று சைக்கிள் ரிப்பேர் ஆகிவிட்டதால் அவன் அதை உருட்டிக்கொண்டே நடந்துசெல்ல வேண்டியிருந்தது. குறுக்கு வழியாகப் போனால் தான் ஒரு மைல் தூரமாவது குறையும். இல்லையோ, மணி பத்துக்குத்தான் அவன் பங்களாவுக்குப் போய்ச் சேர முடியும். வருவது வரட்டும் என்று அவன் பாஞ்சாலி வீட்டு வாசல் வழியாகப் போவது என்று முடிவு செய்து கொண்டான். பழைய சாலையும் குறுக்குப் பாதையும் அங்கேதான் வந்து சேருகின்றன. பாஞ்சாலி நடுவாசலில் படுத்திருப்பாள். அவள் கண்ணில் பட்டு விட்டால் எப்படியோ இரண்டொரு வார்த்தைகள் பேசிச் சமாளித்து விடுவது என்று துணிந்து சென்றான். ஆனால் நல்ல காலமாக, அவள் அடுத்த வீட்டுச் செல்லாயியுடன் மூன்றும் காட்சிக்குப் போயிருந்தாள். பாபு தன்னுடைய அதிருஷ்டத்தை எண்ணிக் கொண்டு சைக்கிளைத் தள்ளியவாறு குறுக்குப் பாதையில் நடந்தான். போகும் வழியெல்லாம் உஷாவின் நினைவுதான் அவனுடைய நெஞ்சிலே நிறைந்திருந்தது.

நகரத்தின் நரகம் போன்ற இருட்டுவையில் ஒற்றையடிப் பாதையை கிதானித்துக் கொண்டு அவன் நடந்தான். கிட்டத்தட்ட பாதி தூரம் வந்த பிறகுதான் அவனுக்குத் தன்னை யாரோ தொடர்ந்து வருவது போலத் தோன்றியது. திரும்பிப் பார்த்தபோது அவன் சந்தேகம் உறுதிப்பட்டது. பயம் லேசாக மனத்தைக் கிள்ள, அவன் நடை வேகமாக விழுந்தது. பின்னால் நடந்து வந்த உருவத்தின் நடை அதைவிட வேகமாக இருந்தது. பாபு இப்பொழுதுதான் தன் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். என்ன முட்டாள்தனம்! உஷா கொடுத்த முப்பது ரூபாயைச் சண்முகத்திடம் திருப்பித் தர மறந்து போய்த் தன் பையிலேயே வைத்துக் கொண்டிருக்கிறான் அவன். வேகமாக நடந்து மேலும் களைப்படைய விரும்பாமல் அவன் சாதாரணமாக நடக்கத் தொடங்கினான். இப்பொழுது அவனுக்கும் அவனைப் பின் தொடர்ந்து வந்த உருவத்துக்கும் உள்ள இடைவெளி மிகவும் குறுகி விட்டது.

"யார் அது?" என்று உரத்த குரலில் கேட்டான் பாபு.

அதற்கு விடை ஒன்றும் கிடைக்கவில்லை; ஆனால் நடை மட்டும் விரைவாக இருந்தது. (தொடரும்)

“அட போங்க, அண்ணாச்சி! நீங்களும்தான் இருபது இருபத்தஞ்சு வருஷமா வஞ. குஞவாக (வக்கீல் குமாஸ்தாவாக) இருக்கிறீஹ. எப்பவாவது குற்றாலம் சீஸனுக்குப் போயி ஒரு வாரம் தங்கியிருந்ததுண்டா?” என்று பிரியேற்றி விட்டார் குள்ளநரியா பிள்ளை—திருவாளர் சங்கரலிங்கம் பிள்ளைக்கு மீனாட்சிபுரத்தினர் கொடுத்திருந்த மறைமுகப் பெயர் இது.

இதுவரையில் மந்த கதியில் சென்று கொண்டிருந்த வக்கீல் குமாஸ்தா நெல்லையப்ப பிள்ளையின் மனம், தார்க்குச்சியால் குத்தப்பட்ட காங்கயம் காளை மாடு போலக் குறுகுறுப்பாக ஓட ஆரம்பித்தது. தாமிரபரணி ஆற்றுத் தண்ணீரில் நின்றபடியே வேப்பங் குச்சியால் ‘பறபற’வென்று பல்லைத் தேய்த்துக் கொண்டிருந்தவர் சடக்கென்று தேய்ப்பை நிறுத்தி விட்டுக் குள்ளநரியா பிள்ளையை ஏறிட்டுப் பார்த்தார்.

தமது வார்த்தைகள் வஞ குஞவின் மனசில்பாய்ந்து வேலை செய்ய ஆரம்பித்து விட்டன என்று தெரிந்தவுடன் மேலும் கூர்மையான வார்த்தைகளைக் கொண்டு அவருடைய தன்மான உணர்ச்சியைக் குத்திக் கிளறிவிடத் துணிந்தார் குள்ளநரியா பிள்ளை. “நேத்து வந்தபயல்! உங்ககிட்டேயும் என் கிட்டேயும் ஓடி ஓடி வந்து ‘ஏதாவது ஒரு கடையிலே வேலை பார்த்துக் கொடுங்க’ன்னு கெஞ்சின பயல். இன்னிக்குக் குற்றாலம் போயிருக்கிறானாம் ‘சீஸ’னுக்கு! நீங்களும் நானும் நினைச்சாப் போக முடியுதா? என்ன, அண்ணாச்சி, பேசாம இருக்கிறீஹ?” என்றார்.

வஞ. குஞ.வும் குள்ளநரியா பிள்ளையும் தினந்தோறும் காலையில் ஆற்றில் குளிப்பதற்கு ஒன்றாகப் போய்த் திரும்புவார்கள். மற்ற நேரங்களில் அவர்களது சந்திப்பு அபூர்வம். குள்ளநரியா பிள்ளை திருநெல்வேலியில் ஒரு அச்சகத்தில் வேலை பார்ப்பவர். நெல்லையப்ப பிள்ளைக்கு ஆற்றங்கரைத் தோழர். இருவரும் ஒரே தெருவில் குடியிருப்பவர்கள்.

அன்று அவர் ஆற்றுக்குப் புறப்பட்டதிலிருந்து பலசரக்குக் கடை சுப்பையா பிள்ளையைப் பற்றித்தான் பேசிக்கொண்டு வந்தார். ‘நேற்று வந்த பயல்’ என்று அவர் குறிப்பிட்டது சுப்பையா பிள்ளையைத்தான். சுப்பையா பிள்ளை சிறு பையனாக மீனாட்சிபுரத்துக்கு வந்தது, அனாதரவாக அலைந்து திரிந்தது, பின்பு வெற்றிலை பாக்குக் கடை ஆரம்பித்தது, அது பெருகி வளர்ந்து அவருக்குப் பணம் சேர்ந்தது ஆகிய விவரங்கள் எல்லாவற்றையும் ஆதியோடந்தமாகத் தமது நண்பருக்கு எடுத்துரைத்தார் குள்ளநரி.

வேறுவழியில்லாததால் இருபது வருஷ காலமாக வஞ. குஞ. வாகப் பணியாற்றி வந்தார் நெல்லையப்ப பிள்ளை. ‘நீங்களெல்லாம் குற்றாலம் சீஸனுக்குப் போக முடிகிறதா’ என்று நண்பர் கேட்டபோதுதான் தன்மான உணர்ச்சி சிறிது தலை தூக்கியது அவருக்கு.

தம் நண்பருக்குப் பதிலளிக்கும் வகையில் “நம்முடைய தலையிலே இப்படி எழுதியிருக்கிறானேவே. அதுக்கென்ன செய்யறது” என்றார்.

“தலையிலேயாவது எழுதுகிறதாவது, அண்ணாச்சி! நீங்கமட்டும் அப்பவே நம்ம தெருவிலே ஒரு கடையை வைச்சிருந்தா, இதுக்குள்ளே எவ்வளவோ சம்பாதிச்சிருக்கலாம். குற்றாலமென்ன! கோடைக்





திருவாளர்

குள்ளநரியா பிள்ளை

மாறன்

கானலுக்குக்கூடப் போயிட்டு வரலாம். இப்பப் பாருங்க, அந்த அப்பாவிப் பய நல்லா வளுத்துக்கிட்டான். தினம் ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் வியாபாரம் நடக்குது அவன் கடையிலே. இப்பக்கூட என்ன கெட்டா போச்சு? நீங்க ஒரு கடையை வையுங்க. துணிஞ்சு வைச்சீங்கன்னு நல்ல வியாபாரம் நடக்கும்” என்று தூபம் போட்டார் குள்ளநரி.

“நம்ம தெருவிலே ரெண்டு கடைக்கு வியாபாரம் நடக்குமாவேய்?” என்று தமது ஆவலை இலேசாக வெளியிட்டார் வஞ. குஞ.

“நீங்க கடையை ஆரம்பியுங்க அண்ணாச்சி! அவன் கடைக்கு ஒரு பய போகாதபடி செய்துடலாம். ரூபாய்க்கு ஒரு படி போடுகிற உளுந்தை ஒன்னே



விசமாகப் போட்டா ஜனங்க இங்கே திரும்பிடுவாங்க. காலஞ்ச பெரிய வீட்டுக்காரங்க வாடிக்கையாகச் சாமான் வாங்க ஆரம்பிச்சுட்டா அப்புறம் கவலையே இல்லை'' என்று படிப்படியாக ஊக்க மூட்டினார் குன்னாகரி.

அன்று வனா. குனா. வக்கீல் வீட்டுக்குப் போகவில்லை. தமக்குத் தலைவலி என்று சொல்லியனுப்பி விட்டார். அவருக்குச் சொந்தமாக இருந்த குச்சு வீட்டைத் தெருப் பக்கமாக இடித்துக் கட்டினால் கடையாக மாற்றி விடலாம். வியாபாரத்துக்காக வீட்டம்மாள் வெகு காலமாகப் போட்டுக் கொண்டிருந்த வளையல்கள் பேரிலும் குடியிருந்து வரும் பெரிய வீட்டின் பேரிலும் லகுவாக இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கலாம். இதுதான் வனா. குனா. அன்று முழுதும் யோசனை செய்து வகுத்துக் கொண்ட வியாபாரத் திட்டம்.

குன்னாகரியாபிள்ளை வனா.குனா.வின் திட்டத்தை அப்படியே அங்கீகரித்ததோடு அதை நிறைவேற்றி வைப்பதற்குத் தம்மால் ஆன முழு உதவியையும் செய்வதாக வாக்களித்தார். அவருடைய யோசனையின்படி செல்லையப்பபிள்ளை வனா. குனா. வேலைக்கு மறுநாளே முழுக்குப் போட்டு விட்டார்.

வாடிக்கைக்காரர்களின் மனத்தைக் கவரும் நவீன மோஸ்தரில் மேஜை, நாற்காலி, கவுண்டர், பில் புத்தகங்களோடு செல்லையப்பர் பலசரக்கு மளிகை மீனாட்சிபுரம் சாலைத் தெருவில் உருவாகிக் கொண்டிருந்தது. கடைக்கு வேண்டிய தளவாடச் சாமான்கள் இரவு பகலாகத் துரிதமாகத் தயாரிக்கப்பட்டன.

போட்டிருந்த திட்டத்தின்படி கடையின் ஆரம்ப விழா நடத்துவதற்குள் வீட்டின் மீது வாங்கிய கடன் தொகை முழுவதும் செலவாகிவிடும் போல் இருந்தது. மாஜி வனா. குனா. சற்றுத் திகைத்தார். ஆனால் குன்னாகரியா பிள்ளை சற்றும் திகைக்கவில்லை. திருநெல்வேலியில் பெரிய கடையொன்றில் கடனாகச் சரக்குக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு பண்ணி வைத்தார்.

• • •

மீனாட்சிபுரத்தில் புதிய பலசரக்குக்கடை உருவாகிக் கொண்டிருந்த அதே சமயத்தில் திருவாளர் சுப்பையா பிள்ளை திருக்குற்றாலத்து

அருவியில் தினமும் மூன்று நான்கு தடவைகள் குளித்துச் சுகம் அனுபவித்துக்கொண்டிருந்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் அவர் பட்ட கஷ்டங்களெல்லாம் அருவித் தண்ணீரில் கரைந்தோடி விட்டது போலத் தோன்றியது.

சுப்பையா பிள்ளையின் தாய் தந்தை, பாட்டன், பாட்டி எல்லாருக்கும் சொந்த ஊர் திருக்குற்றாலத்தை அடுத்துள்ள இலஞ்சி கிராமம் தான். இலஞ்சி வேளாளர்கள் அநேகமாகப் பிற ஊர்களில் சம்பந்தம் கொள்வதில்லை. சுப்பையா பிள்ளையின் தகப்பனார். முத்துக்குமாரசாமிபிள்ளை இறந்தபின் அவருடைய மனைவி தாயம்மாளும் ஒரே மகன் சுப்பையாவும் பண நெருக்கடியினால் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு வழியாக மீதியிருந்த சொத்துக்களையும் விற்றுக் கடன்களையெல்லாம் தீர்த்து விட்டுக் கையிருப்பு ஐந்நூறு ரூபாயுடன் தாயம்மாள் மகனுடன் இலஞ்சியை விட்டு நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலியை அடுத்த மீனாட்சிபுரத்தில் குடியேறினாள். அங்கே தாயம்மாளுக்கு எட்டிய உறவில் ஒரு ஆச்சி இருந்தாள். தாயம்மாள் அந்த ஆச்சியின் தயவில் பையனை அங்குள்ள பள்ளியில் சேர்த்து வைக்க முயன்றாள். தன் கையிருப்புத் தொகையையும் படிப்புக்கான செலவுகளையும் எண்ணிப் பார்த்தபோது சுப்பையா எட்டாவது வகுப்புவரை படித்ததே போதும் என்ற தீர்மானத்துக்குத் தான் வர வேண்டியதாயிற்று. அதோடு பையன் யாராவது வக்கீலிடம் குட்டிக் குமாஸ்தாவாக இருந்து வேலை பழகிக் கொண்டால், பிற்காலத்தில் புத்திசாலியாகப் பிழைத்துக் கொள்வான் என்ற முடிவுக்கு வந்தாள். ஆச்சியின் உதவி கொண்டு அக்கம்பக்கத்திலுள்ள ஸீனியர் வக்கீல் குமாஸ்தாக்களிடம் சுப்பையாவைப் பற்றிச் சொல்லும்படி செய்தாள்.

மேலும் படிக்க வேண்டுமென்ற ஆசை சுப்பையாவுக்கு அளவுகடந்து இருந்தாலும், தாயாரின் விருப்பப்படியே பலவக்கீல் குமாஸ்தாக்களிடம் போய்ப் பணிவாகப் பேசித் தன்னையும் குமாஸ்தா வேலைக்குப்பழக்கி விடும்படி வேண்டிக் கொண்டான்; சில குமாஸ்தாக்கள் அனுதாபம் காட்டினார்கள். சிலர் தட்டிக் கழித்தார்கள். அவன்மீது அனுதாபம் காட்டிய குமாஸ்தாக்களில் திருவாளர் நெல்லையப்பபிள்ளையும் ஒருவர்.

சுப்பையா குமாஸ்தா வேலைக்காக அலைந்து பார்த்ததில் ஆறு மாதங்கள் கழிந்தன. பிறகு கடைகளிலாவது வேலை தேடலாம் என்று முயன்றும் வீணாயிற்று. ஆகவே தாயாரின் ஆலோசனையின்படி தன் வீட்டுத் திண்ணையிலேயே சிறிய வெற்றிலை பாக்குக் கடை ஒன்றைத் துவக்கினான் சுப்பையா.

கடை ஆரம்பித்த நேர பலனோ என்னவோ, தினசரி வியாபாரம் ஐந்து ரூபாயிலிருந்து ஏறு ஏறு என்று ஏறி இரண்டு மூன்று வருஷங்களில் ஐம்பது ரூபாய் விகிதத்துக்கு எட்டியது.

சுப்பையாவுக்கு எப்பொழுதும் வியாபாரத்திலேயே கண். வருகிறவர்களிடம் அன்பும் பணிவும் காண்பித்து வியாபாரத்திலும் குறியாக இருந்ததால் மணற்கேணியின் ஊற்றுப்போல் லாபம் பெருகியது. ஊரிலும் நாலு பேர்கள் நல்ல பிள்ளையாண்டான் என்று சொல்லும்படி சுப்பையா நடந்து கொண்டான். தன் மகன் இனி புத்தி





சாலித்தனமாகப் பிழைத்துக் கொள்வான் என்று கண்ட தாயமாமனுக்கு ஒரு மன நிம்மதி ஏற்பட்டது.

ஏழெட்டு வருஷங்களில், சுப்பையா பிள்ளை திருநெல்வேலிப் பெரிய வியாபாரி களின் மதிப்புக்குரிய ஒரு சிறிய வியா பாரியாகத் திகழ்ந்தார். அவருடைய நாணயத்தையும் பணிவையும் கண்ட அவர்கள் அவரை நம்பி எவ்வளவு சரக்கு வேண்டுமானாலும் கடனாகக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

* * *

இலஞ்சியிலிருந்த சுப்பையா பிள்ளை யின் தாய் மாமன் திருமலைக்கொழுந்து பிள்ளைக்கு மூன்று பெண்கள். மூத்த பெண்ணைக் கலியாணம் செய்து கொடுப் பதற்குள் அவர் பட்ட கஷ்டம் இலஞ்சி யில் கோயில் கொண்டுள்ள முருகப் பெரு மானுக்குத்தான் தெரியும். இரண்டாவது பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடவேண் டிய பிரச்னை எழுந்தது.

தங்கை மகன் சுப்பையாவைப் பற்றி அவர் இதுவரை சிந்தித்ததே கிடையாது. இப்பொழுது சுப்பையா பிள்ளை மீனாட்சி புரத்தில் ஒரு வியாபாரியாக விளங்குகிறார் என்று தெரிந்தவுடன் திருமலைக் கொழுந்து பிள்ளைக்குத் தங்கை மகன் மீது தம்மையறியாமல் ஒரு அபிமானம் தோன்றியது. தங்கையைப் பார்க்க வரு வது போல மீனாட்சிபுரத்துக்கு விஜயம் செய்து அவர்களுடைய தற்போதைய நிலைமையை ஓரளவுக்கு அறிந்து கொண் டார். தமது இரண்டாவது பெண்ணைச் சுப்பையாவுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுத்து விடலாம் என்று அப்பொழுதே அவர் மனத்துக்குள் தீர்மானம் உருவாகி யது. இருந்தும் அதைக் காட்டிக்கொள் ளாமல் தன் தங்கையையும் அவள் மகனை யும் ஒரு நடை இலஞ்சிக்கு வந்து போகு மாறு அழைத்தார்.

மாமாவின் அழைப்பை மறுக்க வேண் டாம் என்ற பணிவான எண்ணமும் தன் சொந்த ஊரைப் போய்ப் பார்க்கவேண்டு மென்ற ஆவலும் தூண்டியதால் இலஞ் சிக்கு வரச் சம்மதித்து அதன்படியே போகவும் செய்தார் சுப்பையா.

திருக்குற்றாலத்தில் ஐந்தருவி,சிற்றருவி, தேனருவி, செண்பகா அடவி அருவி என்று ஒவ்வொரு அருவியிலும் தலையைக் கொடுத்துக் கொண்டு நேரம் போவதே தெரியாமல் இன்ப சுகத்தை அனுபவித் துக் கொண்டிருந்தார் சுப்பையா. வெள் ளிக் கட்டியை உருக்கிச் சொரிவது போன்று கொட்டிக் கொண்டிருக்கும் அருவியில் நின்று கொண்டிருக்கும்போது அருவி நீரின் மனோகரமான குளிர்ச்சியும், மேகங்களின் நடுவேதோன்றி மறையும் சந்திரன் போலத் தென்பட்ட மாமாவின் மகள் பார்வதியின் முக மண்டலம் தரும் இன்பமும் சுப்பையா பிள்ளையின் உள்ளத் தைக் கிளுகிளுக்கச் செய்தன.

மீனாட்சிபுரத்துக்குத் திரும்ப வேண்டு மென்ற நினைப்பையே மறக்கடித்து விட் டது அருவி ஸ்நானமும். பார்வதியின் வதனமும். பார்வதியைத் தமக்கு மணம் செய்து கொடுப்பதாக மாமா நேரடியாக ஒரு உறுதிமொழி கூறட்டும் என்று காத் திருந்தார் சுப்பையா. அதை ஒருவாறு அறிந்து கொண்டதும் ஊருக்குக் கிளம் பினார். சுப்பையா பிள்ளை திருநெல்வேலி ஜங்ஷனில் ரயிலை விட்டு இறங்கி வரும் போது இரவு மணி ஒன்பது. சாலைத் தெருவுக்குத் திரும்பியதும் நகரசபை யாரின் பதினைந்து 'வோல்ட் பல்பு' களை ஏந்தி நின்ற விளக்குக் கம்பங்களைத் தவிர, ஏழெட்டு வீடுகளுக் கப்பால் புதிய பிரகாசத்துடன் பளிச்சென்று தோன் றிய வாழைத் தண்டு விளக்கின் 'வெளிச் சமும் அவர் கண்ணில் பட்டது. அந்தப் புதிய வெளிச்சத்தை நெருங்க நெருங்க, அது புதுமோஸ்தரில் அமைந்த ஒரு பல சரக்கு மளிகை என்பதும் சுப்பையா பிள்ளையின் மூளைக்குப் புலனாயிற்று. அதற்குச் சற்றுத் தூரத்திலிருக்கும் அவ ரது கடையில் வழக்கமாகக் காணப்படும் டபர் விளக்கின் வெளிச்சம் அன்று காணப்படவில்லை. ஒன்றும் புரியாமல் திகைத்துப் போய் நடந்து கொண்டிருந் தார் சுப்பையா பிள்ளை.

நெல்லையப்ப விலாஸ் பலசரக்கு மளி கையின் கவுண்டரில் 'ஷெல்பிரேம்' மூக் குக் கண்ணாடியுடன் உட்கார்ந்து கொண்டு கணக்குப் புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார் மாநிறமான ஆசாமி. நெல்லையப்ப பிள்ளை. அருகிலுள்ள 'ஸ்டூலி'ல் உட்கார்ந்திருந்த குன்னகரியா பிள்ளை சுப்பையாவின் தலையைக் கண்ட தும் அவசரம் அவசரமாக "யோவ், அண்ணாச்சி, சுப்பையா வர்றான்" என்று ரகசிய எச்சரிக்கை கொடுத்தார்.

சுப்பையா பிள்ளை திகைத்தபடியே கடைக் கெதிரே வந்ததும் "என்ன தம்பி! குற்றாலத்திலெ இருந்து இப்பத் தான் வர்றீகளா! அருவி நல்லா விழுதா?" என்று நைச்சியமாகக் கேட் டார் குன்ன கரி.

'செஷன்ஸ் கோர்ட்' சாட்சிக் கூண்டில் நின்று கொண்டு தன் உள்ளத்தில் இருப் பதை மறைத்துப் பொய் சொல்லத் தயா ராக இருக்கும் ஒரு சாட்சியைப்போல் விழித்துக்கொண்டிருந்தார் 'கவுண்டரி'ல் அமர்ந்திருந்த இருவாளர் நெல்லையப்ப பிள்ளை.

நெல்லையப்ப பிள்ளை திணறிக் கொண் டிருப்பதை அறிந்த குன்னகரியா பிள்ளை சாவதானமாகச் சுப்பையா பிள்ளைக்கு விளக்கம் கூறினார். "குமாஸ்தாப் பிள்ளை அண்ணாச்சிக்கு நேரம் போகலே, தம்பி! வக்கீல் குமாஸ்தா வேலையையும் விட்டுட் டாங்க. அதனாலே இப்படி ஒரு கடையை வைச்சிருக்காங்க" என்றார்.

இதைக் கேட்டதும் சுப்பையா பிள்ளைக்கு 'ஷாக்' அடித்தது போலிருந் தது. தலையைக் குனிந்தவண்ணம் "வர் றேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார். இரு கடைக்காரர்களின்

உள்ளங்களிலும் புகை கிளம்பியது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றியது.

சுப்பையாபோனவுடன் "பார்த்தீர்களா, அண்ணாச்சி! ஆசாமிக்காரன் முகத்திலே ஈயாடலே. நம்ம கடையைப் பார்த்த வுடனேயே பய திகைச்சுத் திணறிப் போயிட்டான் பார்த்தீங்களா? ஊரிலே இவன் மட்டுந்தான் கடை வைச்சுச் சம்பாதிக்கணுமா? மற்றப் பேர் கடை கிடை வைக்கப்படாதா என்ன?" என்று போட்டி வேகத்தைத் தூண்டி விட்டார் குள்ளகரியா பிள்ளை.

"என்ன இருந்தாலும் நாம போட்டியாகக் கிளம்பியிருக்கிறது அவருக்கு வருத்தமாகத்தானே இருக்கும்" என்று தமது இயற்கையான இரக்க குணத்தை வெளியிட்டார் செல்லையப்ப பிள்ளை.

"போட்டியாவது கீட்டியாவது! நீங்க ஒண்ணு. நேத்து வந்த அவன், தன் மனசுக்குள்ளே பெரிய முதலாளின்னு நினைச்சுக்கிட்டிருக்கான். அப்படியில்லாமலா இப்பக் குற்றாலம் 'சீஸ'னுக்குப் போயிட்டு வருவான்?" என்றார் குள்ளகரியா பிள்ளை.

"அது சரி, வேய். நாம. சேனு. வேனு. கடைக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி எழுநூத்தம்பது. கோடிக் கடைக்கு நாணூத்தி அறுபது பாக்கி விழுந்து கிடக்குது. இப்ப வேறே சரக்கு எடுக்கணும். விற்கிற பணத்திலே இருந்து தளவாடச் சாமான்களுக்கான பாக்கிகளைக் கொடுத்துக்கிட்டு வர்றேன்."

"என்ன அண்ணாச்சி, ஆரம்பத்திலேயே ஆலோலம் பாடுறீங்க? ஒரு காரியத்திலே இறங்கிட்டா, எது வந்தாலும் மலைக்கப் படாது, அண்ணாச்சி! வந்தது வரட்டும். பார்த்துக்கிடலாம். இப்பத்தானே வியாபாரம் புடிச்சு வருது. இனிமே மளமளன்னு ஏறிடும். உங்க கடனையெல்லாம் ஒரு மாசத்திலே ஊதித் தள்ளிடலாம்" என்று செல்லையப்ப பிள்ளையை ஊக்கினார் குள்ளகரியா பிள்ளை.


மறுநாள்காலையில் குள்ளகரியா பிள்ளை எழுந்ததும் எழுந்திராததுமாக, "தம்பி, சுப்பையா பிள்ளை!" என்று அன்பு ததும்பக் கூப்பிட்டுக் கொண்டே சுப்பையாவின் வீட்டுக்குள் வந்தார். தாயம்மாள் மூலம் விவரம் கேட்டறிந்த சுப்பையா பலவாறு யோசனை செய்து கொண்டு படுத்திருந்தவர் எழுந்து வந்து அவரை வரவேற்றார்.

"உங்ககிட்ட ஒரு முக்கிய சமாசாரம் சொல்லணும்னுவந்தேன், தம்பி!" என்று குள்ளகரியாபிள்ளை பீடிகை போட்டார். தாம் இலஞ்சிக்குப் போயிருந்த போது இங்கு நடந்ததையெல்லாம் விவரமாகக் கேட்டறியலாம் என்ற ஆவலோடு எழுந்து முகத்தைக் கழுவிவிட்டு அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார் சுப்பையா. "நீங்க கவலைப் படாதீங்க, தம்பி! ஊக்கமாக நடத்துங்க உங்க கடையை. செல்லையப்ப பிள்ளை கடை நெடு நாள் ஓடாது. சீக்கிரம் அவுஹ கடை 'குளோஸ்' ஆயிடும்" என்று தொடர்ந்து உற்சாகப்படுத்தினார் குள்ளகரியா பிள்ளை.

செல்லையப்ப பிள்ளையிடம் ஏதோ உள்ளூற விரோதம் வைத்துக் கொண்டுதான் அவர் தமக்கு இப்படி உற்சாக மூட்டுகிறார் என்று நம்பிய சுப்பையா, "அது சரி, அண்ணாச்சி! அவுஹ எதுக்காகக் கடை வச்சாஹ? அதுவும் இதே தெருவிலே?" என்று கேட்டார்.

"எல்லாம் பொறாமைதான், தம்பி! உங்களுக்கு நல்ல வியாபாரம் நடக்கறது அவுஹளுக்குக் கண்ணைக் கரிக்குது. அதனாலே போட்டா போட்டியாகக் கிளம்பி, தளவாடச் சாமான்களைத் தாறுமாறாகச் செய்யச் சொல்லி... அதிலேயே ஆயிரத்துக்கு மேலே ரெண்டாயிரம் கடன் இருக்குது. சரக்கு வாங்கியிருக்கிறதெல்லாம் கடனுக்கு. இனிமேல் அவுஹ எப்படி உருப்படப் போறாஹ! நீங்களென்ன செய்யணும்னு எந்தச்சாமானையும் அவுஹ விற்கிற விலையை விட ரூபாய்க்கு ஓரணா ரெண்டணாக் குறைவாகவே விலை வைச்சு விற்கணும். ஒரே மாசம் ஆசாமி கடையைக் கட்டிடுவார் தம்பி. ஊக்கத்தைத் தளரவிடாதீங்க" என்று சுப்பையாவுக்கு முறுக்கேற்றி விட்டுப் பின் வாசல் பக்கமாக ஆற்றுக்குப் போய் விட்டார் குள்ள கரி.

அன்று செல்லையப்ப பிள்ளையைச் சந்தித்ததும், "பயலோட சோக்கத்தை அறியலாம்னு இன்னிக்கு ஆத்திலே கண்டபோது பேச்சுக் கொடுத்து பார்த்தேன், அண்ணாச்சி! நேத்து வந்த பய



சென்ற இதழ் பாலர் மலரில் வெளி
யான கணக்கின் சரியான விடை

னுக்கு எவ்வளவு திமிர் இருக்குது தெரியுமா? உங்களோடு போட்டி போடப் போறதாக வீராவேசத்தோட சொல்றான் அவன்" என்று நண்பரைக் கிளப்பி விட்டார் குன்னகரி.

"என்னோடவா போட்டி போடப் போறான்? லே, ஆயிரம் வந்தாலும் சரி, ஆயிரம் போனாலும் சரி. அவனை நான் ஒரு கை பார்க்காமல் விடுகிறதில்லை" என்று சபதம் பண்ணினார் செல்லையப்ப பிள்ளை.

மறுநாள் முதல் சாலைத் தெருவிலுள்ள இரண்டு கடைகளுக்குள் போட்டா போட்டி இன்னும் வலுத்தது. விலைகளைத் தலை கீழாக இறக்கிக் கொண்டே போனார்கள். ஊரிலுள்ளவர்களுக்குச் சில நாள் யோகம் அடித்தது. ஜனங்கள், உளுந்து பருப்பு, புளி, மிளகாய் வற்றல் ஆகியவைகளை இரண்டு கடைகளிலும் கூட்டம் கூட்டமாகச் சென்று மொத்தமாக வாங்கினார்கள்.

இனி கடனுக்குச் சரக்கு வாங்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது செல்லையப்ப பிள்ளைக்கு. வாடிக்கைக்காரர்கள் நாலைந்து தெருக்களுக்கு அப்பாலிருந்தெல்லாம் செல்லையப்ப விலாஸ் பலசரக்கு மளிகைக்குக் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். ஆனால் அங்கே விற்பனைக்குச் சரக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

சுப்பையா பிள்ளை 'பேங்'கில் போட்டிருந்த ரூபாய் எண்ணாயிரம் போட்டியில் கரைந்து போன இடம் தெரியாமல் போய்விட்டது. இனிமேல் கடன் வாங்கிக் கடை நடத்துவது சரியல்ல என்ற முடிவுக்கு வந்து விட்டார் சுப்பையா பிள்ளை.

இருவரும் இவ்வாறு ஓய்ந்துபோயிருக்க சமயத்தில் சிவகாசியிலிருந்து வந்த சோலைமலை என்பவர் திருநெல்வேலியில் வியாபாரம் செய்வதற்கு இடம் தேடிக் கொண்டிருந்தார். குன்னகரியா பிள்ளைக்கு இந்த விஷயம் எப்படியோ எட்டி விட்டது. உடனே போய்ச் சோலைமலையை நேராகப் பார்த்து, மீனாட்சிபுரத்தில் சாலைத் தெருக் கடைகளின் நிலைமையை அவருக்கு விளக்கினார்.

அடுத்த வாரத்தில் செல்லையப்ப விலாஸ் சுப்பையா விலாஸ் இரண்டும் கைமாறி இன்னும் பெரிய கடையாக உருப் பெற்று, சோலைமலை விலாஸ் பலசரக்கு மளிகையாகத் திகழ்ந்தது. சுப்பையா பிள்ளை அதில் 'ஸேல்ஸ்மேன்'கப் பதவி வகித்தார். திருவாளர் செல்லையப்பபிள்ளை சொந்த வீட்டைக் கொடுத்து விட்டு வாடகை வீட்டில் குடிபுகுந்தார். அவர் தமது மாஜிப் பதவியைப் பெறுவதற்குச் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. அண்ணாச்சி வேலையின்றித் தவிப்பதைக் குன்னகரியால் சகிக்க முடியவில்லை. அவரையும் சோலைமலை விலாசில் வேலைக்கு அமர்த்திவிட எண்ணி அதற்காக வலை வீசினார். தாம் ஸ்தாபித்த கடையிலேயே வேலைக்கு இருப்பதா என்ற எண்ணம் சில நாட்கள் அவரிடம் தலைதூக்கி நின்றது.

ஒரு நாள் குன்னகரியா பிள்ளை அவரிடம் சென்று "என்ன அண்ணாச்சி! பைத்தியக்காரத்தனமாக இருக்கிறீரே! அந்தப் பயலுக்குச் சோலைமலை எவ்வளவு வசதிகள் செய்து கொடுத்திருக்கார், தெரியுமா? உங்களைவிட அந்தப் பய எந்த விதத்திலே ஒஸ்தி? உங்களோட போட்டி போட்ட அவனை வாட்டி வதைக்கணுமானு, நீங்க அங்கே கணக்குப் பிள்ளையாகப் போய் உட்காரணும்" என்று பலவாறு தூண்டிவிட்டார். சுப்பையாவை விரட்டுவதற்காக இல்லாவிட்டாலும் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவாவது செல்லையப்ப பிள்ளை சோலைமலை விலாஸில் மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் கணக்குப் பிள்ளையாக அமரும்படி நேரிட்டது.

புதிய பலசரக்கு மளிகையில் மாஜி கடை முதலாளிகள் இருவரும் ஒற்றுமையாக உழைத்ததனால் வியாபாரம் நன்றாகத் தழைத்தது. அண்ணாச்சி செல்லையப்ப பிள்ளையையும் தம்பி சுப்பையா பிள்ளையையும் இவ்வாறு பதவி மாற்றி வைத்ததில் குன்னகரியா பிள்ளைக்கு ஒரு மாபெரும் திருப்தி.

மாதக் கடைசியில் ஒரு நாள் செல்லையப்ப பிள்ளை தம்பியிடம் காப்பி சாப்பிடக் கூட இரண்டணா இல்லை என்று குன்னகரியா பிள்ளையிடம் தெரிவித்தார். "அட, போங்கய்யா! உங்களுக்காவது காப்பி சாப்பிட ரெண்டணா இல்லை. தரித்திரத்திலே கூட அவன்தான் ஐயா உங்களை மிஞ்சி நிற்கிறான். சுப்பையா கையிலே இப்போ பொடி வாங்கக்கூடக் காலணாக் கிடையாது. தெரியுமா உங்களுக்கு?" என்று தரித்திரப் போட்டியைத் தூண்டி விட்டார்.

பெரிய இடத்தில் தமது ஒரே பெண்ணைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த திருமலைக் கொழுந்து பிள்ளையின் ஆவலும், பார்வதியை மணக்க வேண்டுமென்று ஆவலாக இருந்த சுப்பையா பிள்ளையின் எண்ணமும் நிறைவேறவில்லை. ஆயினும் சுப்பையா பிள்ளை ஒரு சுபயோக சுப முகூர்த்தத்தில் செல்லையப்ப பிள்ளையின் சொந்த மருமகனாக ஆனார்!


BPY-4


நரஸு காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான
ருசியை
அனுபவியுங்கள்
நரஸுஸ்
மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை
NCZ-33 ATH


வேப்பம் சக்தி
இணையற்றது
2,000 வருட காலமாக இதன் கிருமிநாசன
சக்தி நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.
உங்கள் ஈறுகளை
ஆரோக்கியமாக வைக்கவும்
பற்களைப் பலப்படுத்தவும்
நீம் டூத் பேஸ்ட்
Neem
CALCHEMICO
வேப்பம் குச்சியின் அற்புத கிருமி நாசன
சக்தியும், பல் சுகாதாரத்திற்கான கனிம
பொருள்கள் அடங்கிய ஒரே பற்பசை.
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29.
தென் இந்திய ஆபீஸ்: 5/149, ..., மதராஸ்-1



வழிகாட்டி

ரவீந்திரநாத் டாகூர்

> போஷ்டம்கள் (வைஷ்ணவர்கள்) வங்காளத்தில் சைதன்னியரின் கொள்கையைச் சார்ந்த பக்த ஜனங்கள். இவர்களது சமூகவாழ்வு விசித்திரமானது. இல்லறத்தில் இருந்தபடியே பக்திப் பாதையில் செல்பவர்கள். ராதா கிருஷ்ணர்களைப் பற்றிப் பண்ணிசைத்தும் பரவசமாகும் தன்மையை இவர்களிடம் காணலாம். மூலக்கதையின் பெயர் 'போஷ்டமி'. - வைஷ்ணவி என்பதன் மரூஉ.

நான் எழுத்தாளன்; உலகத்தவர் விருப்புக்கு ஒத்தாற்போல் எழுதுவது என் பேனாவின் தர்மம் அல்ல; இதனாலேயே உலகத்தவர் எப்பொழுதும் என்னைக் குறித்து மதிப்பிட்டதில் மற்ற வர்ணங்களைவிட இகழ்ச்சியின் கருமையே வெகுவாய்த் தென்பட்டது. என்னைப்பற்றிப் பலவிதமான பேச்சுக்கள் உலவின; என் தலை எழுத்தின்படி அவை கேட்பதற்கு இதமாகவும் இராது; மனத்திற்குத் திருப்தி அளிப்பனவாகவும் இரா.

உடலின் ஒரு பகுதி தாக்குண்டால் அதிர்ச்சி எவ்வளவு அற்பமாக இருந்தாலும், உடல் முழுவதிலுமே அந்த வேதனை படர்கிறது. உலகத்தவரின் வசவுக்கு இலக்காகியே மனிதனாகும் ஒருவனுடைய இயற்கை, அசையாத ஒரு குறிக்கோளிலேயே நிலைத்து விடுகிறது. தன்னைச் சூழ்ந்து இருக்கும் பொருள்களை மறந்து தன் உணர்விலேயே தோய்ந்து விடுகிறான்; இது ஆறுதல் கொள்ளும் ஒரு நிலையென்றோ, நலன் தரும் விஷயமென்றோ சொல்ல முடியாது. தன்னையே மறந்து மன அமைதியுடன் இருப்பதுதான், இதனால் ஏற்படும் நன்மை. அடிக்கடி நான் இந்த அமைதியைத் தேடிச் செல்வதுண்டு. மனிதனுடைய தாக்குதல்களைப் பொறுத்துப் பொறுத்து என் மனத்துள் மூண்ட ஒரு குழப்பத்திலிருந்து மீண்டு வர சிகிச்சையில் வல்ல இயற்கை அன்னையின் மடியில் நான் அடைக்கலம் புகுவது வழக்கம்.

கல்கத்தாவிலிருந்து தொலைவாக உள்ள ஓர் அஞ்ஞாத வாசத்தைத் (யாரும் அறியாத இடம்) தேர்ந்து அமைத்துக் கொண்டிருந்தேன். என்னைப்பற்றிப் புகார், பேச்சு போன்ற தொல்லையிலிருந்து விடுதலை பெற அந்த ஏகாந்தமான இடத்தில் மறைந்து கொள்வேன். அந்த இடத்தில் வாழும் மக்கள் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள எந்தவிதமான அக்கறையும் இல்லாதவர்கள். எளிய கிராமவாசிகள் அவர்கள். நான் இன்பத்தில் உழன்று கல்கத்தாவின் களங்கச் சேற்றால் நாட்டுப்புறத்தின் அமைதி நிரம்பிய இரவு நேரங்களைக் கறைப்படுத்தும் ஆளென்று தெரிந்து கொண்டனர். அவர்கள் கண்ணுக்கு நான் வைராக்கியம் முற்றிய யோகியாகவும் தோன்றவில்லை. ஏனென்றால் அதற்கான அறிகுறிகள் என்னிடம் இல்லை. நான் திடுமென ஒரு நாள் வந்து ஒரு நாள் போய்விடும் வழிப்போக்கனாகவும் இல்லை. ஊர்ப்புறங்களில் நான் உலாவுவதைப் பார்க்கின்றனர். ஆனால் என் குறிக்கோளோ எந்த இடமும் இல்லை. நான் இல்லறத்தவன் என்பது வெளிப்படையாகத் தெரியாது; காரணம், என் இல்லத்தில் அந்த அறத்தை என்னுடன் நடத்தும் ஆள் இராத குறையே. இதனாலேயே அந்நாட்டுப்புற மக்கள் நான் எந்த இனத்துப் பிராணி என்பதையெல்லாம் பற்றித் தம் மூளையைக் குழப்பிக் கொள்ளாமல் இருந்தனர். எனக்கும் உள்ளத்தில் அமைதி நிரம்பியது.

நான் வந்த சில நாட்களுக்கெல்லாம் அதே ஊரில் ஓர் ஆள் என்னைப்பற்றிப் பெரிதாக நினைப்பதாக ஒரு செய்தி எனக்குத் தெரிந்தது. நல்ல வேளை அந்த ஆள் என்னைப் பெரிய முட்டாள் என்று நினைக்காமல் இருந்ததுதான் பெரும் வியப்பு!

அந்த ஆளை நான் முதன் முதல் நேரில் கண்டது, ஓர் ஆடிமாதம் மாலை நேரம். அழுது அழுது கண்ணீர் பெருகுவது நின்றதும், கண்ணிதழ்கள் ஈரம் தோய்ந்து இருப்பதுபோல், அன்று காலை பெய்த மழை ஓய்ந்ததும், மரம் செடிகொடி, வானம் காற்று இவற்றிலெங்கும் ஒரு தண்ணிய பாவம் பரவியிருந்தது. அல்லூர் குளத்தங்கரை மேட்டில் நின்றபடியே கழு மழுவென்ற ஆவொன்று மெல்லிய புல் மேய்வதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதன் பட்டுப் போன்ற தோல் மீது வெய்யில் நன்றாகப் படிந்திருப்பதைக் கண்டு, வானம் பொழியும் இந்த அமுதம் போன்ற ஒளி உடலில் புகாமல் தடுப்பதற்கு நாகரிகம் படைத்த மனிதன் எத்தனைவிதமெல்லாம் தையல் கலையை வளர்க்கிறான். இதைவிட



தமிழாக்கம்

த. நா. குமாரசுவாமி



ஓர் வீண் செலவு இந்த உலகில் உண்டோ என்று நினைத்துக் கொண்டேன்.


அதே சமயம், திடுமெனத் திரும்பியபோது நடு வயதினளான ஒரு மாது தரையில் உடல் படிய என்னை வணங்குவதைக் கண்டேன். அவள் முந்தானை மடிப்பில் இருந்த இலைத் தொன்னையில் செவ்வலரி, நுணா, இன்னும் இரண்டொரு வகை நறு மலர்கள் இருந்தன. அப் பூக்குவையிலிருந்து ஒன்றை எடுத்து என்னிடம் தந்து பக்தி மேலிடக் கைகூப்பி, ''என் கடவுளுக்கு இக் காணிக்கையைத் தந்தேன்'' என்று கூறியதும் அவ்விடத்தில் நிற்கவில்லை; போய்விட்டாள்.

நான் வியப்பில் ஆழ்ந்தமையால், அவளை நன்றாகக் கவனிக்க முடியாமல் போயிற்று. அன்றாடம் காணும் சாதாரணக் காட்சிதான்; இருந்தாலும் என் வரைக்கும் அது அபூர்வ மான அழகுடனேயே விளங்கியது. அந்த மாலை வேளையில், மஞ்சள் வெய்யிலில் அந்தப் பசு வாலைச் சுழற்றிச் சுழற்றி ஈக்களை ஓட்டிய வண்ணம் புது மழைக்குக் கனித்த இளம் புல்லை மூச்செறிந்து கொண்டே நின்று உலாவும் காட்சி, ஜீவ வருக்கத்தின் விளையாட்டினை எனக்கு நினைவுறுத்தியது. இதைச் சொன்னால் யாருமே சிரிப்பார்கள்; ஆனால் என் உள்ளத்தில் அந்தக் காட்சி பக்தியைத்தான் நிரப்பியது. எதிலும் ஆனந்த மயமாகி வடிவெடுத்துத் தன் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளும் அவ் இறைவனின் திருவிளையாடலை நினைந்து நான் என் தலையைத் தாழ்த்தினேன். தோட்டத்து மாமரத்திலிருந்து புதுத் துளிரும் பிஞ்சுமாய்த் தொங்கும் ஒரு சிறு கிளையை இறுக்கி அந்தப் பசுவுக்குத் தின்னக் கொடுத்தேன். இதனால் என்னுடைய தேவதைக்குத் திருப்தி செய்வது போன்ற ஒரு களிப்பு ஏற்பட்டது.

இதற்குப் பின், மறு ஆண்டு நான் அவ்வூருக்குச் சென்றது தை மாத இறுதியில். அந்தத் தடவை குளிர் சற்று நீடித்து இருந்தது. காலைக் கதிரவன் ஒளி கிழக்குப் பக்கமான சாளரத்தின் வழியாக வந்து என்

முதுகில் படிந்தது; நான் அதைத் தடை செய்ய வில்லை. மாடி அறையில் நான் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். ஆனந்தி போஷ்டமி என்னைக் காண வந்திருப்பதாக வேலையாள் என்னிடம் வந்து சொன்னான். அவள் யார் என்பதைப் பற்றி ஒன்றுமே தெரியாது எனக்கு. பராக்காக நான், ''சரி, இங்கே அழைத்து வா'' என்றேன்.

போஷ்டமி வந்ததும், என் காலைத் தொட்டு வணக்கம் செய்தாள். முன்னர் நான் பார்த்த அதே மாதுதான். அவள் அழகியா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தக்கூடிய வயதை அவள் கடந்து விட்டாள். ஒல்லிய உடல்; சாதாரணமாகப் பெண்கள் இருக்கும் அளவுக்குச் சற்று உயரமென்றே சொல்லலாம் அவளை. பக்தியின் விநயத்தால் அவள் உடலில் வளைவு. ஆனால் வலிமையும் தெளிவும் கலந்த பாவம் அவள் முகத்தில் இருந்தது. சட்டெனப் பார்ப்பவர் மனத்தைக் கவர்வன அவளுடைய இரு பெரு விழிகள்தாம். தொலையில் திகழும் ஒரு பொருளை அண்மையிலேயே கொண்டு வந்து நிறுத்தி, அக்காட்சியில் ஊன்றிய ஒரு களிப்பினை நுகரும் சக்தி அவற்றில் சுடர் விட்டுப் பிரகாசித்தது.



அத்தகைய சுடர் விழிகளை என் மேல் நிறுத்தி, ''இதென்ன வேடிக்கை? என் கடவுள் ஏன் இப்படித் தம் சிம்மாசனத்துக்கருகே வர உத்தர விட்டதோ? அம்மரத்து நிழலே என் கடவுளுக்கு ஏற்ற இடமாகிருந்தது'' என்றாள்.

நான் அந்த மரத்து நிழலில் உலாவுவதை இவள் பல நாட்களாகக் கவனித்து வருவதை நான் அறிவேன். எனக்குச் சலிப்புக்காணவே, அந்தத் தோட்டத்துப் பக்கமாக நான் வழக்கம் போல் உலாவுவதை நிறுத்தி விட்டேன். மொட்டை மாடியில், பரந்த வானிடை என் கற்பனையை விரித்து அகமகிழ்ந்தேன். அதனால் நான் அவள் சில நாட்களாக என்னை அந்த மரத்தின் கீழ் காணவில்லை.

சற்று நின்று அவள், ''கௌர்!* எனக்கு ஏதாவது உபதேசம் தரவேண்டும்'' என்றாள்.

'இதென்ன தொல்லை' என்று நினைத்தேன். ''உபதேசம் தரவும் எனக்குத் தெரியாது. அதைப் பெறுவதையும் நான் அறியேன். கண்ணைத் திறந்தபடியே கிடைப்பதை வைத்துக் கொண்டு காலம் கழிப்பதுதான் என்னுடைய கார்பார். இதோ உன்னை நேரில் காண்கின்றேன். இதனால் கண்ணுக்கு வேண்டியதும் செவிக்கு வேண்டியதும் கிடைத்து விட்டது எனக்கு'' என்றேன்.

இதைக் கேட்டு போஷ்டமி மிகவும் மகிழ்வெய்தி, 'கௌர கௌர' என்று உச்சரித்தாள். ''பகவான், வெறும் ரஸனையினால் (நாவினால்) மட்டுமல்ல, தம் எல்லா உறுப்பினாலும் பேசுகிறார்'' என்றாள்.

''கம்மென்று பேசாமல் இருந்தாலே நம் அங்கங்கள் வாயிலாகவே, ஒவ்வொரு உறுப்பினாலும் அவன் பேசுவது நமக்குக் கேட்குமே. அந்தப் பேச்சைக் கேட்பதற்காகவே நான் நகரைத் துறந்து இங்கு வந்தது'' என்றேன்.


அதற்கு போஷ்டமி, ''அதை நான் தெரிந்து கொண்டேன், அதனாலேயே உங்களை அண்டி வந்து இங்கு உட்கார்ந்தது'' என்றாள்.

அவள் எழுந்து போகும்பொழுது என் பாதங்களைத் தொட்டு வணங்க முற்படுகையில் நான் அணிந்திருந்த மேஜோடு (ஸாக்ஸ்) அவளுக்குப் பெருந்தடையாக இருந்ததென்று நினைக்கிறேன்.

மறுநாள், விடியற்காலையில், சூரிய உதயத்துக்கு முன்பே நான் மொட்டைமாடியில் வந்து உட்கார்ந்தேன். தென்புறமாகத் தோட்டத்திலுள்ள நாவு மரங்களின் உச்சிக்குமேல், திரை முடிவுவரை தென்படும் வயல்வெளி பரந்து விளங்கியது. கிழக்குப் பக்கமாக மூங்கில் புதர் சூழ்ந்த ஊர்ப்புறம்பாய் உள்ள கருப்பஞ்சோலை மூலை வழியாய் அன்றாடம் என்முன் கதிரவன் தோன்றுவான். கிராமத்து மண் பாதை மரங்களின் நிழல் கவிந்த வழியே சென்று, வெட்டவெளியில் கலந்து தொலைவில் தெரியும் வேற்றூர்களை நோக்கி வளைவான்.

கதிரவன் எழுந்தானோ இல்லையோ, தெரியாது. விதவைகள் அணியும் துல்லிய முக்காடுபோல் மரங்களின் முடிமிசை வெண்ணிற மூடுபனி திரையிட்டிருந்தது. அந்தப் பனியில் மங்கல் ஒளி

* கௌர் - கௌராங்கப்பிரபு- சைதன்னியர். கனிஞரைத் தன் இஷ்ட தெய்வமாகவே வைஷ்ணவி கொண்டாடுகிறாள்:



"என்டா! புஸ்தகத்தை வைச்சுண்டு படடா படடான்னு முட்டிண்டேனே... அப்போ ஊரைச் சுத்திட்டு இப்ப வந்து 'பால் ஆகலே'னு சொல்றயே? அப்படின்னு என்னடா அர்த்தம்?"
"பெயில்"னு அர்த்தம் அப்பா!"

யிடையே, அசையும் ஒரு பனியுருவம்போல் ஜாலராவில் தாளம் போட்டுக் கொண்டே ஹரிநாமம் பாடியவண்ணம், அந்த போஷ்டமி கிழக்குப்புறமான கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

தூயில் கலைந்து கண்ணிமைகள் மலர்வது போல் பனிப்படலம் மெல்ல விலகிற்று. வீடு வெளி எங்கும், தம் தொழிலை நடத்தும் மனிதருக்கு இன்பம் பயக்க அற்சிரக் காலத்து வெய்யில், ஊருக்கெல்லாம் வேண்டிய பாட்டனுரைப் போல் ஊர்ந்து வந்தது.

நான் அப்பொழுது, பத்திரிகை ஆசிரியரின் தாக்கீது தொல்லையைத் தீர்க்க மேஜைக் கெதிரே எழுத அமர்ந்தேன். அந்தச் சமயம் யாரோ வரும் காலடி ஓசையும், பாட்டின் குரலும் கேட்டன. போஷ்டமி முணுமுணுவென்று ஒரு பாட்டைப் பாடிக்கொண்டே என்முன் வந்து வணங்கியதும், சற்று ஒதுங்கித் தரையில் உட்கார்ந்தாள். நான் எழுதுவதை நிறுத்தி அவள் பக்கமாகத் திரும்பினேன்.

"நேற்று நான் தங்கள் பிரசாதத்தைப் பெற்று உயர்ந்தேன்" என்றாள் போஷ்டமி.

"எதைச் சொல்லுகிறாய்?" என்றேன் நான்.

"நேற்று மாலைப்பொழுது, நீங்கள் உணவு கொள்ளும் வேலையை அறிந்து கதவுக்கு வெளிப்புறமாகவே காத்திருந்தேன். நீங்கள் உண்டதும், வேலையாள் கலயத்தை வெளியே எடுத்து வரும்போது, அதில் என்ன இருந்ததோ நான் அந்தத் திருவமுதினை எடுத்து உண்டேன்" என்றாள் போஷ்டமி.

எனக்கு தூண்ட வியப்புக்கோர் எல்லை இல்லை. நான் வெளிநாடுகளுக்குச் சென்ற சமாசாரம் எல்லோருக்கும் தெரியும். அந்த இடங்களில் நான் இன்னது தின்றேன், இன்னது இன்னவில்லை என்பதைக் கூறுவது சற்றுக் கடினமே. ஆனால் பஞ்சகவ்வியம் [உடலைச் சுத்தம் செய்துகொள்ளும் ஒரு பிராயச் சித்த முறை] மட்டும் நான் உட்கொள்ள வில்லை. வெகு நாட்களாகவே மச்சம், மாமிசம் இவற்றின் மேல் எனக்கு வெறுப்புதான்! ஆனால் எனக்கு உணவாக்கிப் போடும் ஆட்கள் எந்த வகுப்பினர் என்பதைப்பற்றி ஆராய்வது உசிதமெனப் படவில்லை. என் முகத்தில் படர்ந்த வியப்பின் குறியைக் கண்டு போஷ்டமி, "உங்களுடைய பிரசாதத்தை நான் புசிக்காமல் போயிருந்தால், நான் இங்கு வந்து போவதில் ஓர் அர்த்தமும் இல்லை அல்லவா?" என்றாள்.

"ஐயோ, இந்த விஷயம் வெளியாருக்குத் தெரிந்தால் உன்னிடத்தில் அவர்களுக்கு உள்ள மதிப்பு, பக்தி எல்லாம் போய்விடுமே" என்றேன் நான்.

"ஏன், எல்லோருக்கும் இதை நான் தெரிவித்து விட்டேனே! அதைக் கேட்டு அவர்களும், 'எந்த நிலைக்கு வந்து விட்டாள் இவளும்' என்று நினைந்துக் கொள்ளாமல் போகவில்லை" என்றாள்.

போஷ்டமி யார், அவள் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவள்; எப்படி வாழ்கிறாள்.- இதுபோன்ற விஷயங்களைக் குறித்து எனக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இதுமட்டும் கேள்வி, அவளுடைய தாயார் நல்ல நிலையில் வாழ்ந்தவள்; இப்போதும் உயிருடன் இருக்கிறாள்; தன் மகளிடம் பலர் உண்மையாகவே பற்றுதல் பக்தியெல்லாம் கொண்டிருப்பதை அவள் அறிவாள். அந்த அன்னையின் விருப்பம், தன் பெண் தன்னுடனேயே இருக்க வேண்டுமென்பது. ஆனால் ஆனந்தி அதற்குச் சிறிதும் விரும்பவில்லை.

நான் கேட்டேன் அவளை-"ஜீவனோபாயத்துக்கு நீ என்ன செய்கிறாய்?" அவளுடைய பக்த ஜனங்களில் ஒருவர் அவளுக்குக் கொஞ்சம் நிலம்புலம் தந்திருப்பதாகத் தெரிந்தது. அவற்றில் விளைவதைக் கொண்டு தானும் புசித்துப் பத்து பேருக்குப் போடவும் போடலாம். "எனக்கு எவ்வளவோ சொத்து இருந்தது: அவற்றையெல்லாம் துறந்து வந்தேன். மீண்டும் பிறரை யாசித்து உஞ்சவிருத்தி செய்கிறேன். இதுவே போதும், சொத்து எதற்கு?" என்றாள் போஷ்டமி மெல்லச் சிரித்துக் கொண்டே.

இது நகரமாக இருந்தால், இப்படிச் சொல்லி யிருப்பின் இலேசில் விட்டிருக்க மாட்டேன். பிச்சை எடுத்து வயிறு வளர்ப்பது நம் சமூகத்துக்கு இழைக்கும் தீங்கு அல்லவா என்று உறைக்கும்படி சொல்லி யிருப்பேன். ஆனால் இந்த இடத்துக்கு வந்த பிறகு புத்தகத்திலிருந்து திரட்டிய அறிவின் செருக்கெல்லாம் எங்கேயோ பதுங்கிக் கொண்டு விட்டது. போஷ்டமியின் எதிரே வாதம் தொடுக்க என் வாயில் பேச்சே எழவில்லை. கம்மென்று இருந்தேன்.

என் மறுமொழிக்குக் காத்திராமல் போஷ்டமி தானே கூறப் புகுந்தாள் — "இல்லை. இதுவே மேல் எனக்கு; பிச்சை எடுத்து நான் உண்ணும் சோறே, எனக்கு ஆரா அமுதமாகும்."

அவள் பேச்சின் கருத்தை நான் புரிந்து கொண்டேன். அன்றுடம் தான் இடும்

பிச்சையால் மூவுலகையும் புரக்கும் அவனுடைய நினைவு வந்தது எனக்கு. சம்சாரச் சுழலில் இருக்கும்போது, நாம் உண்ணும் சோறு நுகரும் இன்பம் யாவும் நம் சொந்த முயற்சியால் கிடைப்பதாகும் என்று நினைத்து இறுமாந்து இருக்கிறோம்.

அவள் கணவன், வீட்டு விஷயம் இதையெல்லாம் விசாரிக்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு; ஆனால் நானும் அவளைக் கேட்கவில்லை. அவளும்தானே இதைப் பற்றி என்னிடம் எதுவும் சொல்ல முற்படவில்லை.

ஊரில் உயர் வருணத்தைச் சேர்ந்த பெரிய மனிதர்களைக் குறித்தும் போஷ்டமிக்கு அவ்வளவாக நல்ல மதிப்பு இல்லை. "இறைவனுக்கு இவர்கள் செலுத்தும் காணிக்கை ஒன்றுமே இல்லை. ஆனால் அவனுடைய பிரசாதத்தின் பெரும் பகுதியை இவர்களே அடித்துக் கொண்டு போகிறார்கள். எளியவர் தம் பக்தியைத் தந்து அதற்குப் பிரதியாகப் பட்டினியை அனுபவிக்கிறார்கள்" என்றாள்.

ஊரில் நடக்கும் அநீதங்களைப் பற்றிக் கேள்வி உண்டு. "இந்தமாதிரி துன்மார்க்கர்களிடையே இருந்து அவர்களுக்குப் புத்தி புகட்டினால்தான் உண்மையாக பகவானுக்குத் தொண்டாற்றியதாகும்" என்றேன்.

இதுபோன்ற உயர்வகையான நல்லுரைகள் பல கேட்டிருக்கிறேன். பிறருக்குப் போதிக்கவும் ஆர்வம் கொள்வேன். ஆனால் என்னுடைய நல்லுரைக்கு போஷ்டமி மசியவே இல்லை. என்னையே தன் சுடர்விடும் கண்களால் கூர்ந்து நோக்கி, "பகவான் பாபிகள் இடையேயும் இருக்கிறார். அவர்களுடன் இருப்பதே அவருக்குச் செய்யும் சிறந்த பூசையாகும் என்கிறீர்களா?" என்றாள்.

"ஆமாம்" என்றேன் நான்.

"எப்போது அவர்கள் பிழைத்து இருக்கிறார்களோ, பகவான் அவர்களுடன் இருக்கிறார் என்று தெரிகிறதே.....ஆனால் எனக்கு அதனால் என்ன? எனது வழிபாடு அந்த இடத்திற்கு ஏற்றதன்று. என்னுடைய இறைவன் அவர்களிடையே இல்லை. அவர் இருக்குமிடத்தைத் தேடித்தான் நான் அலைந்து கொண்டிருக்கிறேன்."

இதைக் கூறியதும் அவள் என்னை வணங்கினாள். அவள் பேச்சில் தொனித்த பொருள் இதுவே. வெறும் கொள்கை விருந்தால் போதுமா? உண்மைதான்வேண்டும். பகவான் எங்கும் நிறைந்த பொருள். அந்தப் பேச்சு ஒருபுறம் இருக்கட்டும். எந்த இடத்தில் அவருடைய காட்சி நமக்குக்கிடைக்கிறதோ அங்கு அவர் தம் உண்மை உருவில் விளங்குகிறார்.

இவ்வளவு பெரிய விஷயங்களை எடுத்துரைப்பதற்கு எத்தனையோ பெரியவர்கள் இருக்க, அந்த போஷ்டமி என்னை ஒரு பொருட்டாக்கித் தன் பக்தியை வெளிப்படுத்துகையில், நான் அதை ஏற்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை.

இந்தக் காலத்துச் சாயம் என்னையும் பற்றிக் கொண்டது. கீதையைத் தவறாமல் படிக்கிறேன்; பண்டிதர்களை அண்டி அவர்கள் திருவாய் மலர்ந்தருளும் தர்ம தத்துவங்களின் நுணுக்கமான வியாக்கியானங்களைக் கேட்டு வருகிறேன். இப்படியே எனக்கும் வயதும் ஏறிக்கொண்டே வந்துவிட்



"நம்ம சாமுகிட்டே கொஞ்சம் கோந்து இனுமா வாங்கிண்டு வந்தேன். அது ஒட்டவே மாட்டேங்குது!"

"எதுவுமே காசு கொடுத்து வாங்கினால்தான் ஒட்டும்!"

டது. ஆனால் என்னுடைய ஐயங்கள் சிறிதளவாகிலும் தெளிந்தபாடில்லை. இத்தனை நாட்களுக்குப் பிறகு, அறிவின் அகந்தை நோக்கத்தைத் துறந்து, சாத்திரம் வேதாந்தம் படிக்காத ஒரு பெண்ணின் இரு கண்களைக் கொண்டு உண்மையைக் கண்டேன். பக்தியைக் காட்டுவதுபோல் என் கண்ணைத் திறக்கும் இந்தப் போதனை முறைதான் என்ன ஆச்சரியமானது!

மறுநாள் காலை போஷ்டமி வந்து என்னை வணங்கிய போது நான் எழுதுவதில் தோய்ந்திருப்பதைக் கண்டாள். வெறுப்புற்று அவள், "உங்களை ஏனோ என் இறைவன் இப்படியெல்லாம் வாட்டி எடுக்கிறானோ? நான் எப்போது வந்தாலும் நீங்கள் ஏதாவது எழுதிக் கொண்டே இருக்கிறீர்கள்!" என்றாள்.

"எந்த வேலையும் இராத மனிதனைக் கடவுள் வெறுமே இருக்க விடுவதில்லை; அப்படி விட்டால் அவன் மண்ணாகிப் போய் விடுவான். அதனாலேயே உதவாத காரியங்களைச் செய்யும் பொறுப்பை அவன் மீது போடுகிறார்" என்றேன் நான்.

என்னைச் சுற்றிலும் பல மூடிகள் இருப்பதைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை. என்னை வந்து பார்க்க வேண்டுமானால், கீழே உள்ளவர்களிடம் அனுமதி பெற்று மாடிகள் ஏற வேண்டியிருக்கிறது. என் கால்களைத் தொட்டு வணங்குவதாயிருந்தால் மேஜோடு கையில் சிக்குகிறது. மனம் விட்டு இரண்டு வார்த்தை பேச விழைந்தால் நான் என் எழுத்து வேலையில் ஆழ்ந்து விடுகிறேன்!

கைகூப்பி அவள், "கௌர், இன்று நான் என் படுக்கையை விட்டு எழுந்ததும், உங்கள் இணையடியையே பெற்றேன். அந்த இரண்டு மெல்லிய பாதங்கள் அவற்றை எதுவும் மூடி

நூற்றுக்கு நூறு!



கடைத் தெருவில் கேட்டது

"வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் ஒரே வித படிக்கல்லா? இதென்ன விபரீதம்!"

புதிய மெட்ரிக் முறையின் படிக்கல்கள் தராசுக்கு வந்தபோது, சகுனத் தடை போல எழும்பிய கேள்விக் குறியே அது.



அது அந்தக் காலம்!

தொன்று தொட்டு இன்றுவரை தராசுத் தட்டில் இடம் பிடித்துக்கொண்டிருந்த எடைவகைகள் தாம் எத்தனை? வட்ட வடிவமானவை, சதுர வடிவமானவை . . . பற்பலவாகப் பெயர் தரித்தவை . . . ஏன், படிக்கல்லைப் போல நடித்த பொருள்களும் உண்டு.



பசித்து வந்த இந்திரனுக்கு சிபிச் சக்கரவர்த்தி தம் உடலின் தசையைத் தராசில் வைத்து நிறுத்தபோது, எடைத் தட்டிலிருந்த 'படிக்கல்'லானது வாய் திறந்து "அட கடவுளே, இவ்வளவு கனமா நான்!" என்றதாம். புலால் நிறுக்கப் புரு எடை போலும்!

வீட்டுக் கணக்கு

ரவைக்கு (ஆங்கில) ராத்தல் வாய்ப்பாடும், சர்க்கரைக்கு (இந்திய) வீசை வாய்ப்பாடும் நினைவுபடுத்த வேண்டிய தொல்லையைச் சொல்லியழுது "எல்லா சாமான்களுக்கும் ஏதோ ஒரே வித வாய்ப்பாடு இருந்து தொலைக்கக் கூடாது?" என்று ஒரு மாணவன் புலம்பியபோது, 'ரவையும் சர்க்கரையும் ஒன்றாகிவிடுமாடா, மண்டு?" என்று சட்டென்று மட்டந்தட்டிய தந்தையும் தன் தவமகனின் 'பார புத்தி'யைப் பிற்பாடு உணரத்தான் செய்கிறார். முக்கியமாக, அன்றாடம் மகனின் வீட்டுக் கணக்குடன் போராடுவது அவரன்றி வேறு யார்?



வெளியிலும் கணக்கு

வீட்டுக் கணக்குக்குப் பயந்து வெளியே கிளம்பினாலோ, அங்கே ஒவ்வொரு கடைக்காரக் கணவானும் ஒவ்வொரு விதமான கணக்கைக் கொடுத்து வதைக்கின்றனரே! புளி, மிளகாய்க்கு வீசை கணக்கை வீசுகின்றனர்; செப்புப் பாத்திரங்களுக்கு சேர் கணக்கு செப்புகின்றனர்; விறகு என்றால் 'குண்டு' போடுகின்றனர்; தங்கத்திற்கு வராகனெடை, வெள்ளிக்கு ரூபாயெடை, இரும்புக்கு அந்தர், மண்ணெண்ணெய்க்கு காலன், ஆமணக்கெண்ணெய்க்கு அவுன்ஸ் . . . . . . முடிவாக, படியளக்கும் கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, பணத்தை மட்டும் அளந்துகொடுப்பவரின் நிலை பரிதாபத்துக்குரியதே!



ஆயிரம் உண்டிங்கு அளவை!

இன்று நம் பாரத பூமிக்குப் பாரமாக, நூறு விதமான மணங்குகள் புழங்குகின்றனவாம். ஓரிடத்தில் மணங்குக்கு 280 தோலா. மற்றோர் இடத்தில் 8320 தோலா.


DL.467 A-19 TM



வாய்பாட்டை எடுத்துப் பார்த்தாலோ 3200 தோலா. அதே மாதிரி ஒரு சேர் என்றால் 8 தோலா முதல் 160 தோலா வரை இடத்திற்கு இடம் வேறுபாடு. மொத்தம் 143 விதமான எடை வகைகள் இந்தியாவிலிருப்பதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. ஆகவே, எல்லாக் காலதேச வர்த்தமானங்களுக்கும் பொதுவானதொரு விதியை வரவேற்கத் தோன்றுகிறதல்லவா ?

நல்ல கழி

எனினும், புதிய மெட்ரிக் முறையை எதிர்ப்பவர்களோ ஒரு அங்குலம்கூட (ஒரு மில்லிமீட்டர்கூட) அசைந்து கொடுக்காமல் " அதெல்லாம் சரிதான். ஆனால், அந்நிய முறை வந்துபுகல் என்ன நீதி ? " என்று முறையிடுகின்றனர். அக் கேள்விக்குப் பூஜ்யமே தக்க பதில் ! விளங்கச் சொல்வோமானால், மெட்ரிக் முறையின் அடிப்படைத் தத்துவமான பூஜ்யம் பிறந்த நாடே நம் நாடுதான். இன்று உலகில் முக்கால் பங்கு ஜனத்தொகை கொண்ட 77 நாடுகளில் செங்கோல் செலுத்தி வரும் மெட்ரிக் முறைக்குப் பிள்ளையார்சுழி வைத்த நாடே பாரத புண்ணிய பூமிதான் !



" எல்லோரும் ஓர் நிறை "

" வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் ஒரே படிக்கல்லா ? " என்ற கேள்வியைப் பொருட்படுத்தாமல், வெண்ணெய், சுண்ணாம்பு, வெங்காயம், விறகு, தோல், தவிடு, தங்கம், இயந்திரம், யானை . . . எல்லாவற்றிற்கும் பொதுவான நட்புறவை, உண்மையான மதிப்பை வெளியிடும் ஒரேயொரு உரைகல்லே ஏற்படுத்தி வைத்துள்ள தராசின் சமத்துவக் குறிக்கோளை எவ்வாறு புகழ்வது !



நூற்றுக்கு நூறு

" வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் ஒரே வித படிக்கல்லா ? " என்பதைப் போலவே மற்றொரு அபத்தமான கேள்வி கேட்கப்படுவதுண்டு: " பூரி பொரிக்கும் சமையல் கொழுப்பினால் புளியோதரை பிசையலாமா ? "

எல்லா வித சமையலுக்கும் பயன்படுவதற்கென்றே தயாரிக்கப்பட்டுள்ள தாவரக் கொழுப்பே டால்டா வனஸ்பதி. பொரித்தல், வறுத்தல், தாளித்தல், இனிப்புப் பண்டங்களும் கார வகையறுக்களும் செய்தல் முதலிய பற்பல சமையலுக்கும் பயன்பட்டு லட்டு, ஜிலேபி, சோமாசி, தேன்குழல் முதல் சாம்பார், இரசம், கூட்டு, அப்பளம் வரை சகல உணவுகளுக்கும் உகந்த நட்புறவாக விளங்கும் ' டால்டா ', மெட்ரிக் முறை போன்றது.

பாரத புண்ணிய பூமியில் விளையும் வித்துகளினின்று இறக்கப்பட்டு, வைட்டமின்கள் சேர்க்கப்பட்டு, புதுமையும் தூய்மையும் செறிந்து, பேரீச்சைமர அடையாளமிட்ட டின்களில் நமது சமையலறைகளை வந்தடையும் ' டால்டா ' ஊட்டமளிப்பதுமன்றி, எல்லா உணவுகளின் இயற்கையான சுவைகளையும் நூற்றுக்கு நூறு வெளிக்கொணருகிறது.



ஆயுசு நூறு !

எல்லாவற்றிற்கும் இனிமேல் மெட்ரிக் முறைதான் என்றாலும், நவரத்தினங்களோடும் பொட்டுணத்தோடும் உங்களை நீங்களே நிறுத்துக் கொள்ளப்போவதை நான் தடைசெய்யவில்லை. அதாவது, நானே நீங்கள் கொண்டாடப் போகும் வைரவிழா, சதாபிஷேக வைபவங்களை நினைத்துக் கொண்டேன். ஆம், " ஆயிசு நூறு ! " என்று நான் வாழ்த்துவது உங்களைத்தான் ! " ஆயிசு நூறு ? அதுவும் மெட்ரிக் முறைதானே ! " என்று பதிலளிக்கிறீர்களோ ! சரி, உங்களுக்கு நூற்றுக்கு நூறுதான் !

யிருக்கவில்லை. என்ன குளிர்ச்சியாக இருந்தது. நான் அவற்றைத் தொடும் போது. என்ன மென்மை! சற்று நேரம் என் தலை மீதே தாங்கியிருந்தேன். அதுவே எனக்குப் போதுமானது. இனி இந்த இடத்தில் நான் வர வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? பிரபு! இது எனக்குள்ள மோகமா? இது என்ன என்பதைச் சொல்லுங்கள்'' என்றாள். நான் எழுதும் மேஜை மீது பூச்செப்பில் முன்னுள் வைத்த பூக்கள் இருந்தன. தோட்டக்காரன் பழைய மலர்களை எடுத்து விட்டுப் புதியன வைப்பதற்காக அங்கு வந்தான். அவன் வாடிய பூக்களை ஒதுக்கி விடுவதைப் பார்த்து போஷ்டமி, '' ஐயோ, அந்த மலர்களின் கதை முடிந்து விட்டதா? இனிமேல் அவற்றால் பிரயோசனம் ஒன்றுமில்லையா? என்னிடம் கொடுங்கள் ...... கொடுங்கள் எனக்கு'' என்றாள்.



இதைக் கூறியதும், அந்த வாடிய மலர்களை அஞ்சலியாகச் சேர்த்துச் சற்று நேரம் தன் தலையைத் தாழ்த்தி, அன்பின் கனிவுடன் ஒரே நிலையாக நோக்கியபடி நின்றாள்.

சில கண நேரம் இவ்வாறு சென்றதும், முகத்தைநிமிர்த்தி, ''நீங்கள் ஏறெடுத்துப் பாராததால் இந்த மலர்கள் வாடிப் போனவையாகத் தோன்றுகின்றன உங்களுக்கு. கண்ணெடுத்துப் பார்த்தால், உங்கள் எழுத்து, படிப்பு இவற்றின் மயக்க மெல்லாம் தொலைந்து போம்'' என்றாள்.

அழகிய செப்பினுள் வைப்பதனாலே பூக்களுக்குரிய ஆதரவு வெளிப்படாது என்பதை நான் உணர வெகு நேரமாகவில்லை. பள்ளியில் பாடம் படிக்காத சிறுவர்களைப் பெஞ்சுமீது நிற்க வைத்துக் கஷ்டப்படுத்துவது போலவே இந்த மென் மலரை வாட்டுகிறோம் என்று என் மனத்தில் பட்டது.

அன்று அந்திப் பொழுது. நான் மொட்டை மாடியில் உட்கார்ந்திருந்த போது ஆனந்தி போஷ்டமி என் கால் பக்கம் வந்து மெல்ல அமர்ந்தாள். '' இன்று ஹரிநாமம் பாடும் போது உங்களுடைய பிரசாதமான அந்தப் பூக்களை ஒவ்வொரு விடாக வைத்து விட்டு வந்தேன். என்னுடைய பக்தியைப் பார்த்து வேணி சக்கரவர்த்திசிரித்து, ''பைத்தியக்காரி! யாரிடம் பக்தி செலுத்துகிறாய், தெரியுமா? உலகத்தவர் அந்த ஆளை மிகவும் கெட்டவன் என்கிறார்கள். உன்னை எல்லோரும் பின்னால் இட்டுகிறார்களே! தெரியவில்லையே உனக்கு!'' என்று கூறினர்.

சிறிது நேரம் என் மனம் எதனாலோ கூசிக் கொண்டது. என்னைப் பற்றி இந்த உலகம் இட்டும் ஒரு கறுப்புச் சித்திரம் இந்த நாட்டுப் புறத்துள்ளும் பரவி விட்டதே!

போஷ்டமி தொடர்ந்தாள் — '' வேணி நினைத்தார், என்னுடைய பக்தியை 'பூ' என்று ஊதிவிடலாமென்று. ஆனால் இது என்னை இட்டு எரியும் விளக்கல்ல. இது நெருப்பு! கனல்! உங்களை அவர்கள் இப்படித் திட்டக் காரணமென்ன?''

'' எனக்குப் பிராப்தம் இருப்பதனால்தான். என்றைக்காவது நான் மறைவாக அவர்களுடைய உள்ளங்களைக் கொள்ளை கொள்ள ஆசைப்பட்டிருப்பேன்'' என்றேன் நான்.

அதற்கு போஷ்டமி, '' மனிதர் உள்ளத்தில் என்னமாதிரி விஷம் நிரம்பியிருக்கிறது பார்த்தீர்களா? ஆற்றாமை எப்போதும் நிலைக்காது'' என்றாள்.

'' மனத்துள் ஆற்றாமை இருந்தால் எதிர்ப்பையும் அடியையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்; அதனால் தன்னையே அழிப்பதற்கான விஷம் தன் மனத்துள்ளேயே சேர்ந்து கொண்டிருக்கும். ஆகையால், நம் இதயத்திலுள்ள அந்த மந்திரவாதி நம் உள்ளத்தை அந்தப் பாழும் நச்சிலிருந்து புனிதமாக்க இவ்வளவு கடினமான சோதனைகளை இயற்றுகிறார்'' என்றேன் நான்.

'' கருணைக்கடலான இறைவன், இப்படி நைய நைய அடித்தே, அடியிலிருந்து நம்மை உய்விக்கின்றான். கடைசிவரை பொறுத்துக் கொள்பவனே பிழைத்துப் போகிறான்'' என்றாள் போஷ்டமி.

அன்று சாயங்காலம், இருட்டியதும், மாடி மீது வான் விளிம்பில் துடித்த அந்தி வெள்ளி மெல்ல அத்தமனமாகியது. போஷ்டமி தன் வாழ்க்கை வரலாற்றை எனக்குச் சொன்னாள்.

'' என் கணவர் மிகவும் வெள்ளை மனம் படைத்தவர். உலகத்து விஷயங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவருக்குக் குறைவென்பது பலருடைய எண்ணம். ஆனால், வெளுத்ததெல்லாம் பாலென்ன நம்புபவர். மொத்தத்தில் எதையும் நன்கு புரிந்து கொள்பவர் என்பது என் கருத்து.

உழவுத் தொழில், நிலபுலன் போன்ற விஷயங்களில் அவரைச் சிலர் ஏமாற்றினாலும், தம் சொத்து விஷயத்திலும், வீட்டுக் கடமையிலும் சற்றும் வழுவிச் செல்லாதவர். நெல் சணல் வியாபாரம் ஏதோ கொஞ்சம் நடத்தி வந்தார்; அதில் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டதே இல்லை. ஏனென்றால் அவருக்குப் பணம் திரட்ட வேண்டுமென்று உலோப சிந்தனை இல்லை. தமக்கு வேண்டிய அளவு கணக்குப்படி நடத்தி வந்தார். அதற்குமேல் அவர் ஆசைப்படவில்லை. புரியாத விஷயங்களில் தலையிடவே மாட்டார்.

' எனக்கு மணமாவதற்கு முன்பே மாமனார் இறந்து போய்விட்டார்; என் விவாகம் ஆகித்

சில நாட்களுக்கெல்லாம் மாமியாரும் போய் விட்டாள். எனக்கு மேல் ஒரு படி உயர நிற்பதற்குக் குடும்பத்தில் எவருமே இல்லை.

தனக்கும் மேலாக ஓர் ஆள் இருக்க வேண்டுமென்பது என் கணவருடைய உறுதி. எனக்கே வெட்கமாக இருக்கிறது, சொல்லிக் கொள்ள. என்னை அலங்கரித்தார். என்னைவிட எத்தனையோ விஷயங்களை அவர் அறிவார்; அவரைவிட நான் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசுவேன் என்பது என் எண்ணம்.

'எல்லாரையும் விடத் தம் குருநாதனிடமே அவருக்கு அசையாத பக்தி. வெறும் பக்தி அன்று; காதல்....அத்தகைய காதலைக் காண்பது மிகவும் அரிது.

'அந்தக் குருநாதன் அவரை விட வயதில் இளையவர். என்ன சுந்தரமான வடிவம் அவருக்கு!'

இதைக் கூறுகையில் கண நேரம் போஷ்டமி நின்று, தொலைவிலுள்ளதை ஊடுருவும் தனது கண்ணோக்கினைத் தொலைவில் செலுத்தி மெல்லப் பாடினாள்:

'அருணச் செங்கதிரை
அமுதக் கலவையில்
தோய்த்தே
தருணத் தங்கத் திரு
மேனிதனைத்
திட்டித்தந்த பிரமன்
எவனோ!'

'இந்தக் குருநாதனுடன் இளம் பிராயத்திலேயே அவர் விளையாடியவர். அந்த நாள் முதற் கொண்டே அவருக்குத் தம்மை அர்ப்பணம் செய்துகொண்டு விட்டார். அச்சமயம் என் கணவரை அந்தக் குருநாதன் ஒரு முட்டாள் என்றே கருதிச் செய்யாத உபத்திரவமெல்லாம் செய்து வந்தார். மற்ற நண்பர்களுடன் சேர்ந்து அவர் என்கணவரை ஏளனம் செய்து அழ மூட்டியது இவ்வளவுஅவ்வளவு இல்லையாம்.

'மணமாகி இந்தக் குடும்பத்தில் நான் புகுந்தபோது அந்தக் குருநாதனை நான் காணவில்லை. அவர் காசியில் வேதசாத்திரம் பயின்று கொண்டிருந்தார். என் கணவரே, அவர் செலவுக்கு ஆகும் பணத்தை அனுப்பி வந்தார்.



குருநாதன தம் ஊருக்குத் திரும்பியபோது எனக்குப் பதினெட்டு வயது நிரம்பியது. பதினேந்தாம் வயதில் எனக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதை அன்பும் ஆதரவும் தந்து வளர்க்க எனக்குத் தெரியவில்லை. விளையாட்டுப் புத்தி; என்னுடைய தோழிகளுடன் உல்லாசமாகத் திரிவதிலேயே என் மனம் செல்லும். குழந்தைக்காக வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்க எனக்குப் பிடிக்காது. இதனால் சில சமயம் என் கணவர்மீதும் எரிந்து விழுவேன்.

'குழந்தை பிறந்து விட்டது; அதைப் பெற்றெடுத்தவள் கடமையைச் செலுத்தப் பின் வாங்குவதைப் போன்ற அவக்கேடு ஒன்று உண்டோ? என்னுடைய 'கோபாலன்' என்னைத் தேடிக்கொண்டு வந்தான்; ஆனால் அவன் தின்பதற்கான நவநீதத்தை நான் கடைந்து வைக்கவில்லையே! அதனால் என் மேல் கோபங்கொண்டு போய் விட்டான். இன்னும் அவனைத் தேடித் தேடித்தான் வழி துறை எங்கும் அலைகிறேன்.

'என் குழந்தை அவனுடைய தகப்பனின் கண்மணியாக இருந்தான். அவனைச் சீராட்டி வளர்க்க எனக்குத் தெரியவில்லையே என்று அவர் மனம் மிகவும் புண்பட்டது. ஆனால் அவருடைய உள்ளம் எதையும் வெளியிடத் தெரியாத ஊமை போன்றது. இன்றளவும் தம் மனநோயை அவர் யாரிடமும் சொல்லிக் கொண்டதில்லை. ஒரு பெண்ணுக்குரிய ஆசை ஆதரவுடன் மகனை வளர்த்துவந்தார். இரவில் குழந்தை அழுதால் ஆழ்ந்து தூங்கும் என்னை எழுப்பமாட்டார். தாமே இரவில் கண் விழித்துப் பாலைச் சுடவைத்துக் குழந்தையை எடுத்துத் தம் மடியில் விட்டுப் பாலைப்புகட்டி அதன் பசியைத் தீர்ப்பார். இதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர் செய்யும் காரியம் ஒவ்வொன்றும் இப்படித்தான் ஓசைப்படாமல் நடக்கும். பூஜா விழாவின்போது ஜமீன்தார் மாளிகையில் நாடகமோ கதா காலட்சேபமோ நடப்பதாக இருந்தால், 'ராத்திரி நான் விழிக்க முடியாது. நீ போய்ப் பார்த்து விட்டுவா' என்பார். அவர் குழந்தையைக் கவனித்துக் கொள்ளாது போனால் நான் போக முடியாதே என்பதனால் இப்படி ஒரு சாக்குச் சொல்லுவார்.

'இதில் வியப்பு என்னவெனில், குழந்தை என்மீதே உயிராக இருந்தது. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் நான் அதை விட்டு விட்டுப் போய் விடுவேன் என்பதை அது அறிந்து கொண்டிருந்தது. அதனாலேயே அது என்னுடன் இருக்கும்போது பயத்துடனேயே இருக்கும். என்னை அது அதிகமாகப் பெறாத குறையாலேயே என்மீது அதற்கிருந்த ஆசைக்கோர் அளவில்லை.

'நான் குளத்துறைக்கு நீராடச் செல்லுகையில் கூடவே வருவதற்கு அது ஒவ்வொரு நாளும் பிடிவாதம் பிடிக்கும். என்னுடைய தோழிமார்களைச் சந்தித்து அளவளாவுவதற்கு அந்தத் துறைதான் ஏற்ற இடம். அங்கே குழந்தையை அழைத்துச் சென்றும், அதைக் கவனிக்கும் பொறுப்பு எனக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால் அதை அழைத்துச் செல்லவே எனக்குப் பிடிக்காது.

ஓர் ஆவணி மாதம். கருமேகங்கள் வானில் கவிந்து பகற் பொழுதை இருளடையச் செய்தன. நான் குளிக்கப் புறப்படுகையில் என் மகன் கூட வரவேண்டுமென்று பெரிய ஓலம் வைக்கத் தொடங்கினான். நிஸ்தாரிணி சமையலறையில் எனக்குக் கூடமாட உதவிசெய்யும் அவ்வூர்ச் சிறுமி. அவளைக் கூப்பிட்டு, 'குழந்தே, இந்தப் பையனைச் சற்றுப் பார்த்துக் கொள். இதோ குளத்துக்குப் போய் ஒரு முழுக்குப்போட்டு விட்டு வந்து விடுகிறேன்' என்றேன்.

'படித்துறையில் அச்சமயம் ஒரு ஈ காக்கை இல்லை. என்னுடைய சகிகள் வருவார்கள் என்று எதிர்பார்த்து நான் நீரில் நுழைந்து நீச்சல் அடிக்கத் தொடங்கினேன். பழைய காலத்துக் குளம் - எந்தக் காலத்திலோ ஒரு ராணி அதை வெட்டச் செய்தாளாம். அதனால் அதற்கு ராணி-ஸாகர் என்ற பெயர்.

ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு நீந்திக் கொண்டு போவதற்கு என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணாலும் ஆகாது. மழை நிறையப் பெய்திருந்ததால், குளத்தில் நீர் வாய் வழிய நிரம்பி இருந்தது. நான் குளத்து நீரில் பாதியளவு நீந்திக் கடந்து அக்கரையை நோக்கிச் செல்லுகையில் என் பின்புறமாகச் சின்னக் குரல் கேட்டது. 'அம்மா!' திரும்பிப் பார்த்தேன். என் மகன் ஒவ்வொரு படியாக இறங்கிக் கொண்டே என்னை அழைக்கிறான். நான் உரத்துக் கூவினேன். 'அங்கேயே இருடா. நான் வந்துவிடுகிறேன்' நான் தடுப்பதைக் கேட்டு அவன் சிரித்துக் கொண்டே




ஒரு புதிய ரேடியோ . . .

நேஷனல் எக்கோ



மாடல் 730

* புதிய 'மாக்னி-பாண்ட்' ட்யூனிங்!
* பிரத்தியேகமாக பாண்ட் ஸ்ப்ரெட் செய்யப்பட்ட 41 மீட்டர்-பாண்ட்!



மாடல் A-730: 6 வால்வுகள், 6 பாண்டுகள். ஏஸி ஸெட்.
மாடல் U-730: ஏஸி/டிஸி ஸெட்.
மென்மையான பாலிஷுடன் கூடிய மர காபினெட்.

ரூ. 495.00 நெட்
உள்ளூர் வரிகள் தனி

நேஷனல்-எக்கோ ரேடியோக்கள் சிறந்தவை — அவைகள் மான்ஸூனைஸ் செய்யப்பட்டவை

நுட்பமான ஸ்டேஷன்கள் சரியாகக் கிடைக்க நீங்கள் சிரமப்பட வேண்டியதில்லை. புதிய நேஷனல்-எக்கோ மாடல் 730, 'மாக்னி-பாண்ட்' ட்யூனிங் வசதியுடன் கூடியது. இந்த ரேடியோவில், பல முக்கிய ஸ்டேஷன்கள் உள்ள 41 மீட்டர் பாண்ட், பிரத்தியேகமாக பாண்ட் ஸ்ப்ரெட் செய்யப்பட்டிருப்பதால் ஸ்டேஷன்கள் எளிதில் மிக நுட்பமாகக் கிடைக்கும்.

உங்களுக்கு அருகாமையிலுள்ள அங்கீகாரம் பெற்ற நேஷனல்-எக்கோ ரேடியோ வியாபாரியிடம் இன்றே சென்று இந்த புதிய மாடல் 730 ரேடியோவைப் பாருங்கள்.

ஜெனரல் ரேடியோ அண்டு அப்ளையென்ஸஸ் பிரைவேட் லிட்.,
ஆபேரா ஹவுஸ், பம்பாய்-4 • 3 மதன் ஸ்ட்ரீட், கல்கத்தா-13 • ப்ரேஸர் ரோட், பாட்னா • 1/18, மவுண்ட் ரோட், மதராஸ் • 36/79, ஸில்வர் ஜுபிலி பார்க் ரோடு, பெங்களூர் • ஜோக்கியன் காலனி, சாந்தினி சௌக், டெல்லி • ராஷ்டிரபதி ரோட், செகந்திராபாத்



GRA. 1


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


புத்துணர்ச்சி அளிக்கும் வஸந்த
மலர்களின் நறுமணம்!
காஷ்மீர் பொக்கே டால்கம் பௌடரின்
வாசனை வஸந்தகால மலர்களின் மணத்துடன்
புத்துணர்ச்சியையும், ஆனந்தத்தையும்,
மனோரம்மியத்தையும் அளிக்கிறது!
உங்கள் வசீகரத்தையும்,
மென்மையையும்
பன்மடங்
காக்குகிறது!
Cashmere
Bouquet
TALCUM POWDER
காஷ்மீர் பொக்கே
டால்கம் பவுடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்
ஒரு கால்கேட்-பாமாலிவ் தயாரிப்பு



இன்னும் இரண்டு படிகள் இறங்கி நீர் மட்டத்துக்கு வந்து விட்டான். பயத்தினால் என் கை அப்படியே மரத்துப் போய் விட்டது. என்னால் சட்டெனத் துறைக்கு வர முடியவில்லை. கண்ணை மூடிக் கொண்டேன், என் கண்ணில் என்ன பயங்கரக் காட்சி தென்படுமோ என்று. அதே சமயம் குளத்து நீரில் என் குழந்தை சிரித்த குரல் என்றென்றைக்குமே நின்று விட்டது. நீந்திக் கொண்டே வந்து அன்னையின் மடிக்காக ஏங்கிய மகனை நீரிலிருந்து எடுத்து வைத்துக் கொண்டேன். ஆனால் அவன் என்னை 'அம்மா' என்று மறுபடியும் கூப்பிடவே இல்லை.

'என் கோபாலனை நான் இது வரை எடுத்துக் கொஞ்சாமல் அழ வைத்தேன். நான் அலட்சியமாக இருந்த தவறெல்லாம் அன்று என்னை நோக்கிப் பாய்ந்து துன்புறுத்தின. உயிருடன் இருக்கும் போது எந்தக் கண்மணியை நான் புறக்கணித்தேனோ, இன்று அவன் இரவும் பகலும் என் இதயத்தைக் கெட்டியாகத் தழுவிக் கொண்டிருக்கிறான்.

'என் கணவர் மனத்தை இந்தச் சோகம் எப்படி வாட்டியது என்பது அந்த அந்தரியாமிக்குத்தான் தெரியும். என்னை அவர் திட்டி அடித்தாலும் நன்றாக இருந்திருக்குமே; ஆனால் அவருக்கு மௌனமாக இதைச் சகித்துக் கொள்ளத் தெரியுமே தவிர, வாய்விட்டு அரற்றத் தெரியாது.

'நான் பைத்தியம் பிடித்தவள் போல் ஆனேன். அச்சமயம் குருநாதன் ஊருக்குத் திரும்பி வந்தார்.

'சிறிய வயதில் என் கணவர் அவருடன் விளையாடி இருக்கலாம். அப்போது அவர்களிடையே இருந்த பாவமே வேறு. இப்பொழுது நெடுநாள் பிரிவுக்குப் பின்னர் தம் இளம் வயது நண்பன் பெரிய பண்டிதனாக ஊருக்குத் திரும்பி வந்து இருக்கையில், என் கணவருக்கு அவரிடம் சொல்லொணாத பக்தி மூண்டது.

'என் கணவன் என்னுடைய சோகத்தை ஆற்றுவதற்காகத் தம் குருநாதனை ஏதாவது வழி செய்யுமாறு வேண்டிக் கொண்டார். குரு எனக்குச் சாத்திரங்களின் உண்மைகளை எடுத்து உரைத்தார். ஆனால் எனக்குப் பலன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. குருநாதனின் வாயிலிருந்து வரும் நல்லுரைகளாயிற்றே என்றதால், நான் சற்று மதிப்பு வைத்தேனே தவிர வேறில்லை. மனிதரின் குரலைக்கொண்டே பகவான் பாபிகளுக்குத் தம் அமுதைப் புகட்டுகிறார். ஆனால் அத்தகைய அமுதகலசம் என்னவோ அவர் கையில் இல்லை. மீண்டும் அந்த மனிதக் குரலைக் கொண்டே அவரும் அமுதச் சுவையான பாலினைப் பருகுகிறார்.

'குருவினிடத்தில் என் கணவருக்குள்ள அளவற்ற பக்தி, என் சம்சார வாழ்வினை இனிமை துளும்பும் தேன்கூடாக மாற்றி விட்டது. உண்பது, உறங்குவது, உலாவுவது இப்படி எல்லா விஷயங்களிலும் இந்தக் குரு பக்தியே ஓரிடத்திலாவது புரையிராமல் நிரம்பி விளங்கியது. இந்தப் பக்திச் சுவையில் மூழ்கி நான் ஆறுதலைப் பெற்றேன். ஆதலால் நான் வழிபடும் கடவுளையே எனது குருவாகத் தேர்ந்து கொண்டேன்.

'அவர் வந்து போஜனம் பண்ணியபிறகே, அந்த மிச்சிலை நாங்கள் உண்போம். எப்போதும் அவர் நினைவே; அவர் மனம் திருப்தி அடைய எப்படியெல்லாம் தொண்டு செய்வதென்ற நினைவேதான். அவருக்காக நான் காய்களைச் சமையலுக்காக நறுக்கும்போது என் விரல்கள் களிநடம் புரியும். நாங்கள் பிராம்மணர்கள் அல்ல; அவருக்கு என் கையாலேயே சமைத்துப்போட முடியவில்லையே என்ற பெருங்குறை.

'அவர் அறிவுக்கடல் அனையார். நானோ ஒரு சாதாரணப் பெண் ஜன்மம். நான் புரியும் குரு சேவையைப் பார்த்து என் கணவர் உள்ளூற மகிழ்வார். நான் அவரிடம் சாத்திர வசனங்கள் கேட்க உற்சாகம் கொள்வதைக் கண்டு தமக்கு அத்தகைய அறிவு இராது போனாலும், மனைவியாவது புத்திசாலியாக வாய்த்தாளே என்ற பூரிப்பு அவருக்கு.

'இவ்வாறு ஐந்து ஆண்டுகள் எப்படி வந்து போயின என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இப்படி வாழ்வையே கடத்தி

விடலாம். ஆனால் மனதில் எங்கோ ஒரு முள் உறுத்திக்கொண்டே இருந்தது. அது எந்த இடம் என்று எனக்கே தெரியவில்லை; ஆனால் எல்லாம்வல்ல இறைவன் கண்ணுக்கு மட்டும் அது புலப்பட்டது. அப்புறம் ஒரு நாள் ஓரே விநாடியில் எல்லாம் தாறுமாறாகியது.

'பங்குனி மாதம் காலை; குளிப்பதற்காகக் குளத்துக்கு மரம் அடர்ந்த வழியே சென்று உடம்பில் ஈரத் துணி ஒட்டிக்கொள்ள வீடு திரும்பி வந்து கொண்டிருந்தேன். வழியின் ஒரு வளைவில் மாமரத்தின் கீழே குருநாதர் நிற்பதைக் கண்டேன். அவரும், தோள்மீது ஒரு சவுக்கத்தைப் போட்டுக் கொண்டு ஏதோ மந்திரம் முணுமுணுத்தவாறு குளத்தை நோக்கிச் சென்றவர் ஈரத் துணியுடன் இருக்கவே எனக்கு அவர் எதிரே செல்லச் சற்று லஜ்ஜையாக இருந்தது. நான் ஒதுங்கிச் செல்ல முற்படுகையில் அவர் என்னைப் பெயரிட்டு அழைத்தார். நான் திடுக்கிட்டு முகம் தரையை நோக்க நின்றேன். அவர் என்மீது தம் கண்ணைப் பதித்து, "கட்டழகான உடம்பு உனக்கு" என்றார்.

'இலைகள்தோறும் பறவை இனங்கள் தீங்குரல் இசைத்துப் பாடின. வழிநெடுகிலும், புதர்களிலும் செடிகளிலும் மலர்கள் சிரித்தன. மாமரமெல்லாம் இணர் தழைத்திருந்தன. வானகமும் வையகமும் ஏதோ ஓர் இன்ப வெறியில் களியாட்டம் ஆடின. நான் வீட்டுக்கு எப்படித் திரும்பினேனோ, எனக்கு ஞாபகம் இல்லை. அதே ஈரப் புடவையுடன் நேரே பூஜை அறைக்குள் என் கடவுளைக் காணச் சென்றேன். அவர் என் கண்ணில் புலப்படவில்லை. குளத்துக்கரை வழியில் நிழலும் ஒளியும் பின்னிய அந்தக்கோலமே என் கண்ணில் ஆடிக் கொண்டிருந்தது.

'அன்று குருநாதன் போஜனம் கொள்ள வந்தார். "ஆனந்தி எங்கே காணோம்?" என்று விசாரித்தார். என் கணவர் என்னைத் தேடிக் கொண்டு வந்தார். என்னைக்காணமுடியவில்லை.

'ஓ, என் உலகம் என்று நினைத்தது வேறு உலகாகி விட்டதே? நான் தேடிய அந்தக் கதிரவனின் ஒளியை மீண்டும் நான் காணவில்லையே! என் இறைவனைக் கூவி அழைத்தேன். அவர் என் பக்கம் முகத்தைத் திருப்பவே இல்லையே!

'எப்படித்தான் நாட்கள் விரைந்தனவோ, நான் அறியேன். இரவில் என் கணவரைச் சந்திக்க வேண்டுமென்ற அவா. எல்லாம் மௌனமாகவும் இருள் சூழ்ந்தும் இருந்தது. என் கணவரின் மனம் தாரகைபோல் ஒளிரும். இருளில் அவருடைய குரல் ஒவ்வொரு சமயம் என் செவியில் விழும்போது, அந்த வெள்ளை மனம் படைத்தவர் எல்லாவற்றையும் புரிந்து கொள்வதுபோல், இதையும் எளிதில் புரிந்து கொண்டாரோ என்று நினைப்பேன். வீட்டுக் காரியங்களை முடித்துக் கொண்டு வரச் சற்று நாழிகை ஆகும். எனக்காக அவர் தம் படுக்கையில் காத்திருப்பார். அப்போது குருநாதனைப்பற்றி ஏதாவது பேச்சு வரும்.

'ஒரு நாள் இரவு வெகு நேரமாகியிருக்கும். மூன்றும் யாமம் முடியும் தறுவாய்; நான் உள்ளே வந்து பார்க்கையில் அவர் இன்னும் படுக்கைக்கே போகவில்லை. தரையிலேயே படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். நான் ஓசைப்படாமல் வந்து அவர் காலடியில் படுத்தேன். தூக்கக் கலக்கத்தில் அவர் என்மீது காலைத் தொப்பெனப் போட்டார். அது என் மார்பில் நன்றாக உறைத்தது. அதுவே அவர் எனக்குத் தரும் இறுதியான பரிசு என ஏற்றுக் கொண்டேன். என் கணவருடைய பாதத்தில் தலையை வைத்து வணங்கினேன். அவர் சட்டென விழித்தெழுந்து என்னையே ஆச்சரியத்துடன் நோக்கினார்.

அவரைப் பார்த்து, "இனி இந்த ஸம்ஸார வாழ்வு எனக்கு வேண்டாம்" என்றேன்.

இதென்ன கனவில்தான் இப்படி நடக்கிறதோ என்று என் கணவர் ஒன்றும் பேசாமல் விழித்தார்.

'இதோ ஆணையிட்டுச் சொல்கிறேன். நீங்கள் வேறு பெண்ணை மணந்து கொள்ளுங்கள். நான் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்றேன் நான்.

"நீ பேசுவதே எனக்குப் புரியவில்லை. உன்னை யார் ஸம்ஸார வாழ்வைத் துறக்கச் சொன்னார்கள்?" என்றார் அவர்.

"குருநாதன்தான்" என்றேன்.

என் கணவர் திடுக்கிட்டார்: "குருநாதனா! அந்தமாதிரி அவர் எப்பொழுது சொன்னார்?"

"இன்று காலை நான் நீராடிவிட்டுத் திரும்பி வருகையில் என்னை வழியில் கண்டபோது சொன்னார்" என்றேன். என் கணவருடைய குரலில் நடுக்கம் தென்பட்டது.

"இப்படி ஏன் அவர் கட்டளை இட்டார்?"

"எனக்குத் தெரியாது. அவரையே கேளுங்கள். உங்களுக்குப் புரியும்படி சொல்லுவார்" என்றேன்.

"ஸம்ஸார வாழ்க்கையில் இருந்தபடியே துறவு மார்க்கத்தை அனுஷ்டிக்கலாமே... நான் என் குருவைக் கண்டு அதைப்பற்றி விளக்குகிறேன்" என்றார் என் கணவர்.

"குருநாதனுக்குப் புரியலாம்; ஆனால் என் மனம் இந்த விளக்கத்தை ஏற்காது. என்னுடைய இல்லற வாழ்வு இத்துடன் முடிவுற்றது" என்றேன். என் கணவர் ஒன்றுமே பேசவில்லை. கிழக்கு வெளுத்து வந்தது. அப்போது அவர், 'வா, நாம் இருவரும் அவரிடம் போய் இதைத் தெரிந்து கொள்வோம்' என்றார்.

நான் கைகுவித்து "நான் அவரைப் பார்க்க மாட்டேன்" என்றேன். கணவர் என் முகத்தையே உற்று நோக்கினார். நான் முகத்தைத் தாழ்த்திக் கொண்டேன். அதற்கு மேல் அவர் பேசவில்லை. என் உள்ளத்தை அவர் ஒருவாறு புரிந்து கொண்டார் என்பது எனக்குத் தெளிவாயிற்று.

'உலகில் இருவரே எல்லாவற்றையும்விட என்மீது உண்மையான அன்பு கொண்டிருந்தவர்கள். என் பிள்ளையும் என் கணவருமே. அந்த அரிய அன்பே என்னுடைய நாராயணன். அதனால்தான் அவர் பொய்மையைச் சகிக்கவில்லை. ஒருவன் என்னை விட்டகன்றான்; ஒருவரை நான் விட்டு அகல்கிறேன். இப்போது நான் சத்தியத்தைத் தேடி அலைகிறேன், பொய் மானையன்று.'

இதைக் கூறி முடித்ததும் போஷ்டமி என் காலடியில் விழுந்து வணங்கினாள்.


Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10
Managing Editor: T. Sadasivam

கவர்ச்சியுள்ள அழகான

கான்கிரீட் வீடுகளை


ஏசிசி அல்லது **சங்கர்** பிராண்டு ஸிமெண்ட்

கொண்டு கட்டுங்கள்



கான்கிரீட் சுவர்கள், கான்கிரீட் தளம் மற்றும் கான்கிரீட் கூரைகளால் ஆன வீடே பக்காவாக அமைந்த வீட்டிற்குள்ள முக்கிய மூன்று அம்சங்கள் கொண்டவையாகும். முதல அம்சம் சிக்கனம்: அதாவது முதலீடு செலவு மிதமானதே, தவிர பராமரிப்புச் செலவும் குறைவு. தீ விபத்தின்றிப் பாதுகாப்பு: காரணம் கான்கிரீட் எரியாது. உறுதியானது: ஏனெனில் கான்கிரீட்டின் மூல குணமே வலுமையாகும்.

நிலைத்திருக்கும் ஆக்க வேலைக்கு ஏசிசி அல்லது சங்கர் பிராண்டு ஸிமெண்ட் உபயோகியுங்கள். இவை கண்ட்ரோல் விலையில் ஏராளமாகக் கிடைக்கின்றன.



* உங்கள் கட்டிட பிரச்னைகளைத் தீர்க்க எங்கள் இலவச யோசனைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: தி கான்கிரீட் அசோஸியேஷன் ஆப் இந்தியா, 9, மவுண்ட் ரோடு, மதராஸ்.

ACC | I C

தி ஸிமெண்ட் மார்க்கெடிங் கம்பெனி ஆப் இந்தியா பிரை. லிட்.
தி அஸோஸியேடெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

SISTA'S-CMI-320-TAM

REGISTERED No. M. 1392
Registered as a Newspaper in Ceylon

